விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 புரட்டாதி 06 புதன்கிழமை (23.09.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 278

WESTERN UNION
MONEY TRANSFER
உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :- 021 222 5392

# வடக்கு மாகாண சபையில் ஆளும் கட்சியினர் மோதல்


# இரு அணிகளாகப் பிரிந்து

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணசபையின் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் தமக்கிடையே மோதிக் கொண்டதால் சபை நடவடிக்கைகள் நேற்று பாதிப்படைந்தன. நீண்ட நாட்களாக நிலவி வந்த பனிப்போர் நேற்றைய தினம் கடுமையாகியதாலேயே சபை நடவடிக்கைகள் பாதிப்படைந்தன. முதலமைச்சர் தலைமையில் ஒரு அணியும், அவைத் தலைவர் தலைமையில் ஒரு அணியும் என பிரிந்து இரு அணிகளும் நேற்று மோதிக் கொண்டன. இதனை எதிர்க்கட்சியினர் அமைதியாக இருந்து பார்த்து இரசித்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

24ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதி இன்று நியூயோர்க் பயணம்



(கொழும்பு)

ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி

24ஆம் பக்கம் பார்க்க....

## யாழ்.செயலகம் வரை அறவழிப் பேரணி

(யாழ்ப்பாணம்)

இந்தியமீனவர்களின் இழுவைப் படகுகளின் அத்துமீறல்களையும் அடாவடித்தனங்களையும் தடுத்து நிறுத்தக் கோரி இன்று காலை 7 மணியளவில் யாழ்.மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்திலிருந்து யாழ்.மாவட்ட செயலகம் வரை அறவழிப் பேரணி நடைபெறவுள்ளது.

24ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நா விசாரணை அறிக்கையை அரசு ஏற்றுக் கொள்ளக் கூடாது

### முன்னாள் ஜனாதிபதி மகிந்த காட்டம்

(கொழும்பு)

சுயமரியாதையுடைய எந்தவொரு நாடும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் விசாரணை அறிக்கையை ஏற்றுக்கொள்ளாது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப பேரவையினால் இலங்கை தொடர்பில் வெளியிட்டுள்ள விசாரணை அறிக்கை தொடர்பில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் விசாரணைகளுக்கு தமது அரசாங்கம் எந்த வகையிலும் ஒத்துழைப்பு வழங்காது.

மனித உரிமை ஆணைக்குழு சுயாதீனமானது என்பதே சந்தேகத்திற்குரியது. எனவே சுய கௌரவம்

24ஆம் பக்கம் பார்க்க....



## 400 குற்றவாளிகளின் பெயர்கள் ஐ.நாவின் இறுதி அறிக்கையில்?

(கொழும்பு)

இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் இறுதி அறிக்கையில் 400 இராணுவத்தினரின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக பரபரப்புத் தகவல் வெளியாகியுள்ளது.

தேசிய சுதந்திர முன்னணி தலைவர் விமல் வீரவன்சவுக்கு நெருக்கமான இணையத்தளங்கள் இது தொடர்பான செய்தியொன்றை பிரசுரித்துள்ளன.


குறித்த செய்தியில் தொடர்ந்தும தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் இறுதிக்கட்ட போரில் பங்கேற்ற சுமார் 400 இராணுவத்தினரின் பெயர்கள் போர்க்குற்றவாளிகளாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணைய இறுதி அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் ஆணையம் மேற்கொண்ட விசாரணையின் போது தகவல்களை வழங்கிய 6 ஆயிரம் பேரின் சாட்சியங்களின் அடிப்படையில் இந்த அறிக்கை

24ஆம் பக்கம் பார்க்க....

## 5 ஆண்டு அபிவிருத்தி குறித்து கச்சேரியில் நேற்று மாநாடு



(யாழப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் 5 ஆண்டு அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 55 ஆயிரம் மில்லியன் ரூபாய் நிதிக்குரிய வேலைத்திட்டங்கள் நேற்றைய தினம் யாழ் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற அபிவிருத்தி திடடம் தொடர்பான கலந்துரையாடலில் ஆராயப்பட்டுள்ளன.

அவற்றில் முன்னுரிமைத் திட்டங்களை

24ஆம் பக்கம் பார்க்க....

## சுன்னாகத்தில் பொலிஸ் குவிப்பு ரௌடிகளை தேடி வலைவீச்சு!

### மேல்நீதிமன்ற உத்தரவையடுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தின் அதிரடி உத்தரவையடுத்து, சுன்னாகம் பிரதேசத்தில் விசேட அதிரடிப்படை பொலிஸார் கடமையில ஈடுபடுத்தப்பட்டு அங்கு தெருச்சண்டித்தனத்திலும், வாள் வெட்டு ரௌடிததனத்திலும் ஈடுபடும் கும்பல்களையும் மற்றும் தேடப்படுபவர்களையும கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக யாழ் மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ஏ.எம்.பெரேரா தெரிவித்துள்ளார்.


சுன்னாகம் நகரில் கடையொன்றுக்குள் புகுந்த 9 பேர் அடங்கிய ரௌடிக் கும்பல் ஒன்று கடந்த ஞாயிறன்று இருவரை வெட்டிப் படுகாயப்படுத்தியதுடன், கடையையும் அடித்து நொறுக்கிவிட்டுத் தப்பிச் சென்றதையடுத்து, அந்தப் பகுதியில ரௌடிகளின் நடவடிக்கைகளை விசேட அதிரடிப்படையைக் கொண்டு கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன், வட பிராந்திய பிரதி பொலிஸ் மா அதிபர லலித் ஜயசிங்கவை நீதிமன்றத்துக்கு அழைத்து, அதற்கான உத்தரவை நேரடியாகத் கடந்த திங்கட்கிழமை கையளித்திருந்தார்.

இந்த நீதிமன்ற உத்தரவை திங்கட்கிழமை பிற்பகல் தொடக்கம் நடைமுறைப்படுத்துவதற்காக விசேட அதிரடிப்படையினர் அழைக்கப்பட்டு ரௌடிக் கும்பல்களைச்

24ஆம் பக்கம் பார்க்க....

# நீதிமன்ற விசாரணைகள் மூலமே படுகொலையை கண்டறிய முடியும்

## ஐ.நா.பேச்சாளர் தெரிவிப்பு



(கொழும்பு) இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றதா என்பதை மேலதிக நீதி மன்ற விசாரணைகள் மூலம் கண்டறிய முடியும் என்பதை ஐ.நா அறிக்கை நிராகரிக்கவில்லை. ஆனால் ஐ.நா மனித வுரிமைகள் பேரவையின் அறிக்கையைப் பொறுத்த வரை, இனப்படு கொலை என்பதை சில வரையறைகளுக்கு உட்பட்டே எம்மால் கூறமுடியும். ஆனால் எம்மால் சேகரிக்க முடிந்த தகவல்களின் அடிப்படையில் இனப்படுகொலை இடம்பெற்றதற்கான வரையறைகளை நாம் கண்டறிய வில்லை.

இவ்வாறு ஐ.நா மனிதவுரிமைகள் பேரவையின் உத்தியோகபூர்வ பேச்சாளர் ரவீனா சம்தாசினி தெரிவித்துள்ளார். இது தொடர்பில் இந்து நாளிதழ் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் வடமாகாண சபை நிறைவேற்றிய தீர்மானத்தில், இலங்கையில் காலங்காலமாக ஆட்சி செய்துவரும் சிங்கள அரசுகள், திட்டமிட்ட ரீதியில் தமிழ் மக்கள் மீது இனப்படுகொலையை மேற்கொண்டுவருவதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

மேலும், இலங்கையில் திட்டமிட்ட இனப்படுகொலை இடம்பெற்றதாக பல்வேறு சுயாதீன அமைப்புகள் குற்றம் சாட்டிவரும் நிலையில், ஐ.நா அறிக்கை இது தொடர்பில் அமைதி காத்துள்ளமை குறித்து எழுந்துள்ள விமர்சனங்களுக்கு பதிலளிக்கும் விதமாகவே ஐ.நா மனித வுரிமைகள் அமைப்பின் பேச்சாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பான ஒரு பரந்துபட்ட விசாரணையை நாம் நடத்தினோம்.

இது தொடர்பாக எமக்குக் கிடைக்கப்பெற்ற 3000 வரையான எழுத்துமூல ஆவணங்கள், 11 நாடுகளில் நடத்தப்பட்ட நேர்காணல்கள், புகைப்படங்கள், காணொளிகள் மற்றும் துறைசார் நிபுணர்களால் ஆய்வுசெய்யப்பட்ட செயற்கைக்கோள் புகைப்படங்கள் என பல்வேறு ஆவணங்களின் துணையுடனேயே ஐ.நா விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஐ.நா.விசாரணைகளில் சாட்சியமளித்தவர்களின் விபரங்கள் தொடர்பில் இரகசியங்கள் பேணப்பட்டுவரும் நிலையில் ஐ.நாவின் போர மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கு அடிப்படை ஆதாரமாக முன்வைக்கப்பட்டுள்ள சாட்சியங்களின் இரகசிய தன்மை குறித்து முன்னாள் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் விமர்சனங்களை முன்வைத்துள்ளார்.

அறிக்கையின் அடிப்படையான வெளிப்படைத் தன்மை குறித்தும் அவர் கருத்துகளை முன்வைத்துள்ளார்.

இந்நிலையில், இனப்படுகொலை குறித்த கேள்விகளுக்கான பதில்கள் நடைபெறவுள்ள குற்றப் புலனாய்வு விசாரணைகள் மற்றும் ஐ.நா பரிந்துரைகளான கலப்பு நீதிமன்ற விசாரணைகளின் மூலமே கண்டறியப்பட வேண்டும் என ஐ.நா மனித வுரிமைகள் பேரவையின் உத்தியோகபூர்வ பேச்சாளர் ரவீனா சம்தாசினி தெரிவித்துள்ளார் என இந்து பத்திரிகை தனது செய்தியில் தெரிவித்துள்ளது. (ஏ-12)


### வீடு வாடகைக்கு

கொக்குவில் மேற்கு, ஆனைக்கோட்டை, பொன்னையா ஒழுங்கையில் 3 பேர் கொண்ட சிறிய குடும்பத்துக்கு சகல வசதிகளும் கொண்ட தனி வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 07776 56918

(1861)



### சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து). பழைய பொருட்கள் விற்பனை

மேற்படி சங்கத்தில் உள்ள பழைய பொருட்கள் அனைத்தும் எதிர் வரும் 28.09.2015-ம் திகதி திங்கட்கிழமை காலை 11.00 மணியளவில் ஏலத்தில் விற்பனை செய்யப்படவிருப்பதால், இப் பொருட்களை கொள்வனவு செய்யவிரும்புவோர் காரியாலய நேரத்தில் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை பார்வையிடலாம். அத்துடன் அன்றைய தினமே உடன் முழுப் பணத்தையும் செலுத்தி பொருட்களை வெளியேற்றுமாறும் தெரியப் படுத்துகின்றேன்.

பொருட்கள் விபரம்
01. இரும்புக் கதிரை
02. ஓடு
03. வெல்ல உபகரணங்கள்
04 தகரங்கள்

சங்கானை ப.தெ.வ.அ/தி கூ/வு சங்கம் (வ-து)
தலைவர்

(1863)



### அந்தியேட்டி வீட்டுக் கிருத்திக அழைப்பும் நன்றி நவிலலும்

**அமரர் பெருமாள் விஜயன்**

மடியில் 03 • 04 • 1964



மண்ணில் 25 • 09 • 2015

கடந்த 25.08.2015 இறைவன் அடிசேர்ந்த எங்கள் அன்புத் தெய்வம் பெருமாள் விஜயன் அவர்களின் வீட்டுக்கிருத்திக கிரியைகள் நாளை (24.09.2015) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

மேலும் அன்னாரின் இறுதிக்கிரியையின் போது நேரிலும், பலவழிகளிலும் துயர் பகிர்ந்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

343, ஜெயந்தி நகர்,
கிளிநொச்சி.

அம்மா, சகோதரர்களும்,
குடும்பத்தினரும்.

(C-2278)



### பாராட்டி வாழ்த்துகிறோம்



திருமதி
**இ.ரவீந்திரநாதன்**
அதிபர், கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம்

கிளிநொச்சி மாவட்டத்தில் பணியாற்றி இலங்கை அதிபர் சேவை தரம் I இல் பதவி உயர்வு பெற்ற எமது அதிபர் சங்க அங்கத்தவர்

திருமதி இ.ரவீந்திரநாதன் அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: கிளிநொச்சி மாவட்ட அதிபர்கள் சங்கம்,
கிளிநொச்சி.

(C-2277)



### பல்லோரும் பணிந்து ஏற்ற பரமனடி வாழ்வார்



செந்தண்மை சூழ்தொழுதும் அந்தணராய், எளியவராய் எல்லோருக்கும் இனியவராய், ஞானதானம் வழங்கும் வள்ளலாய் விளங்கி மறைந்தவர்தான் சைவத்தமிழ் உலகின் வணக்கத்துக்குரிய கலாநிதி

**க.வைத்தீஸ்வரக் குருக்கள் ஐயா**
அவர்கள்.

திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார் என்பது ஆன்றோர் வாக்கு. அப்படிப்பட்ட வாசகத்தையே வாழ்வின் மூச்சாய், உயிராய்க்கொண்டு வாழ்ந்தவர் ஐயா அவர்கள். இறுதி மூச்சு பிரியும் போது கூட வாசகரின் வாசகத்தை செவிமடுத்தபடியே வானுலகம் சென்றார்.

அழிவில்லாத ஆன்மாவை தாங்கிய உடல் நீங்க ஆன்மா வேறு பிறப்பெடுப்பதே வழமை. ஆனால் குருக்கள் ஐயாவின் ஆன்மாவோ வேறொரு கருப்புகா நிலையில் தில்லைக் கூத்தன் திருவடியில் நிலைத்திருக்கும் என்று நம்பலாம்.

சிவபுராணத்தின் இறுதி வாக்கியம் : **சொல்லிய வாக்கின் பொருள் உணர்ந்து சொல்லுவார் பல்லோரும் ஏற்றிப்பணிய சிவபுரத்தில் உள்ளார் சிவனடிக் கீழ் செல்வர்** என்பதாகும்.

இதன்படி ஐயா அவர்கள் சிவபுரத்தில் உள்ள சிவனடிகீழ் நித்திய பரிபூரண பேரானந்தப் பெருவாழ்வில் திகழ்வார் என்பது திண்ணம்.

அன்புள்ள : க.கு.க.சிவபாலன்
அடியார்க்கு அமுதூட்டும் அண்ணலார், போசகர் மாணிக்கவாசர் மடாலயம்
அன்னதான சபை ஈழத்துச் சிதம்பரம் - காரைநகர்.

(C-2274)



### பகிரங்க ஏல விற்பனை

எமது பாடசாலை வளாகத்தில் பாவனைக்குதவாத பின்வரும் பொருட்கள் எதிர்வரும் 28.09.2015 திங்கட்கிழமை அன்று பி.ப. 1.00 மணிக்கு பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படவுள்ளது. விரும்பியவர்கள் வந்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

1. இரும்புக் கதிரை - 2
2. இரும்பு மேசை - 2
3. இரும்பு கதிரை பெரிது - 2
4. விஞ்ஞான மேசை - 1
5. கரும்பலகை தாங்கி - 2
6. ஆசிரியர் மேசை - 1
7. ஆசிரியர் கதிரை - 1

அதிபர்
யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை, அச்சுவேலி.

(1864)



### பாராட்டி வாழ்த்துகிறோம்



திரு.
**ஐ.குகானந்தராசா**
(SLPS I)
[கோட்டக்கல்விப் பணிப்பாளர், பளை]

கிளிநொச்சி மாவட்டத்தில் அதிபராக பணியாற்றி தற்போது பளை கோட்டக்கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்ற

திரு.ஐ.குகானந்தராசா அவர்களை பாராட்டி வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்: கிளிநொச்சி மாவட்ட அதிபர்கள் சங்கம்,
கிளிநொச்சி.

(C-2276)

## இசை நிகழ்ச்சியில் ஐந்து பிக்குகள் கஞ்சாவுடன் கைது

நாவின்ன பகுதியில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சியொன்றில் கஞ்சாவுடன் ஐந்து பிக்குகள் மஹரகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். சிவில் உடையில் இருந்த 21 தொடக்கம் 26 வயதுடைய பிக்கு களே இவ்வாறு கைது செய்யப்பட்டு ள்ளனர்.

சந்தேகத்திற்கிடமாக நடமாடிய குறித்த நபர்களை அணுகிய மஹரகம பொலிஸார் குறித்த நபர்களிடம் இருந்து இரு கஞ்சா பக்கற்றுக்களை கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபர்களை கன்கொடவில நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியுள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆளுங்கட்சியுடன் இணைவு

கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இருவர் ஆளுங்கட்சியுடன் இணைந்துள்ளனர்.

கிழக்கு மாகாண சபையின் மாதாந்த அமர்வு நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதன் போதே எதிர்க்கட்சி உறுப்பினர்களான எம்.எல்.ஏ.அமீர் மற்றும் கே.புஸ்பகுமார ஆகியோர் ஆளுங்கட்சியுடன் இணைந்து கொண்டுள்ளனர். இந்நிலையில், தற்போது கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சார்பில் 5 பேர் மாத்திரமே அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சர்வதேச விசாரணையை கோரி தமிழகம் முழுவதும் போராட்டம்

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி தலைவர் சரத்குமார் அறிவிப்பு

(சென்னை)

**இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தி தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ளதாக அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி தலைவர் ஆர்.சரத்குமார் தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை மீதான போர்க்குற்றங்களை விசாரிக்க சர்வதேச விசாரணை தேவை எனவும் அதற்கு மத்திய அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தமிழ்நாடு சட்டமன்றத்தில் கொண்டுவந்த தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு இருக்கிறது.

தமிழ் மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு மத்திய அரசு அமெரிக்கா கொண்டு வர இருக்கிற தீர்மானத்தை எதிர்க்க வேண்டும். மனித உரிமை மீறல் குற்றங்களை புரிந்த இலங்கை அரசு தனக்குத் தானே நீதி விசாரணை நடத்திக்கொள்ள முடியாது. அது நேர்மையாகவும் இருக்காது.

எனவே, சர்வதேச விசாரணை தேவை என்று, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் தெரிவித்துள்ளதை இந்தியா வரவேற்று, இதே கருத்தை வலியுறுத்துமாறு ஐ.நா. உறுப்பு நாடுகளிடம் ஆதரவும் திரட்ட வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தி எதிர்வரும் 29 ஆம் திகதி காலை 11 மணிக்கு சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சஜின்வாஸ் குணவர்த்தனவுக்கு மீண்டும் விளக்கமறியல் நீடிப்பு

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்த்தன எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு கோட்டை நீதவான் பிரயந்த லியனகேவினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்கத்தில் ஜனாதிபதி செயலகத்துக்கு சொந்தமான வாகனங்களை சட்ட விரோதமான முறையில் பயன்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்த்தன நேற்று மீண்டும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதன்போதே நீதவானால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## சர்வதேச விசாரணையை வலியுறுத்தி ஜி.கே.வாசன் உண்ணாவிரதப் போர்

(கொழும்பு)

இலங்கை மீது சர்வதேச போர்க்குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி சென்னை வள்ளுவர் கோட்டம் அருகே எதிர்வரும் 26 ஆம் திகதி உண்ணாவிரதம் மேற்கொள்ள உள்ளதாக தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜி.கே. வாசன் தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கை போர்க்குற்றம் தொடர்பாக சர்வதேச விசாரணை நடத்தக் கோரியும், இந்த விசாரணைக்கு இலங்கை அரசு ஒத்துழைப்பு தர மத்திய அரசு வலியுறுத்த வேண்டும் என்ற கோரிக்கைகளுடன் இவ் உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஜேர்மன் வெளிவிவகார அமைச்சர் வோல்ட்டர் இலங்கைக்கு வருகை



உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஜேர்மனியின் வெளிவிவகார அமைச்சர் பிராங்க் வோல்ட்டர் ஸ்டெய்ன்மியர் நேற்றுக்காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

## ஐ.நா.பொதுச்சபை கூட்டத்தில் பங்கேற்கும் குழுவில் இணைந்து கொள்ளுமாறு மஹிந்தவுக்கும் அழைப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்கும் இலங்கைப் பிரதிநிதிகள் குழுவில் இணைந்து கொள்ளுமாறு அமைச்சர் மஹிந்த சமரசிங்கவிற்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மாத இறுதியில் அமெரிக்காவின் நியூயோர்க்கில் ஐக்கிய நாடுகள் அமைப்பின்பொதுச் சபைக் கூட்டம் ஆரம்பமாகவுள்ளது.

விசேட பிரதிநிதிகள் இன்று அமெரிக்கா புறப்பட்டுச் செல்ல உள்ளனர்.

இந்த அமர்வுகளில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் உரையாற்றவுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன், நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ ஆகியோர் மட்டுமே ஜனாதிபதியுடன் இந்த விஜயத்தில் இணைந்துகொள்வார்கள் என முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தரவிற்கு அமைய மஹிந்த சமரசிங்கவும் இந்த விஜயத்தில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளார்.

கடந்த காலங்களில் பெரும் எண்ணிக்கையிலான பிரதிநிதிகள் ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்பது வழமை என்ற போதிலும் பண விரயத்தை கருத்திற் கொண்டு இம்முறை பிரதிநிதிகளின் எண்ணிக்கை மிகக் கணிசமான அளவு வரையறுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

## முன்னாள் பிரதி அமைச்சர் பிரேம்லாலுக்கு பிணை மறுப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் காவத்தையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூடு, கொலை தொடர்பான வழக்கில் முன்னாள் பிரதியமைச்சர் பிரேம்லால் ஜெயசேகர உட்பட இருவருக்கு பிணை வழங்க உயர் நீதிமன்றம் மறுத்துள்ளது.

இதேவேளை காவத்தை பிரதேச சபையின் முன்னாள் தலைவர் வஜிர தர்ஜன த சில்வா நிவித்திகல பிரதேச சபையின் முன்னாள் உப தலைவர் அசங்க நாமல் பெலவத்த ஆகியோருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரத்தினபுரி உயர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நீதிபதி வசந்த ஜினதாஸ முன்னிலையில் இடம்பெற்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது காவத்தை நகரில் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களுக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆதரவாளர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர் ஒருவர் உயிரிழந்ததோடு இருவர் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் சந்தேக நபர்களாக பிரதியமைச்சர் பிரேம்லால் உட்பட 6 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இந்த வழக்கு விசாரணையில் முன்னாள் பிரதியமைச்சர் பிரேம்லால் ஜயசேகர, சப்ரகமுவ மாகாண சபை உறுப்பினர் நிலந்த ஜயகொடி, அஜித் மலவி குணரத்ன ஆகியோரின் பிணை மனு நிராகரிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ரயிலில் ஏற முற்பட்ட 25 வயது யுவதி பலி

(கொழும்பு)

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் புகையிரதத்தில் ஏற முற்பட்ட வேளை தவறிவிழுந்து விபத்துக்குள்ளானதில் இள வயது யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு கோட்டையிலிருந்து சிலாபம் நோக்கி புறப்பட இருந்த புகையிரதத்தில் ஏற முற்பட்ட வேளையே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த யுவதி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

25 வயதுடைய ராகமை பிரதேசத்தை சேர்ந்த யுவதி ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (இ-7)

## டென்மார்க் மேற்கு பிராந்திய உயர்நீதிமன்ற ஜூரர் சபைக்கு இலங்கைத் தமிழர் நியமனம்

(கொழும்பு)

டென்மார்க் நாட்டின் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் நற்பெயருக்கு மகுடம் சூட்டும் வகையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தர்மா தர்மகுலசிங்கம் வெஸ்ட் லேண்ட் நீதிமன்றத்தின் ஜூரர்கள் சபைக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

டென்மார்க்கின் மிகப்பெரிய வழக்குகளை விசாரிக்கும் மன்றாக வெஸ்ட் லேண்ட் நீதிமன்றம் திகழ்கின்றது. இங்கு தமிழர் ஒருவர் ஜூரர் பதவிக்கு நியமிக்கப்பட்டிருப்பது முதல் தடவையாகும்.

சுமார் 31 ஆண்டுகளாக டென்மார்க் வயன் நகரத்தில் வாழ்ந்து வரும் தர்மா தர்மகுலசிங்கம் கடந்த 12 ஆண்டுகளாக மாவட்ட நீதிமன்ற ஜூரர் பதவி வகித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

டென்மார்க் நாட்டின் அரசியல், சமுதாயம், கலை, இலக்கியம், மனித உரிமைகள் என்று பல்துறைகளிலும் கால்பதித்து அந்நாட்டு புலம்பெயர்ந்தோர் வரலாற்றில் பல காத்திரமான சாதனைகளை படைத்துள்ளார். அது மாத்திரமன்றி, டென்மார்க் சோசலிச ஜனநாயகக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினராகவும் செயற்படுகின்றார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்ற கால கட்டத்தில் டென்மார்க், வயன் நகர கலை, இலக்கிய மன்றத்தின் சமாதானத் தூதுக்குழு தர்மா தர்மகுலசிங்கம் தலைமையில் இலங்கைக்கு விஜயத்தை மேற்கொண்டிருந்தது.

இத்தூதுக் குழுவினர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட முக்கிய தலைவர்களை சந்தித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ரொனால்டோவை அழைத்து வந்த சிரிய அகதியின் மகன்



சிரியாவில் உள்நாட்டு போர் நடந்து வருவதால் ஏராளமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் ஐரோப்பிய நாடு களுக்கு புலம்பெயர்ந்து வருகின்றனர்.

இந்நிலையில், சிரியாவில் இருந்து ஹங்கேரிக்கு சென்ற அகதிகளைகணக்கெடுக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அப்போது பெண் நிருபர் பெட் ரோலஸ்லா என்பவரால் குழந்தை யுடன் இருந்த ஒசமாஅப்துல் என்ற சிரிய அகதி காலை இடறி கீழே வீழ்வைக்கப்பட்டார். இந்த வீடியோ தொலைகாட்சிகளில் ஒளிபரப்பாகி பரபரப்பை ஏற்படுத்தியது.

பெண் நிருபர் பெட்ரோலஸ்லா வின் இந்தச் செயலுக்கு கடும் கண்டங்கள் எழுந்தன. இதைத் தொடர்ந்து பெட்ரோலஸ்லாவை பணிநீக்கம்செய்ததாக அவர்வேலை பார்த்த நிறுவனம் அறிவித்தது.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட ஒசமா அப்துல் சிரிய நாட்டை சேர்ந்த புகழ்பெற்ற கால்பந்து அணிகளுக்கு பயிற்சியாளராக இருந்தவர் என்று தெரியவந்தது.

இதனையடுத்து ஸ்பெயின் தலைநகர் மாட்ரிட் நகரில் உள்ள கெனாஃபே கால்பந்து அக்கடமி அவருக்கு கால்பந்து பயிற்சியாளர் பணியளிக்க முன்வந்தது.

இதைத் தொடர்ந்து ஒசமா அப்துல் கடந்த புதன்கிழமை தனது மகன்கள் சையத், அகமது ஆகியோருடன் ஸ்பெயின் தலை நகர் மாட்ரிட்டுக்கு வந்தார்.

அவருக்கும் மாட்ரிட் புறந கரான கெடாஃபேவில் அடுக்கு மாடி குடியிருப்பு ஒன்றும் வசிப் பதற்காக வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கடந்த சனிக் கிழமை ஸ்பானீஷ் லீக் தொடரில் ரியல் மாட்ரிட் - கிரனடா அணி கள் மோதின.

இதில் கால்பந்து வீரர்களை மைதானத்துக்கு அழைத்து வரும் குழந்தைகளில் ஒசாமா அப்துல்



மகன் சையதும் இடம்பெற்றிருந் தார்.

அவன் பிரபல கால்பந்து வீரர் ரொனால்டோவின் கரம்பற்றி மைதானத்துக்குள் அழைத்து வந்தான். (க)

## பெடரர் 17 கிராண்ட்ஸ்லாம் வென்றாரா? கோமாவிலிருந்து மீண்ட ரசிகர் அதிர்ச்சி



டெனிஸ் வீரர் ரோஜர் பெடர ரின் தீவிர ரசிகர் ஒருவர் 11 ஆண்டு கள் கோமாவிலிருந்து விழித்த போது, பெடரர் 17 கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் வென்றதை கேள்விப் பட்டு அதிர்ச்சியில் உறைந்து போனார்.

ஸ்பெயின் செவில்லி நகரத்தை சேர்ந்தவர் ஜீசஸ் அப்ரிசியோ. 2004ஆம் ஆண்டு தனது 18ஆவது வயதில் ஒரு கார் விபத்தில் சிக்கி கோமா நிலைக்குச் சென்றார். இந்நிலையில் கடந்த ஓகஸ்ட் 27ஆம் திகதி திடீரென கோமா விலிருந்து அவருக்கு சுயநினைவு திரும்பியது.

டெனிஸ் வீரர் ரோஜர் பெடர ரின் தீவிர ரசிகர் என்பதால் அவ ரைப்பற்றி கேட்டுள்ளார்.

அவரது குடும்பத்தினரும், பெடரர 17 கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் வென்றதையும், தற்போதும் விளை யாடிவரும் அவர், உலக தரவரி சையில் 2ஆவது இடத்தில் இருப்ப தையும் கூறியுள்ளனர்.

இதைக் கேட்ட ஜீசஸ் அப்ரி சியோ அதிர்ச்சியில் உறைந்து போனார். அவர் கோமா நிலையில் இருந்தபோது பெடரர் நான்கு கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் மட்டுமே வென்றிருந்தார்.

பெடரர் டெனிஸிலிருந்து ஓய்வு பெற்றிருப்பார் என நினைத்த ஜீசஸ் அப்ரிசியோக்கு இந்த செய்தி நம்ப முடியாததாக இருந்துள்ளது.

மேலும் அவர் பெடரர் விளை யாடுவதை பார்க்க ஆர்வமாக உள்ள தாகவும் தெரிவித்துள்ளார். (க)

## மட்டுவில் மோகனதாஸ் வி.கழகம் கரபந்தாட்ட இறுதிப் போட்டி இன்று

மட்டுவில் மோகனதாஸ் விளை யாட்டுக்கழகம் நடத்தும் கரபந்தாட் டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று புதன்கிழமை இரவு 7 மணியளவில் மின்னொளியில் மோகனதாஸ் விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெறவுள் ளது.

A பிரிவுக்கான இறுதிப் போட்டி யில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இளவாலை மத்திய விளையாட்டுக் கழகமும்,

B பிரிவுக்கான இறுதிப் போட்டி யில் அச்சுவேலி தோப்பு வாலிபர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாயன்மார்க்கட்டு பாரதி விளை யாட்டுக் கழகம் மோதவுள்ளது. (க)

## ஓய்வு நேரத்தை குடும்பத்தினருடன் செலவிடும் சண்டிமல், பிரசாத்



சமீபத்தில் இலங்கைக்கு சுற் றுப்பயணம் மேற்கொண்ட இந் திய அணி டெஸ்ட் தொடரை 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இந்நிலையில் மேற்கிந்திய தீவுகள் அணி அடுத்த மாதம் இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு அந்த அணியுடன் விளையாடுகிறது.

இந்த தொடர் ஒக்டோபர் 8-ம் திகதி தொடங்கி நவம்பர் 12-ம், திகதி வரை நடக்கிறது.

தற்போது ஓய்வில் இருக்கும் இலங்கை வீரர்களான சண்டிமல, தமிக்க பிரசாத், ஹேரத் ஆகி யோர் குடும்பத்தினருடன் நேரத்தை செலவிட்டு வருகின்றனர். (க)

## மனைவியுடன் உலகை சுற்றிவரும் கருணாரத்ன



இலங்கை டெஸ்ட் கிரிக்கெட் அணியின் இளம் வீரர் திமுத் கருணாரத்ன.

இவருக்கு கடந்த ஏப்ரல் மாதம் தான் அனுராதாவுடன் திருமணம் முடிந்தது.

இவர் சமீபத்தில் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியிலும் பங் கேற்றார். தற்போது தனது ஓய்வை வெளிநாடுகளில் கழித்து வருகின் றார்.

இந்தப் படங்களை ரசிகர்களுக் காக இணையத்தில் பகிர்ந்துள் ளார். (க)

## பாகிஸ்தான் சுப்பர் லீக் இருபது-20 தொடரில் கெவின்

பாகிஸ்தான் சூப்பர் லீக் இரு பது- 20 கிரிக்கெட் தொடர் பெப்ர வரி 4-ந் திகதி முதல் 24-ந் திகதி வரை நடைபெற இருக்கிறது.


கட்டாரில் உள்ள டோகாவில் நடைபெறும் இந்த தொடரில் ஐந்து அணிகள் பங்கேற்க இருக்கின்றன. இந்த அணிகளுக்கு இடையே 24 போட்டிகள் நடத்த திட்டமிட்டுள்ளனர்.

அதற்கான தொடக்க விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த விழாவின்போது வீடியோ மெசேஜ் மூலம் இந்த தொடரில் பங்கேற்பதை கெவின் பீட்டர்சன் உறுதிப்படுத்தியுள்ளார்.

இவர் இந்தியாவில் நடைபெற்று வரும் ஐ.பி.எல்., வெஸ்ட் இண்டீசில் நடைபெறும் கரீபியன் லீக் தொடர் ஆகியவற்றில் விளையாடி வருகி றார். தற்போது பாகிஸ்தான் சூப்பர் லீக் தொடரிலும் விளையாட இருக் கிறார்.

இதுகுறித்து பீட்டர்சன் கூறுகை யில், "பெப்ரவரி மாதம் நடக்க இருக்கும் பாகிஸ்தான் சூப்பர் லீக் கில் பங்கேற்க இருக்கிறேன்.

போட்டி தொடங்குவதற்காக நான் காத்திருக்க முடியாது. இது



ஒரு அற்புதமான தொடராக செல்லும். வழக்கமான இருபது-20 தொடர் போல் ஏராளமான ரசிகர்கள், ஏராள மான சிக்சர்கள், ஏராளமான விக் கெட்டு கள் என சிறப்பாக செல்லும். மிக சிறப்பான இந்த தொடரில் பங்கேற்பதால் நான் மகிழ்ச்சி அடைகிறேன். விரைவில் ரசிகர் களாகிய உங்களை சந்திக்கிறேன்" என்று கூறியுள்ளார்.

கெவின் பீட்டர்சனுடன் வெஸ்ட் இண்டீசின் கிறிஸ் ஹெயில், பொல்லார்ட், டுவைன் பிராவோ, சுனில் நரைன் ஆகியோரும் இந்த தொடரில் விளையாடுவதை உறு திப்படுத்தியுள்ளனர். (க)

# மகிந்த மீது போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்த வேண்டும்

## தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கம் வலியுறுத்து

**(கொழும்பு)**

**இலங்கையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீது போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்த வேண்டும் என கோரி தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கத்தினர் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.**



இலங்கையில் தமிழின அழிப்பில் ஈடுபட்ட மகிந்த ராஜபக்ஷ மீது சர்வதேச நீதிமன்றத்தில் விசாரணை நடத்தக் கோரி தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கம் சென்னை, வேலூர், திருவள்ளூர், நாகர்கோவில், கோவை, நெல்லை உள்ளிட்ட மாவட்டங்களில் ஆர்ப்பாட்டங்களை நடத்தியது.

இதில் பங்கேற்ற நூற்றுக்கணக்கான பத்திரிகையாளர்கள், இலங்கையில் நிகழ்ந்த போர்க்குற்றங்களுக்கு காரணமான மகிந்த ராஜபக்ஷவுக்கு சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து தண்டிக்க வேண்டும் என கோஷம் எழுப்பினர்.

சென்னையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் சிறப்புரையாற்றிய சங்கத் தலைவர் தாமோதரன் பிரகாஷ், தமிழினம் அழிக்கப்பட்டதையும், அழிவுக்குள்ளான பொதுமக்கள் அவதிப்பட்டதையும் இதுவரை செய்தியாக மட்டுமே வெளியிட்டு வந்த பத்திரிகையாளர்கள், தற்போது இந்த கொடுமைகளுக்கு எதிராக கொதித்தெழுந்து ஆர்ப்பாட்டம், போராட்டம் என்று செயலில் இறங்கியிருக்கிறோம்.

அமெரிக்க தீர்மானத்தை எதிர்பார்க்காமல் இலங்கை போர்க்குற்றங்களை கண்டித்து இந்திய பாராளுமன்றம் உடனடியாக தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். இல்லையெனில், பத்திரிகையாளர்களின் எழுச்சி, இந்திய அரசியலில் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


# பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ளது

- ★ அலுவலகச் செய்தியாளர்கள் (இருபாலாரும்- உள்ளகம், வெளியகம்)
- ★ கணனி இயக்குநர்கள் மற்றும் பக்கவடிவமைப்பாளர்கள் (பெண்கள்)
- ★ ஒப்புநோக்குநர் (பெண்கள்)
- ★ பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர் (இருபாலாரும்- மும்மொழி அறிவு)

வயது எல்லை 21-45. தகைமையும் அனுபவமுள்ள பொருத்தமானவர்கள் 24.09.2015 வியாழக்கிழமை அன்று முற்பகல் 10 மணிக்கு சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் வலம்புரி அலுவலகத்திற்கு நேரில் வரவும்.

(அண்மையில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

பொது முகாமையாளர்.
இல.3,2 ஆம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.



பொன்விழா
பிறந்ததின வாழ்த்து



திருமதி. மோகனவதனி ரவீந்திரன்
23.09.2015

அன்புள்ளம் கொண்ட அன்னையர்க்கு ஈடாய்
சேவை மனம் கொண்ட அன்னை தெரேசாவாய்
அழியாச் செல்வமதை அளித்திடும் கலைமகளாய்
குலமகள் யாவரிலும் சிறந்தவள் நீயாய்
நம் தலைவன் கரம்பற்றி
பெண்ணியத்தை உயர்த்திட்ட பாரதியின் புதுமகளாய்
வாழ்வுதனை அர்ப்பணித்து இக்காலமும் எக்காலமும்
பொன் விழா என்ன
நூற்றாண்டு விழாவும் கண்டு
அதற்கும் மேலாய் வாழ அம்மா!
கையெடுத்துத் தொழுகின்றோம்
இறைவனின் திருவடியில் உம் சேவையும்
உம் குடும்பமும் சீரும் சிறப்புமாய் வாழ
மழலைகள் நாங்கள் வேண்டியுமை
வாழ்த்துகின்றோம்.
வாழ்க! வாழ்க!! வாழ்க!!!

வாழ்வக மாணவர்கள்

(சி-2273)


# ராசி பலன்

23.09.2015
(புரட்டாதி 06, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு
தசமி முன்னிரவு 7.35மணிவரை
உத்தராடம் பின்னிரவு 3.04 மணிவரை
இராகுகாலம் 12.02-1.32 மணிவரை
சுபநேரம் 4.32-6.02 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>திருவாதிரை<br>காலை 9.33 இற்கு<br>மகரம்-சந்<br>மேல் நோக்கு நாள் | | சுக் |
| | | | குரு<br>செவ்<br>புத |
| சந் | சனி | | ராகு<br>சூரி |

**மேடம்:** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம்,தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் நன்மை தரும்,சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**இடபம்:** மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறலாம்,அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடியலாம்.

**மிதுனம்:** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, யோகங்கள் வந்து சேர யோசித்துச் செயற்பட வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கடகம்:** அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம்,ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள்,தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபாடு காட்டுவீர்கள்.

**சிம்மம்:** போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும்,சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம்,காரிய அனுகூலமுண்டு.

**கன்னி:** உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்,வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்:** வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்குவதில் ஆர்வப்படுவீர்கள்,ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள்,நம்பி வந்தவர்களுக்கு உதவி செய்யும் எண்ணம் உருவாகும்.

**விருச்சிகம்:** உடன்பிறப்புக்கள் உதவி செய்யும் வாய்ப்புண்டு,வெற்றிகரமான தகவல்கள் வந்து சேரலாம்,பாராட்டும் புகழும் கூடும் நாள்,செய்தொழில் மேன்மையுண்டு.

**தனுசு:** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்,நீண்ட நாளைய விருப்பமொன்று கைகூடும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும்,சொத்துக்களால் ஆதாயமுண்டு.

**மகரம்:** வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள்,தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்,போசன சுகமுண்டு.

**கும்பம்:** சொந்த பந்தங்களுக்காக சில செலவுகளைச் செய்ய முன்வருவீர்கள், சிறிய வேலையொன்றிற்காக பலமுறை அலைய நேரிடலாம், தொழிலில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள்.

**மீனம்:** அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியலாம்,நட்பு வட்டம் விரிவடையும்,குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள், உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள்.


# கலாசார நிகழ்வும் ஒன்றுகூடல் நிகழ்வும்

வடமாகாண கல்வி பண்பாட்டுலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் நடத்தப்படும் யாழ். முஸ்லிம் கலாசார நிகழ்வு நாளை 25ஆம் திகதியும் நாளை மறுதினம் 26ஆம் திகதியும் வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஐ.அஸ்மின் தலைமையில் யாழ். ஒஸ்மானியா வளாகத்தில் நடைபெறவுள்ளன.

இறுதி நாளான சனிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்வில் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட நூல் வெளியிட்டவர்களும் எழுத்து, கலைத்துறையில் சேவையாற்றிய பின்வருவோர் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார்கள்.

கலாபூஷணம் பெற்றவர்களான எம்.எஸ்.ஏ.ரஹீம் (ஆசிரியர்), யாழ்.அஸீம், திருமதி. தமீமா ரஹீம், எம்.எல். லாபிர் மற்றும் திருமதி ரமீனா ஐயூப், மொஹைதீன் ராஜா, எம்.பி.ஜெலீல், எம். எம்.முஹ°தார், எம். எஸ். எம். ஜான்ஸின், மிலாத் கீரன், திருமதி நஸ்பியா அஜீத், செல்வி.ஜான்ஸி கபூர், யாழவன் நஸீர், திருமதி. நஸீரா அஸீஸ, மௌலவி அப்துல் அஸீஸ், அல்ஹாஜ் எம்.சி.எம் .இக்பால் JP, யாழ் அஸீர், யாழமீர் மன்சூன், எம்.எல்.எம். இக்பால், யாழுர் ராசிக், ராஹியா தௌபீக், ஏ.சி நஜிமுதீன், எஸ். ஏ. அசாட், எஸ்.ஏ. சலாம், எஸ். எம்.ஜாபிர் ஆகியோராவர்.

இவர்களுக்கான கௌரவ விருதுகளை வடமாகாண சபையின் கல்வியமைச்சர் த.குருகுலராஜா வழங்கவுள்ளார். இவ்வொன்றுகூடலில் மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டியும் கலை நிகழ்வும், பரிசளிப்பும் நடைபெறும். அனைத்து யாழ். முஸ்லிம்களையும் ஒன்று சேருமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ)




## விரலிசை நாதம்

(யாழ்ப்பாணம்)

ஈழத்தின் ஆரம்ப சித்தர் கடையிற் சுவாமிகளின் 124 ஆவது வருட குரு பூசை தினத்தை முன்னிட்டு ஸ்ரீ சிவகுருநாத குருபீடம் மகாதேவா சுவாமிகள் நடத்தும் "விரலிசை நாதம்" எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6:15 மணியளவில் இல 18, குமாரசாமி வீதி, கந்தர்மடம் வேதாந்த மடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் திருமதி. விதுர்ஷா கோபிகிருஷ்ணா குழுவினரின் வீணை இசையும், கே. அனந்தகோபனின் மிருதங்க இசையும் இடம்பெறவுள்ளன. (இ-7)

# மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி மயிலிட்டியில் உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

**மயிலிட்டியில் இருந்து இடம்பெயர்ந்து சுப்பர்மடம் பகுதியில் தங்கியுள்ள கடற்றொழிலாளர்கள் தமது மீள்குடியேற்றத்தை விரைந்து மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி சுப்பர் மடத்தில் உள்ள கடற்றொழிலாளர் சங்க மண்டபத்தில் நேறறையதினம் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டிருநதனர்.**



மயிலிட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சு.யோகராசா தலைமையில் இடம்பெற்ற இந்த உண்ணாவிரதப் போரா ட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் "26 வருடங்கள் சொந்தமண்ணை விட்டுவெளியேறி இன்னமும் தாங்கள் மீள்குடியேற்றப்படவில்லை என்பதை வன்மையாகக் கண்டித்திருந்தனர். அதேவேளை போர் முடிந்தும் எமக்கு விடிவில்லையா? இன்னமும் எமக்கு முகாம் வாழ்க்கையா? போன்ற பதாகைகளையும் ஏந்தியவாறு போராட்டத்தில் கலந்து கொண்ட னர்.

இப் போராட்டத்தில் கலந்து கொண்ட மயிலிட்டி மீள்குடியேற்றக்குழுவின் செயலாளர் ந.இளங்குமரன் கருத்துத் தெரிவிக்கையில்.

மயிலிட் டியிலிருந்து இடம்பெயர்ந்து 26 வருடங்கள் ஆகிவிட்டன. மீள்குடியேற்ற அமைச்சிடம் இது தொடர்பாகப் பேசியபோது இரண்டு மாதங்கள் பொறுத்துக் கொள்ளுமாறு கூறியிருந்தார. ஆனால் எமக்கு அதில் எந்த நம்பிக்கையும் இல்லை. எம்மை மீள்குடியேற்றும் வரை எமது போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை சமபவ இடத்திற்கு காங்கேசன்துறைப் பொலிஸ் அத்தியட்சகர் மதசிங்க மற்றும்காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எம்.ஜஃபர் ஆகியோர் வருகை தந்து போராட்டக்காரர்களுடன் கலந்துரையாடிய பின்னர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவிடம் கையளிப்பதற்காக வைத்திருந்த மகஜரினை மாவட்ட செயலகம் ஊடாக கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதையடுத்து மு.ப 11.30 மணியளவில் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டது. மயிலிட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் தலைவர், செயலாளர்உள்ளிட்ட குழுவினர் தமது கோரிககை அடங்கிய மகஜரை யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகத்திடம் கையளித்தார். (இ-9-60)

## கடையிற் சுவாமிகளின் 124 ஆவது குருபூசை

கடையிற் சுவாமிகளின் 124 ஆவது வருடக் குரு பூசை எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு வேதாந்த மடம் மகாதேவா சுவாமிகள் ஆச்சிரமத்தில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பண்ணிசைக் கச்சேரி, குருமாரின் சமாதிகளுக்கு அபிஷேக, ஆராதனை, பூசை வழிபாடுகள், சொற்பொழிவுகள், மகேஸ்வர பூசை என்பன இடம்பெறவுள்ளன. (இ-7)

## நேர அட்டவணை காட்சிப்படுத்தல்

பருத்தித்துறையில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு செல்லும் பேருந்துகளுக்கான நேர அட்டவணை இல்லாது பிரயாணத்துக்கு மக்கள் பெரிதும் கடினப்படுவதால் கொழும்பு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு செல்லும் பேருந்துகளின் நேர அட்டவணையை பருத்தித்துறை, நெல்லியடி பேருந்து தரிப்பிடங்களில் காட்சிப் படுத்துமாறு வடமராட்சி மகக்கள் சார்பாக வடமராட்சி கிழக்கு மகாத்மாகாந்தி பொதுப்பணி மன்றம் கோரிக்கை விடுத்துள்ளது. (இ-3)

## அழகுக்கலை வல்லுநர் பயிற்சிநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை ஊடாக அழகுக் கலை வல்லுநர் பயிற்சி நெறிக்கான விண்ணபபங்கள் கோரப்படுவதுடன் இவற்றிற்கான பதிவுகளும் நடைபெற்று வருகின்றன.

மேற்படி பயிற்சி நெறி ஐப்பசி மாதம ஆரம்பிக்கப்படவுள்ளது.

கற்கை நெறி முடிவில் தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழ்கள் வழங்கப்படும். இக்கற்கைநெறிகளை கற்க விரும்புவோர் தமது பதிவுகளைஎதிர்வரும்30ஆம்திகதிக்கு முன்னர்மாவட்ட அலுவலர் முதலாம மாடி: வீரசிங்கம் மண்டபத்தில் மேற்கொள்ள முடியும்.

அத்துடன் 021 222 7949 எனும தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும். (இ-5)




## ஒத்திகைப் பயிற்சி

நெடுந்தீவு பிரதேச செயலக பிரிவில் உள்ள அனைத்து கிராம சேவையாளர் பிரிவுகளில் ஜே/01, ஜே/02, ஜே/03,ஜே/04, ஜே/05, ஜே/06 உள்ளடக்கி இன்று புதன்கிழமை பி.ப 2 மணிக்கு அனர்த்த முகாமைத்துவ பிரிவினரால் முன் னெச்சரிக்கை விழிப்புணர்வும் ஒத்திகைப் பயிற்சி செயற்பாடுகளும் மேற் கொள்ளப்படும். இது தொடர் பில் பொது மக்கள் அமைதியாக இருக்குமாறும் இது ஒரு ஒத்திகைச் செயற்பாடு என்பதால் எவரும் குழப்பமடையத் தேவையில்லை என பொதுமக்களுக்கு யாழ். அரச அதிபர் நா. வேதநாயகன் அறிவித்துள்ளார். (இ)

# தமிழர் பிரச்சினையை தீர்ப்பதற்கு விசேட திரவிய ஸ்நபன அபிஷேகம்

தமிழருடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு யாழ். இந்து சமயப் பேரவையில் ஸ்ரீசிவகாமசுந்தரி சமேத ஸ்ரீமத்நடராஜப் பெருமானுக்கு விஷேட திரவிய ஸ்நபன அபிஷேகமும் விஷேட வழிபாடும் நடத்தப்படவுள்ளன.

நெடுங்காலமாக தீர்க்கப்படாதிருக்கின்ற இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு எமது தலைவர்கள் தத்தமது சக்திக்கேற்ப பல்வேறு வழிமுறைகளில் அணுகியும் போராடியும் அது இன்றுவரை தீர்க்கப்படாதிருக்கின்றது.

தீர்வு வந்துவிடுகின்றதென பலமுறை நாம் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கியும் அத்தீர்வை பெற்றுக்கொள்ள முடியாது போயுள்ளது. அவற்றோடு நின்றுவிடாது எம்மவர்கள்சொல்லொணாத் துன்பத்தையும் அனுபவித்து வருகின்றனர்.

இத் துன்பத்தில் இருந்து மீள்வதற்கு தெய்வத் துணையொன்றே எம்மைக் கரை சேர்க்கும் தெப்பமாக இருக்கிறது என்பதை மனதார உணர்கிறோம்.

எனவே எதிர் வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல ஒரு மணி தொடக்கம் 6மணி வரை இந்து சமயப் பேரவையில் எழுந்தருளி அருளாட்சி செய்யும் ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீமத் நடராஜப் பெருமானுக்கு விசேட திரவிய ஸ்நபன அபிஷேகமும் பிரார்த்தனையும் நடத்தப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்து தமிழ்மக்களின் எதிர்கால நல்வாழ்விற்காகவும், எமது பிரச்சினையைத் தீரப்பதற்காகவும், எமது பிரச்சினைத் தீர்வுக்காக புரிட்டு தம் உயிரை அர்ப்பணித்த அனைவரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திப்பதோடு இதன் வெளிப்பாடாக "நமசிவாய வாழ்க" எனும் அரும்பெரும் மந்திரத்தை 108 தடவை எழுதி 26 ஆம் திகதிக்கு முன்னதாக எமக்கு அனுப்பி வைப்பதோடு இயன்ற அபிஷேக திரவியங்களை வழங்கியுதவுமாறு இந்து சமயப் பேரவையின் செயலாளர் சி.சக்திகிரீவன் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-9)

## யாழில் நன்னீரை சேகரிக்க மூன்று குளங்கள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் நன்னீரை சேகரிக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக 3 குளங்கள் புனரமைப்பு செய்யப்பட்டு வருவதாக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் நீண்டகாலமாக புனரமைப்பு செய்யப்படாமல் இருந்த குளங்கள் தெரிவு செய்யப்பட்டு புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இப்புனரமைப்பு பணிக்கென எமது அமைச்சின் நிதியில் இருந்து 10.9 மில்லியன்ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்த வகையில் 4 மில்லியன் ரூபா செலவில் புங்குடுதீவு பெரிய கிராய் குளமும், 3.9 மில்லியன் ரூபாய் செலவில் திருநெல்வேலி பரவைக்குளமும், 3 மில்லியன் ரூபாய் செலவில் வேணன் அணைக்கட்டும் புனரமைப்பு செய்யப்படுகின்றன. இப்புனரமைப்புப் பணிகள் எதிர்வரும் ஒக்டோபர் மாதமளவில் பூர்த்தி செய்யப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# படுகொலையைக் கண்டித்து யாழில் நேற்று ஆர்ப்பாட்டம்!

(யாழ்ப்பாணம்)

**தென்பகுதியில் முன்பள்ளிச் சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்தின் பின்பு படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை கண்டித்தும் உடன் நடவடிக்கை எடுக்குமாறு கோரியும் யாழ்.பல்கலைக்கழக நுண் கலைப்பீட மாணவர்களும் அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகத்தினரும் இருவேறு போராட்டங்களை நேற்று முன்னெடுத்திருந்தனர்.**








அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகத்தினால் முன்னெடுக்கப்பட்ட பேரணியின் இறுதியில் வடக்குமாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரனால் ஜனாதிபதிக்கான மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

கொட்டதெனியாவ படல்கம அக்கரங்ஹ பகுதியைச் சேர்ந்த முன்பள்ளிச் சிறுமியொருவர் பாலியல் துஷ்பிரயோகத்தின் பின்னர் அண்மையில் படுகொலை செய்யப்பட்டிருந்தார். இக் கொலையின் சூத்திரதாதிகள் யாரும் கைது செய்யப்பட்டாத நிலையில் தென்பகுதியில் குறித்த சிறுமியின் கொலைக்கு நீதி கோரி போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் நேற்றையதினம் வடக்கில் யாழில் குறித்த சிறுமிக்கு நீதி கோரி போராட்டங்கள் இரு வேறு இடங்களில் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அதில் யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீட மாணவர்களது ஏற்பாட்டில் மருதனார் மடத்திலமைந்துள்ள நுண்கலைப் பீடத்தில் நேற்றுக்காலை 9மணியளவில் ஆரம்பமாகிய குறித்த போராட்டம் சுமார் ஒரு மணித்தியாலயம் வரை நடைபெற்றது.

இதேவேளை அளவெட்டி விநாயகர் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட பேரணி நேற்றுக்காலை 8 மணியளவில் அளவெட்டியில் ஆரம்பமாகியது. இப்பேரணி தெல்லிப்பழை பிரதேச செயலகத் தினை காலை 9 மணிக்கு வந்தடை ந்தது.

அங்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரனால் ஜனாதிபதிக்கான மகஜர் ஒன்று தெல்லிப்பழை பிரதேச செயலரிடம் கையளிக்கப்பட்டிருந்தது. (இ-4)

## நாடக அரங்கியல் வழிகாட்டல் பயிற்சி

இந்த ஆண்டு க.பொ.த உயர்தரத்தில் நாடகமும் அரங்கியலும் பயின்ற மாணவர்களுக்குரிய நாடக அரங்கியல் செயன்முறைப் பரீட்சைக்கான வழிகாட்டல்பயிற்சி வகுப்புக்கள் யாழ். கந்தர்மடம் பழம் வீதியில் அமைந்துள்ள அரங்கச் செயற்பாட்டுக்குழுவின் நிலையத்தில் இடம்பெறவுள்ளன.

குறித்த பயிற்சி வகுப்புக்கள் எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் 30 ஆம் திகதி வரை காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை நடைபெறும்.

தகைமை பெற்ற வளவாளர்களினால் நடத்தப்படும் இப்பயிற்சி நெறியில் பங்குகொள்ள விரும்பும் மாணவர்கள் இன்று புதன்கிழமை 077 440 3955 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுக் கட்டணம் செலுத்தி முன்பதிவு செய்து கொள்ளும்படி அரங்கச் செயற்பாட்டுக் குழுவின் யாழ். மாவட்ட இணைப்பாளர் கேட்டுள்ளார். மேலும் இப்பயிற்சி நெறியில் வெளிமாவட்ட மாணவர்களும் பங்குகொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## இன்னிசை நிகழ்வு

வட்டுக்கோட்டை - பம்பலப்பிட்டி பிரம்மஸ்ரீ, க.சுவாமிநாதன் சர்மாவின் இசை அர்ச்சனைக் குழுவினர் வழங்கும் இன்னிசை நிகழ்வு எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணி முதல் ஈவினை ஸ்ரீ கற்பகப் பிள்ளையார் தேவஸ்தான புதிய கோபுர நுழைவாயில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (இ-9)

## இலங்கை தேசிய உருவாக்கத்தின் பாதகமான விளைவுகள்

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டம் வழங்கும் கருத்துரை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கொக்குவிலில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

அண்மையில் மறைந்த சீலன் கதிர்காமர் நினைவாக இலங்கைத் தேசிய உருவாக்கத்தின் பாதகமான விளைவுகள் எனும் தலைப்பில் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கருத்துரையினை நிர்மால் ரஞ்சித் தேவஸ்ரீ (சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை கொழும்புபல்கலைக்கழகம்) தலைமை உரையினை சோமேசுந்தரி கிருஷ்ணகுமார் (சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, யாழ். பல்கலைக்கழகம்) நிகழ்த்தவுள்ளார்.

இக்கருத்துரையைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும் என்பதையும் சமூக, கலை, இலக்கிய, விஞ்ஞான அறிவியல் ஆர்வலர்கள் யாவரும் கலந்து கொள்ளலாம் என்பதையும் அறியத்தருகின்றோம் என தேசிய கலை இலக்கிய பேரவை அறிவித்துள்ளது. (இ)




## உலக மருந்தாளர் தினம் வெள்ளிக்கிழமை யாழில்

உலக மருந்தாளர் தினம் முதற்தடவையாக யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்படவுள்ளது. வட இலங்கை மருந்தாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் மேற்படி உலக மருந்தாளர் தினம் கொண்டாடப்படவுள்ளது.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை யாழ். ரில்கோ விடுதியில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் ஈ.தேவநேசன், பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். இந்நிகழ்வில் 70 வயதிற்கு மேற்பட்ட மருந்தாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். (இ-3)

## கைப்பணியாளர்களுக்கு உபகரணங்கள்

தேசிய அருங்கலைகள் பேரவையின் 2014ம் ஆண்டுக்கான பாரம்பரிய கைப்பணிக் கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சுரசாலை - மட்டுவில் இணைந்து கைப்பணிக் கிராமங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பன்னவேலையினை செய்கின்ற 30 கைப்பணியாளர்களுக்கான மூலப்பொருட்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று மாலை 4.00 மணியளவில் மட்டுவில் கிழக்கு மோகனதாஸ் சனசமூக நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது என வட மாகாண தேசிய அருங்கலைகள் பேரவை உதவிப் பணிப்பாளர் க.நவதர்ஷன் அறிவித்துள்ளார். (இ)

## இறைச்சிக்கடைகள் இன்று முதல் திறக்கப்படும்

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட இறைச்சிக் கடைக்காரர்களால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முதல் முன்னெடுக்கப்பட்டு வந்த கடையடைப்புப் போராட்டம், மாநகர சபை ஆணையாளர் பொன்னம்பலம் வாகீசன் மற்றும் பொலிஸார் ஆகியோர் வழங்கிய உறுதிமொழிகளால் கைவிடப்பட்டு இன்று முதல் மீண்டும் இறைச்சிக் கடைகள் திறக்கப்படும் என இறைச்சிக் கடை உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

கொள்கலன்களுக்கு கால் நடைகளைக் கொண்டு செல்லுதல் மற்றும் கொள்கலன்களில் வெட்டப்படும் கால்நடைகளின் இறைச்சிகளை சுதந்திரமாக எடுத் துச் செல்ல முடியாத வகையில் பொலிஸார் நெருக்குதல்களை மேற்கொள்வதாகக் கூறி இறைச்சிக் கடைக்காரர்கள் கதவடைப்புப் போராட்டம் மேற்கொண்டனர்.

மாடுகளை வெட்டுவதற்கான அனுமதியை தாங்கள் வைத்திருந்தும் அதனை கொள்கலன்களுக்கு எடுத்துச் செல்லல் மற்றும் இறைச்சியாக்கிக் கொண்டு செல்வதற்கான வழி அனுமதியில்லையென பொலிஸார் கைது செய்வதாகவும் இதனை நிவர்த்தி செய்து, உரிய அனுமதியைப்பெற்றுத்தருமாறு இறைச்சிக்கடைக்காரர்கள், மாநகர ஆணையாளரிடம் கோரியிருந்தனர்.

கொண்டு செல்வதற்கான சரியான அனுமதியைப் பெற்றுத் தருவதாக மாநகர ஆணையாளர் உறுதி வழங்கியதுடன், பொலிஸாரும் அதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாகக் கூறியதையடுத்து உரிமையாளர்கள் தங்கள் போராட்டத்தை நேற்றைய தினம் கைவிட்டனர். உடனடியாக இறைச்சிக் கடைகளை திறக்க முடியாது எனும் காரணத்தால் இன்றையதினம் முதல் திறக்கப்படவுள்ளன.

யாழ்.மாநகர எல்லைக்குள் 22 மாட்டிறைச்சிக் கடைகள் மற்றும் 9 ஆட்டிறைச்சிக்கடைகளாக மொத்தம் 31 இறைச்சிக் கடைகள் உள்ளதுடன், அவற்றில் 342 தொழிலாளர்கள் பணிபுரிகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-9)

# வாசிப்பில் ஆர்வம் காட்டுகின்ற மாணவர்களுக்கு பதக்கங்கள், சான்றிதழ்கள் வழங்கும் திட்டம்

(மல்லாவி)

வடக்கு மாகாண பாடசாலைகளில் உள்ள நூலகங்களைச் சிறந்த முறையில் பயன்படுத்தி வாசிப்பில் ஆர்வம் காட்டுகின்ற மாணவர்கள், மாணவிகள் ஆகியோருக்கு பதக்கங்கள், சான்றிதழ்கள் என்பவற்றை வழங்கும் திட்டம் ஒன்று மத்திய கல்வி அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மத்திய கல்வி அமைச்சின் தமிழ் பாடசாலைகள் அபிவிருத்தி பணிப்பாளர் எஸ். முரளிதரன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய வடக்கு மாகாண பாடசாலைகளிலுள்ள நூலகங்களை சிறப்பாகப் பயன்படுத்திய மாணவர்களில் பண்பட்ட வாசகர் விருது-2014 இற்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பதக்கங்கள், சான்றிதழ்கள் என்பன வழங்கும் நிகழ்வு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10மணிக்கு மடு கல்வி வலயத்திலுள்ள அடம்பன் மகா வித்தியாலயத்தின் ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறுமென அவர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அன்றையதினம் பயனுள்ள புத்தகக்கண்காட்சியொன்றுநடைபெறும்.

இதில் ஆர்வமுள்ள வாசகர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

கலந்து கொள்ள விரும்புவர்கள், 0112785234 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# தனியார்துறை போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் சாரதிகள், நடத்துநர்களுக்கு பயிற்சி

## ஆள் அடையாள அட்டை அவசியம் என்கிறார். போக்குவரத்து திணைக்கள ஆணையாளர்

(மல்லாவி)

**நாடு தழுவிய ரீதியில் தனியார் துறையில் பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடுகின்ற பேருந்துகளின் சாரதிகள், நடத்துநர்களுக்கு நான்கு நாட்கள் கொண்ட பயிற்சிகளை வழங்கி அதற்கான தராதரப் பத்திரங்களை வழங்கும் நடைமுறையொன்றை அறிமுகம் செய்யவுள்ளதாக மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளர் ஏ.எச்.கே.ஜெகத் அறிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

சாரதிகள், நடத்துநர்கள் தனியார் பேருந்துகளில் கடமையாற்றுவதற்கு முன்னர் இப்பயிற்சி நெறியை முடித்து ஆள்அடையாள அட்டையை பெற்றிருத்தல் வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்படவுள்ளது.

நான்கு நாட்கள் கொண்ட இப் பயிற்சி வகுப்பில் வீதி ஒழுங்கு முறைகள், பாதுகாப்பான போக்குவரத்து, அவசர முதலுதவி, தொழில்நுட்ப அறிவுரைகள், பயணிகளுடன் மரியாதையைக் கடைப்பிடிக்கும் வழிமுறைகள் உட்பட பல்வேறுபட்ட விடயங்கள் அளிக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இப்பயிற்சி வகுப்பின் பின்னர் சாரதிகள், நடத்துநர்கள் தொடர் பாக பயணிகளினால் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்களுக்குரிய நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளப்பட்டு பாதிக்கப்படும் பயணிகளுக்கு தீர்வு வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)




# சமாதானம், அமைதி வேண்டி விளக்கேற்றி வழிபாடுகள்

(பனிக்கன்குளம்)

சர்வதேச சமாதான தினம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வவுனியா கோவில்குளம் விஸ்ணு ஆலயத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.,

வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த இவ் விசேட வழிபாட்டில் வவுனியா மாவட்ட அந்தணர்கள் ஒன்று திரண்டு சமாதானம் வேண்டி பூசை வழிபாட்டில் ஈடுபட்டனர்.


அத்துடன் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டு உலக சமாதானம் வேண்டி பூசை வழிபாடுகளில் ஈடுபட்டதுடன் சுடர் ஏற்றியும் வழிபட்டனர். இந்த நிகழ்வில் வட மாகாணசபை உறுப்பினர் எம்.பி நடராஜ், வவுனியா வரியிறுப்பாளர் சங்கத்தின் தலைவர் எஸ். சந்திரகுமார் உட்பட பொதுமக்கள், அந்தணர்கள் கலந்துகொண்டனர்.

இதேவேளை வவுனியா கூமாங்குளம் அஸ்திரம்மக்கள நற்பணி மன்றத்தின் ஏற்பாட்டில் நற்பணி மன்றத்தலைவர் எஸ்.பி.சுதர்சன் தலைமையில் உலக அமைதியையும் சமாதானத்தையும் வேண்டி கூமாங்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் நெய் விளக்கேற்றி விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்றன. அத்துடன் சமாதான சின்னமான வெண்புறாக்களும் பறக்கவிடப்பட்டன. (2-281-250)



கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு சட்ட விரோதமாக மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனங்கள் கிளிநொச்சி பொலிஸாரால் மடக்கிப்பிடிக்கப்பட்டு நீதிமன்றிற்கு கொண்டு செல்லப்பட்டது. கடந்த ஞாயிற்றுக்கிழமை அனுமதியற்ற முறையில் மணல் ஏற்றிக்கொண்டு யாழ்நோக்கி பயணித்த டிப்பர் வாகனங்கள் 8 பொலிஸாரினால் மடக்கிப் பிடிக்கப்பட்டு நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (படம்: மல்லாவி. பனிக்கன்குளம் செய்தியாளர்கள்.

# யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப்பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன



பரந்தன் - முல்லை. வீதியில் உள்ள வன்னி விழிப்புலனற்றோர் சங்கம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட 97 இற்கும் மேற்பட்ட இரு கண்களையும் இழந்தோர், இரு கண்களையும் இழந்த இருபதுக்கும் மேற்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்கள், சுமார் 252 இற்கும் மேற்பட்ட அங்கவீனமடைந்தவர்களின் வாழ்வியல் மேம்பாட்டிற்காக செயற்பட்டுவருகிறது.

இவர்களுக்கான உணவுப் பொருட்கள் சார்ந்த உதவிகளை வழங்கியுதவுமாறு குறித்த சங்கம் வட்டு.இந்து வாலிப சங்கத்திற்கு கோரிக்கையொன்றை விடுத்தது. இதற்கமைய வட்டு.இந்து வாலிபர் சங்கத்தினால் 2 ஆயிரம் ரூபா பெறுமதியான 40 உணவுப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன.

இதற்கான நிதி உதவியை புலம் பெயர் கனடாவாழ் கருணையுள்ளங் கொண்டவர்கள் வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது. (2)

# அதிரடிப்படைமுகாம் பொறுப்பதிகாரி கைதாகி பிணையில் விடுதலை

## வழக்கு விசாரணை 29ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

வவுனியா. செட்டிகுளம். அடம்பன் குளம் பகுதியில் மின்சாரம் தாக்கி குடும்பப் பெண் மரணமடைந்தமை தொடர்பில் அப்பகுதி விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி நேற்று முன்தினம் கைதாகி பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா. செட்டிகுளம். அடம்பன்குளம். குருசை சந்தி பகுதியில் வசித்த குடும்பப் பெண் ஒருவர் தனது வீட்டு வேலியில் இலைகளை பறித்த போது அருகில் இருந்த விசேட அதிரடிப்படை முகாமினால் வேலிக்கு செலுத்தப்பட்டிருந்த மின்சாரம் தாக்கி வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த 18ஆம் திகதி மரணமடைந்தார்.

இதனையடுத்து குறித்த விசேட அதிரடிப்படை முகாமை அகற்றுமாறு கோரியும் பாரபட்சமற்ற வகையில் முகாம் பொறுப்பதிகாரி மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரியும் மக்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை முகாம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், வவுனியா மாவட்ட நீதிமன்ற உத்தரவுக்கமைய நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட குருசை சந்தி விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரியை மாலை மாவட்ட நீதிபதியின் வீட்டில் செட்டிகுளம் பொலிஸார் முன்னிலைப்படுத்தினர். இதன் போது விசேட அதிரடிப்படை பொறுப்பதிகாரி சார்பாக ஆஜராகிய வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த சட்டத்தரணிகளான அன்ரனர் புனிதநாயகம், திருவருள் ஆகிய இருவரும் குறித்த அதிகாரியை பிணையில் விடுமாறு கோரினர்.

இதனையடுத்து ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான சரீர பிணையில் இராணுவ அதிகாரி விடுதலை செய்யப்பட்டுள்ளார். வழக்கு விசாரணை எதிர்வரும் 29 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. (2-250)

# தொன்மையான சுதேச மருத்துவத்தை நாம் அழிவடைய அனுமதிக்கக்கூடாது

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

(குருமன்காடு)

சுதேச மருத்துவத் துறையானது மிகவும் தொன்மையான வரலாற்றைக் கொண்டது. சித்தர்களாலும் முனிவர்களாலும் கையாளப்பட்ட இத்துறையை அழிவடைய நாம் அனுமதிக்கமுடியாது என வடக்கு மாகாண சுகாதார அமைச்சர். வைத்தியர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் ஆயுர்வேத வைத்தியசாலை வடக்கு மாகாண சுகாதார அமைச்சரினால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

சுதேச மருத்துவத்துறையை மேம்படுத்தும் நோக்கில் மன்னார் நறுவலிக்குளம் பிரதேசத்தில் மாகாண சபையின் நிதியொதுக்கீட்டில் இக்கட்டடம் புதிதாக அமைக்கப்பட்டது. ஆங்கில மருத்துவம் நமது மக்களிடையே பிரபல்யமாக உள்ளபோதும் ஆயுர்வேத வைத்தியத்தில் அவர்களின் நம்பிக்கை குறையவில்லை. குறிப்பாக நாட்பட்ட நோய்களுக்கான சிகிச்சைகளுக்காக ஆயுர்வேத வைத்தியத்தையே மக்கள் நாடுகின்றனர். நம்முன்னோரான சித்தர்களும், முனிவர்களும் தொடக்கிவைத்த இந்த வைத்தியமுறையானது மிகவும் தொன்மையானது. இந்த துறையை அழிவடைய நாம் அனுமதிக்கமுடியாது. வடக்கு மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு இதற்காக பாடுபடும் என தெரிவித்தார்.



இந்த வைத்தியசாலை திறப்பு விழாவில் மாகாணசபை உறுப்பினர் சிராய்வா, மாகாண சுதேச வைத்தியத்துறை ஆணையாளர் வைத்தியர் திருமதி துரைரத்தினம், மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் திருமதி யூடி ஆகியோர் கலந்து கொண்டனர். (2-250)

# வெடி பொருட்கள் கிடைக்காமையை அடுத்து அகழ்வுப் பணி இடைநிறுத்தம்



(முல்லாவி)

முல்லைத்தீவு வீதி இரண்டாம் கட்டை சின்னக்காடு பகுதியில் பெருந்தொகையான ஆயுதங்கள் புதைத்து வைக்கப்பட்டுள்ளதாக தடுப்பிலுள்ள முன்னாள் போராளியொருவர் வழங்கிய தகவலுக்கமைய கிளிநொச்சி பொலிசாரினால் கிளிநொச்சி நீதிமன்றிற்கு அறிவிக்கப்பட்டதையடுத்து கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் குறித்த இடத்தை அகழ்வு செய்வதற்கான அனுமதியை வழங்கியதைத் தொடர்ந்து குறித்த இடத்தில் அகழ்வுப் பணி நடைபெற்றது.

அகழ்வுப்பணி நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றின் அனுமதியுடன் இரண்டு சமாதான நீதவான்கள், கிராம சேவையாளர் முன்னிலையில் பொலிசாரின் கடும் பாதுகாப்புக்கு மத்தியில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது எவ்விதமான தடயங்களும் கிடைக்கப்பெறாமையையடுத்து அகழ்வுப் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். (2-15-281)

# கடற்கரைச் சூழலை தூய்மைப்படுத்தும் வேலைகள் பல இடங்களில் முன்னெடுப்பு



(பனிக்கன்குளம்)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரைக்கு அமைய கடற்கரை சூழலை தூய்மைப்படுத்தும் தேசிய வேலைத்திட்டம் நாடு பூராகவும் நடைபெற்று வருகின்றது.

இதற்கமைய முல்லைத்தீவு கடற்கரையை தூய்மைப்படுத்தும் வேலைத்திட்டம் நேற்று முன்தினம் காலை 7 மணிக்கு முல்லை. மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் ஆரம்பமானது.

இதில் மாணவர்கள், பொதுமக்கள், கடற்றொழிலாளிகள், பொது அமைப்புக்களின் ஊழியர்கள், அரச ஊழியர்கள், பொலிசார், இராணுவ வீரர்கள், இராணுவ பொறுப்பதிகாரிகள், வன்னிப்பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவமோகன், சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா, மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இதேவேளை கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் பள்ளிக்குடா கடற்கரை பகுதியிலும் இடம்பெற்றது.


கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கடற்கரையைத் தூய்மைப்படுத்தும் நிகழ்வும் இடம்பெற்றது. மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் தட்டுவான்கொட்டி, ஆனையிறவு பகுதியிலும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவில் கிளாலி உள்ளிட்ட கடற்கரையோரங்களிலும் துப்புரவு செய்யும் நிகழ்வுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (2-281-15)




# புதூர் சந்தியில் வாகனங்கள் விபத்து; ஒருவர் படுகாயம்



(பனிக்கன்குளம்)

மூன்று வாகனங்கள் விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் புளியங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் காலை புளியங்குளம் புதூர் சந்தியில் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி ஏ-9 வீதி வழியாக பயணித்த டிப்பர் வாகனத்திற்கு பின்னால் பயணித்துக் கொண்டிருந்த டிமோ பட்டா வாகனம் முன்னால் சென்று கொண்டிருந்த வாகனத்தை முந்திச்செல்ல முற்பட்ட வேளை யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கி வந்த மோட்டார் சைக்கிளுடன் எதிரே மோதுண்டு வேகக்கட்டுப்பாட்டை இழந்து பின்னர் டிப்பர் வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் படுகாயம் அடைந்தார்.

பிரஸ்தாப நபர் மேற்படி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். இது தொடர்பான விசாரணைகளை புளியங்குளம் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர் (2-281-250)

# கடல் அலையில் சிக்குண்ட சிறுவன் உயிரிழந்தான்

(மல்லாவி)

காத்தான்குடி கல்லடி கடற்கரையோரம் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் அலையில் சிக்குண்டு உயிரிழந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் கடந்த 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் நடைபெற்றது. இதில் மன்னார், பனங்கட்டிகொட்டு கிராமத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை விஜயன் அசன்சன் (வயது 4) என்ற சிறுவன் உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது, மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சொறிக்கல் முனை தேவாலய திருவிழாவிற்கு உறவினர்களுடன் சென்றிருந்த வேளை கல்லடி கடற்கரைக்கு சென்று விளையாடிக்கொண்டிருந்தான்.

இதன்போது அடுத்தடுத்து வேகமாக வந்த அலையில் இழுத்துச் செல்லப்பட்டு சிறுவன் உயிரிழந்துள்ளான்.

சம்பவம் அறிந்து ஸ்தலத்திற்கு விரைந்த காத்தான்குடி பொலிசார் சடலத்தை மீட்டதுடன் மேலதிக விசாரணையையும் மேற்கொண்டனர். (2-15)

# முருங்கன் பிரதான பேருந்து நிலையம் அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டது



(மன்னார்)

வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சின் 5 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் அமைக்கப்படவுள்ள மன்னார் முருங்கன் பிரதான பேருந்து நிலையத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

மன்னார் நானாட்டான் பிரதேச செயலகத்துக்குட்பட்ட முருங்கன் நகரத்தில் மன்னார் செட்டிக்குளம் பிரதான வீதியில் மேற்படி பேருந்து நிலையம் அமைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்விற்கு வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன், முருங்கன் பங்குத்தந்தை, முருங்கன் செம்மண் தீவு இந்து ஆலய குருக்கள், நானாட்டான் பிரதேச செயலாளர் பரமதாசன், மடு பிரதேச செயலாளர் எம்.சி.சத்தியசோதி, மன்னார் மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொறியியலாளர் ஜிப்ரி, மன்னார் வவுனியா பிரதம பொறியியலாளர் வீதி அபிவிருத்தி திணைக்களம் ரகுநாதன், நானாட்டான் பிரதேச சபையின் செயலாளர், முருங்கன் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வெற்றிநாதன், பொறியியல் ஆலோசகர் ஜி.சுரேன், பொறியியலாளர் தேவானந், முருங்கன் மற்றும் அதன் அயல் பகுதிகளைச் சார்ந்த கிராம அபிவிருத்தி மற்றும் மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் இணைந்து அடிக்கல்லை நாட்டி வைத்தனர். (2-9)

# பாடசாலைக் கல்வி நடவடிக்கையை ஆரம்பிக்குமாறு பெற்றோர் கோரிக்கை



(பனிக்கன்குளம்)

வவுனியா, பூவரசங்குளம், இரணை இலுப்பைக்குளம் வீதியில் அமைந்துள்ள இரண்டாம் செங்கற்படைக்கிராமத்தில் உள்ள செங்கற்படை திருக்குமரன் வித்தியாலயம் மிக நீண்டகாலமாக ஆசிரியர் வளப்பற்றாக்குறையுடன் இயங்கி வந்த நிலையில் பாடசாலை மூடப்பட்டுள்ளது.

தரம்-1 தொடக்கம் தரம்-5 வரையான வகுப்புக்களைக்கொண்ட இப்பாடசாலையில் அதிபர் உட்பட இரு ஆசிரியர்களே கடமையாற்றி வந்தனர்.

நீண்டகாலமாக குறித்த ஆசிரியர் ஆளணி வளம் நிரப்பப்படாமையினால் கடந்த தவணை ஆரம்பத்திலிருந்து குறித்த பாடசாலை மூடப்பட்டுள்ளது.

இதனால் இப்பகுதியிலுள்ள மாணவர்கள் தற்போது 5 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள புதுக்குளம் வித்தியாலயத்திற்குச் சென்று கல்வி கற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் போக்குவரத்து வசதிகளற்ற நிலையில் கூடுதலான மாணவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகிய நிலை காணப்படுவதாகவும் பாடசாலைக்கு ஆசிரிய ஆளணி வளங்களை பூர்த்தி செய்து மீள ஆரம்பிக்குமாறு பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை இதன் அருகிலுள்ள கோவில் மோட்டை தமிழ் வித்தியாலயமும் போதிய ஆசிரிய வளம் இன்மையால் இப்பாடசாலையும் மூடப்படும் நிலை காணப்படுவதாகவும் பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர். (2-281)

# புலிகளுக்கு நிதி வழங்கியோரும் போர்க்குற்ற விசாரணைக்குள்

## ஐ.நா. பேச்சாளர் அறிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் வெளியிட்ட அறிக்கையின்படி, போர்க்குற்ற விசாரணைகளின் போது விடுதலைப் புலிகளுக்கு நிதி வழங்கியவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை பேச்சாளர் ரவீனா தெரிவித்துள்ளார்.

அத்துடன் அவர்கள் சார்பில் வெளிநாடுகளில் இயங்கியவர்களுக்கும் விசாரணைகளில் ஒரு பங்காக இருப்பர் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்தின் சிறப்பு பேச்சாளர் ரவீனா சம்டாசனி தெரிவித்துள்ளார்.

இலங்கை ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை வெளியிட்ட அடிப்படையில் அதில் இலங்கை இராணுவம் மற்றும் விடுதலைப் புலிகள் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில் அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவதே இலங்கை அரசாங்கத்தின் அடுத்தகட்ட பணியாக இருக்கிறது என்று ரவீனா தெரிவித்துள்ளார். (இ-7)

# றோவுடன் தொடர்பில்லை ஜயதிலக்க எம்.பி. மறுப்பு

இந்திய உயஸ்தானிகர் காரியாலயம் மற்றும் றோ முகவர் நிறுவனத்துடன் தனக்கு தொடர்பில்லை என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி மலின் ஜயதிலக்க தெரிவித்தார்.

ராஜகிரியவில் உள்ள அரசியல் பீட கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்திய உயர்ஸ்தானிகர் காரியாலயம் மற்றும் றோ முகவர் நிறுவனத்துடன் என்னை தொடர்பு படுத்தி பேராசிரியர் நலிந்த் சில்வா கூறியிருந்தமை அடிப்படையற்றதாகும். பொய்யான தகவல்களை அடிப்படையாக வைத்து என்மீது அபாண்டமான குற்றச்சாட்டுகளை சுமத்தியமையால் என் நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ளது. இதற்கு நட்டஈடுகோரி நோட்டீஸ் அனுப்பி வைத்துள்ளேன். அவ்வாறு எனக்கு தொடர்பு இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டால் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்புரிமையில் இருந்து நான், இராஜினாமா செய்வேன் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

## நடுத்தர மக்களுக்கு கொழும்பில் வீடு



கொழும்பில் புதிய வீடமைப் புத்திட்டமொன்றை அறிமுகப்படுத்த முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸவின் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம் அமைச்சர் சஜித் பிரேமதாஸவுடன் இணைந்து கொண்டுள்ளார்.

இது தொடர்பான ஆலோசனைக் கூட்டமொன்று நேற்று முன்தினம் செத்சிரிபாய, வீடமைப்பு அமைச்சில் நடைபெற்றுள்ளது. அமைச்சர் சஜித் அறிவித்துள்ள கொழும்பு மாவட்டத்தில் 5 இலட்சம் வீடுகளை நிர்மாணிக்கும் பணிக்கான திட்ட வரைபினை தயாரிக்கும் பணியை ஆர். பாஸ்கரலிங்கம் பொறுப்பேற்றுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ ஆகியோரின் ஆலோசனைக்கமைவாக கொழும்பில் வாழும் நடுத்தர மக்களை இலக்காகக் கொண்டு இந்த வீடமைப்புத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

கொழும்பில் 800-1000 சதுர அடி பரப்பளவு கொண்ட தொடர்மாடி வீடுகளை நிர்மாணிப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபை, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை ரயில்வே திணைக்களம் என்பவற்றுக்கு உரித்தான அரச காணிகளை அடையாளம் காண்பது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது. ஆர். பிரேமதாஸவின் காலத்தில் வீடமைப்பு அமைச்சின் செயலாளராக அயிலப்பெருமவுடன் நடந்த ஆலோசனையின்போது கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## போதனாசிரியர் பயிற்சித் தர நியமனங்கள் விரைவில்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண விவசாய போதனாசிரியர் பயிற்சித்தரத்துக்கான நியமனங்கள் விரைவில் வழங்கப்படவுள்ளதாக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் விவசாய போதனாசிரியர் பயிற்சித்தரத்துக்கான பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வின் மூலம் தெரிவு செய்யப்பட்ட 22 பேருக்கு இந்த நியமனங்கள் விரைவில் வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# நேபாளத்தின் சமஷ்டி அரசியலமைப்பு இலங்கைக்கு மிகச்சிறந்த முன்மாதிரி

## கலாநிதி ஜயம்பதி தெரிவிப்பு

(கொழும்பு)

**நேபாளத்தில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மதச்சார்பற்ற சமஷ்டி அரசியலமைப்பு இலங்கைக்கு மிகச்சிறந்த முன்மாதிரியாக அமைந்திருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.**



இலங்கையின் மிகச்சிறந்த அரசியலமைப்பு விற்பன்னரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன இது தொடர்பில் பிபிசி. சந்தேசய சிங்கள சேவைக்கு செவ்வியொன்றை வழங்கியிருந்தார்.

குறித்த செவ்வியில் அவர் தொடர்ந்தும் குறிப்பிட்டுள்ளதாவது, நேபாளம் முன்னர் இந்து முடியரசு நாடாக இருந்தது. ஆனால் இப்போது அங்கு மதச்சார்பற்ற சமஷ்டி அரசியலமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் அங்குள்ள மக்கள் அரசியலமைப்பு மற்றும் அடுத்தவர்களின் உரிமைகள் தொடர்பில் எந்தளவு தூரம் திறந்த மனதுடன் இருக்கின்றார்கள் என்பதையும், அந்நாட்டின் அரசியல் தலைவர்கள் தேசியப் பிரச்சினைகளின் போது வெளிப்படுத்தும் தலைமைத்துவப் பண்பும் தெளிவாக வெளிப்பட்டுள்ளது.

அதனைப்போன்ற ஒரு அரசியலமைப்பை உருவாக்கிக் கொள்வது குறித்தே இலங்கையும் தற்போது கவனத்திற்கொள்ள வேண்டியுள்ளது.

அதன் மூலமாக மட்டுமே எதிர் காலத்தில் உருவாகவுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடியதாக இருக்கும் என்றும் கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன மேலும்தெரிவித்துள்ளார். (இ-7)

## அறிவிலி அரசியல்வாதிகள்

இன்றைய அரசியல்வாதிகளில் பெரும்பாலானவர்கள் புதிய அரசியல் கலாசாரத்தை உணர்ந்து கொள்ளத் தெரியாத அறிவிலிகள் என்று அமைச்சர் விஜிதமுனி சொய்சா விமர்சித்துள்ளார். பிபிலையில் இடம்பெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே நீர்ப்பாசன அமைச்சர் விஜிதமுனி சொய்சா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர், அரசியலாகட்டும், அல்லது பொதுவாழ்க்கையாகட்டும் நான் எப்போதும் மிகச்சிறந்த வழிமுறைகளையே தேர்ந்தெடுப்பேன். பொதுமக்களின் நன்மை கருதி அமைச்சுப் பதவியை ஏற்றுக் கொள்ளத் தீர்மானித்ததும் அவ்வாறான ஒரு முடிவுதான்.

இதனை அறிந்து கொள்ளாத அல்லது உணர்ந்து கொள்ளத் தெரியாத அறிவிலிகளான அரசியல்வாதிகளே எங்களையும், தேசிய அரசாங்கத்தின் செயற்பாடுகளையும் விமர்சிக்கின்றார்கள் என்றும் அமைச்சர் விஜிதமுனி சொய்சா தொடர்ந்தும் தெரிவித்துள்ளார். (இ-7)

# நக்கிள்ஸ் பார்க்கச் சென்ற நால்வர் மாயம்

நக்கிள்ஸ் மலைத் தொடருக்கு சுற்றுலா சென்ற நால்வர் காணாமல் போனமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கடந்த செப்டெம்பர் 20 ஆம் திகதி இலங்கையைச் சேர்ந்த குறிப்பிட்ட நால்வர். நக்கிள்ஸ் மலைத் தொடரைப் பார்க்கச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. குறித்த நால்வரும் நேற்று முன்தினம் வரை வீடு திரும்பாததனால் அவர்களில் ஒருவரின் மனைவி ரங்கலை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

அவர்கள் பயணித்த ஆட்டோ நக்கிள்ஸ் மலைத் தொடரை அண்டிய மலை அடிவாரத்திலுள்ள வீடொன்றில் விட்டுச் சென்றுள்ளனர் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ரங்கலை பொலிஸார் மற்றும் குறித்த பிரதேசத்திலுள்ளோர் இணைந்து இந்நால்வர் தொடர்பில் தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (இ-7)

# இந்தியா - இலங்கை பாலம் அவசியமானது

## கம்மன்பிலவுக்கு ரஞ்சன் பதில்

(கொழும்பு)

இந்திய - இலங்கை நாடுகளுக்கு இடையிலான பாலம் அமைப்பு திட்டத்தை பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க வரவேற்றுள்ளார்.

இந்த பாலம் இரண்டு நாடுகளுக்கும் இடையில் சிறந்த உறவைக் கொண்டு வரும் என்றும் அவர் தெரிவித்தார்.

உதய கம்மன்பிலவை போன்ற சிலர் கூறுவதைப்போன்று இரு நாட்டுக்கு அச்சுறுத்தலான விடயம் அல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார். இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு அண்மைக்காலத்தில் ஏற்பட்டதல்ல. ஏற்கனவே ஜேர்மனி, இத்தாலி, பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்து ஆகியன இவ்வாறான பாலத் தொடர்பை கொண்டிருப்பதாக பிரதியமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)



# ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி செய்யவில்லை



(கொழும்பு)

நாட்டை ஆட்சி செய்வது ஐக்கிய தேசியக்கட்சியல்ல என்பதை ஐ.தே.க. ஆதரவாளர்கள் மட்டுமன்றி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆதரவாளர்களும் புரிந்து கொள்ள வேண்டும் என்று மஹாவலி பிரதியமைச்சர் அனுராத ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

கம்பளை நகரில் நேற்று முன்தினம் பிற்பகல் மஹாவலி பிரதியமைச்சருக்கான வரவேற்பு இடம்பெற்றது. இதில் பிரதியமைச்சர் அனுராத ஜயரட்ன நுவரெலியா வீதியில் இருந்து மாலைகள் அணிவிக்கப்பட்டு நாவலப்பிட்டி வீதிவரை அழைத்துச் செல்லப்பட்டார். இதனையடுத்து கம்பளை பஸ் நிலையப்பகுதியில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில்,

நான் ஆரம்பத்தில் அமைச்சுப் பதவியை ஏற்றுக்கொள்வதில்லை என்ற நிலைப்பாட்டில் இருந்தேன். எனினும் என்னை தெரிவு செய்த மக்களுக்கு சேவையாற்ற வேண்டிய தேவை இருக்கும் நிலையில் அதற்கான வாய்ப்பு ஏற்பட்டமையால் இப்பதவியைப் பொறுப்பேற்றேன்.

எனவே இந்த அமைச்சுப் பதவி மக்களுக்கானதாகும். இதன் மூலம் மக்களுக்கு பணியாற்றுவதில் பின்னிற்க மாட்டேன்.

நாட்டை ஐக்கிய தேசியக் கட்சி மட்டும் ஆட்சி செய்யவில்லை. இந்த அரசாங்கம் ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்பவற்றால் அமைக்கப்பட்டுள்ளதாகும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நாட்டில் ஆட்சி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. எனவே ஐக்கிய தேசிய கட்சி தான் ஆட்சியை நடத்துகின்றது என்பது அர்த்தமாகாது. அரசாங்கம் கட்சி அடிப்படையில் மக்களுக்கு சேவையாற்றுவதில்லை என்றார்.

இதில் முன்னாள் பிரதமர் டி.எம்.ஜயரட்ன மற்றும் மத்திய மாகாண சபை உறுப்பினர் நிசங்க ஹேரத் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மகிந்தவை எவ்வாறு அழைப்பது?

### குழப்பத்தில் ஹிருணிகா



நாடாளுமன்ற உறுப்பினரான மகிந்த ராஜபக்ஷவை, தாம் எவ்வாறு அழைப்பது என்று தெரியாமலிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

தீராத அரசியல் பசியால் மகிந்த தமது கீர்த்தியை இழந்துள்ளார். அவர், நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடாது வீட்டில் இருந்திருந்தால், முன்னாள் ஜனாதிபதி என்ற கௌரவம் அவருக்கு இருந் திருக்கும்.

இந்த நிலையில் முன்னர் "சேர்" என்ற அவரை அழைத்த தாம் தற்போது "மந்திரிதுமா" என்று அழைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஏனெனில் ஏனைய சாதாரண நாடாளுமன்ற உறுப்பினர்களையும் "மந்திரிதுமா" என்று அழைக்கவேண்டியுள்ளது. வெல்லம்பிட்டியவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய அவர், புதிய அரசாங்கம் ஆர்ப்பரிப்பு இல்லாமல், புதிய அரசியல் கலாசாரத்தை முன்னெடுத்து செல்கிறது.

தற்போது, அமைச்சர்கள் தமது வாகனங்களில் சாரதிகளுடன் மாத்திரமே பயணிக்கின்றனர்.

இது மைத்திரி - ரணில் நல்லாட்சியை குறித்துக்காட்

# ஜே.வி.பி கொண்டு வந்த பிரேரணை தென் மாகாண சபையில் தோல்வி!

(கொழும்பு)

**அமைச்சர்களின் எண்ணிக்கையைக் குறைப்பது தொடர்பான ஜே.வி.பியின் பிரேரணையொன்று தென் மாகாண சபையில் தோல்வியடைந்துள்ளது.**

பெரும் எண்ணிக்கையில் நியமிக்கப்பட்டுள்ள தேசிய அரசாங்கத்தின் அமைச்சரவை குறித்து கண்டனம் தெரிவிக்கும் அதேவேளை, அமைச்சர்களின் எண்ணிக்கையைக் குறைக்க வலியுறுத்தும் பிரேரணையொன்றை தென் மாகாண சபையில் ஜே.வி.பி. சமர்ப்பித்திருந்தது.

அக்கட்சியின் மாகாண சபை உறுப்பினர் இதனை சமர்ப்பித்திருந்தார்.

நேற்று தென்மாகாண சபை அமர்வு கூடியபோது குறித்த பிரேரணை தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதனை எதிர்த்து ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் வாக்களித்துள்ளனர்.

ஜே.வி.பியின் நான்கு உறுப்பினர்கள் மட்டுமே ஆதரவாக வாக்களித்துள்ளனர். இதன் காரணமாக ஜே.வி.பியின் பிரேரணை ஆறு மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கபபட்டுள்ளது.

வாக்கெடுப்பு நடைபெற்ற போது ஆளுங்கட்சி உறுப்பினர்கள் வாக்களிப்பிலிருந்து தவிர்ந்து கொண்டனர். (இ-7)

# ஹரீன் பெர்னாண்டோ மீது புதியமுதல்வர் குற்றச்சாட்டு

உத்தியோகபூர்வ வாகனமொன்றுக்காக பொதுமக்களின் வரிப்பணத்தில் பெருந்தொகை பணத்தை ஹரீன் பெர்னாண்டோ வீணாக்கியுள்ளதாக ஊவா மாகாண புதிய முதலமைச்சர் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக ஊவா மாகாண புதிய முதலமைச்சர் சாமர சம்பத் மேலும் தெரிவித்துள்ளதாவது.

கடந்த ஜனவரியில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஊவா முதலமைச்சராக ஹரீன் பெர்னாணடோ பதவியேற்றுக் கொண்டார். அதன் பின் அவர் தனது பாவனைக்காக 450 இலட்சம் ரூபா செலவில் ஆடம்பர பீ.எம். டப்ளியூ ரக வாகனமொன்றைக் கொள்வனவு செய்துள்ளார்.

பொதுமக்களின் வரிப்பணத்தல் குறித்த வாகனத்தைக் கொள்வனவு செய்வதற்கு முன்னைய அமைச்சரவையும் அனுமதி வழங்கியுள்ளது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளின்போதும் ஹரீன்பெர்னாண்டோ அந்த வாகனத்தை தனது பிரசார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தி இருந்தார்.

அதுமட்டுமன்றி தற்போது நாடாளுமன்ற உறுப்பினராகி, அமைச்சரவை அமைச்சுப் பதவியை வகிக்கும் நிலையிலும் அந்த வாகனத்தை அவர் மாகாண சபைக்குத் திரும்பக் கையளிக்கவில்லை.

உண்மையில் குறித்த வாகனத்தைக் கொள்வனவு செய்வதற்காக பயன்படுத்தப்பட்ட பணம் பதுளை மற்றும் ஊவா மக்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட வேண்டிய பணமாகும்.

அந்தப் பணத்தில் கொள்வனவு செய்யப்பட்ட வாகனமொன்றை அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவர் முறைகேடாகப் பயன்படுத்துவது பிழையான முன்னுதாரணமாகும் என்றும் முதலமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க மேலும் கணடனம் தெரிவித்துள்ளார். (இ-7)



ஜனாதிபதி அலுவலக பணிக்குழாமைச் சேர்ந்த லக்ஸ்மன் தொரபனே என்பவரால் போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பாக தயாரிக்கப்பட்ட *பெத்திமத்* குறுந்திரைப்படம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடம் கையளிக்கப்பட்டது. இதன் போது இந்த இளம் தயாரிப்பாளரின் முயற்சியைப் பாராட்டிய ஜனாதிபதி இத்தகைய தயாரிப்புக்கள் சிறந்ததோர் சமூகத்தைக் கட்டியெழுப்ப பெரிதும் உதவும் எனவும் தெரிவித்தார்.

# அமைச்சுக்களின் பொறுப்புக்கள் குறித்து வர்த்தமானி வெளியீடு

புதிதாக நியமனம் பெற்றுள்ள அமைச்சரவையில், ஒவ்வொரு அமைச்சுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள துறைகள் அடங்கிய வர்த்தமானி நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளதாக அரசாங்க அச்சகம் தெரிவித்துள்ளது.

இதற்கு அமைய ஒருசில அமைச்சுக்களின் கீழ் காணப்பட்ட நிறுவனங்கள் மற்றும் பொறுப்புக்களில் மாற்றம் ஏற்பட்டுள்ளன.

இதற்கமைய தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகார அமைச்சரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு, இலங்கை மத்திய வங்கி, இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, தேசிய இளைஞர் சேவைகள், ஊழியர் நம்பிக்கை நிதியம், மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு உள்ளிட்ட 20 நிறுவனங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

-நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் கீழ், திறைசேரி, சுங்கம், கலால் திணைக்களம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கை காப்புறுதிச் சபை, தேசிய லொத்தர் சபை, அபிவிருத்தி லொத்தர் சபை, அரச நிதித் திணைக்களம் உள்ளிட்ட 26 நிறுவனங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவின் கீழ். சிவில் விமான சேவை அதிகார சபை, வரையறுக்கப்பட்ட விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் நிறுவனம் ஆகியன கொண்டுவரப்பட்டுள்ளன.

மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவிற்கு, நகர அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை காணி மீள் நிரப்புதல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், தேசிய பௌதக் திட்டமிடல் திணைக்களம் ஆகிய நிறுவனங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

சட்ட, ஒழுங்கு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் திலக் மாரப்பனவின் கீழ், சிறைச்சாலைகள் திணைக்களம், பொலிஸ் திணைக்களம், தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை உள்ளிட்ட நிறுவனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சர் கபீர் ஹாசிமின் கீழ், அரச வங்கிகள், ஸ்ரீலங்கன் மற்றும் மிஹின்லங்கா நிறுவனங்கள், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் உள்ளிட்ட 19 நிறுவனங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

உள்விவகார, வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் எஸ்.பி.நாவின்னவிற்கு, குடிவரவு குடியகல்வுத் திணைக்களம், ஆட்பதிவுத் திணைக்களம், தேசிய அருங்காட்சியகத் திணைக்களம் என்பன ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கிராமிய பொருளாதார அமைச்சர் பீ.ஹரிசனின் கீழ், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபை மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்கள், நெல் சந்தைப்படுத்தல் சபை உள்ளிட்ட 10 நிறுவனங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசத்தின் கீழ், மத்திய கலாசார நிதியம் கொண்டுவரப்பட்டுள்ளது. (இ-7)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

- பிறப்பு: 1985 இந்து, நட்சத்திரம்: சதயம், கி.பா:58 செவ் 8 இல், உயரம்: 5'5", தகைமை/தொழில்:A/L/ சொந்ததொழில், தொ.இ: B/4971
- பிறப்பு: 1982 இந்து, நட்சத்திரம்: அனுசம், கி.பா: 9 செவ் 12 இல், உயரம்: 5'9", தகைமை/தொழில்:A/L/ஆசிரியர், தொ.இ: B/4973
- பிறப்பு: 1977 இந்து, நட்சத்திரம்: பூசம், கி.பா: 32, தகைமை/தொழில்:A/L/ இத்தாலி PR, தொ.இ: B/4974
- பிறப்பு: 1982 இந்து, நட்சத்திரம்: உத்தரம், சகி.பா: 31 செவ் 1 இல், உயரம்: 5'7", தகைமை/தொழில்:வைத்தியர், தொ.இ: B/4975

இவர்களுக்கு மணமகன் தேவை

- பிறப்பு: 1984 இந்து, நட்சத்திரம்: சித்திரை, கி.பா: 19, உயரம்: 5'1", தகைமை/தொழில்:A/L, தொ.இ: G/2175
- பிறப்பு: 1985 இந்து, நட்சத்திரம்: ஆயிலியம், கி.பா: 52 சூரி செவ் 8 இல், உயரம்: 5'6", தகைமை/தொழில்:BA, தொ.இ: G/2182
- பிறப்பு: 1988 இந்து, நட்சத்திரம்: அனுசம், கி.பா: 50 செவ் 1 இல், உயரம்: 5'5", தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில், தொ.இ: G/2192
- பிறப்பு: 1985 இந்து, நட்சத்திரம்: பூராடம், கி.பா: 41 செவ் 8 இல், உயரம்: 5', தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில், தொ.இ: G/2197

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.



## ஐ.எஸ்ஸிலிருந்து விலகுவோர் எண்ணிக்கை திடீரென அதிகரிப்பு

இஸ்லாமிய தேசம் (ஐ.எஸ்.) குழுவில் இருந்து வெளியேறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக அவ்வாறு வெளியேறியவர்களின் வாக்குமூலத்தை மேற்கோள்காட்டி புதிய அறிக்கை ஒன்று வெளியாகியுள்ளது.

தீவிரவாதம் தொடர்பான சர்வதேச ஆய்வு மையம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், ஐ.எஸ்ஸில் இருந்து நூற்றுக்கணக்கானவர்கள் வெளியேறியும் வெளியேற முயன்றும வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

சக முஸ்லிம்களை கொடுமையாக நடத்துவது மற்றும் அமைப்புக்குள் இஸ்லாமிய பண்புகள் இல்லாமை போன்றவையே இவ்வாறு வெளியேறுவதற்கு முக்கிய காரணம் என்று அந்த ஆய்வு அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

இதில் இந்தியாவில் இருந்து ஐ.எஸ்ஸில் இணைந்த ஒருவர் அந்த குழுவுக்குள் சமத்துவம் இல்லை என்றும் இனவாதம் செயற்படுவதாகவும் குற்றம் சாட்டியுள்ளார். “இது ஒரு புனிதப்போரல்ல” என்று அந்த இந்திய நாட்டவர் குறிப்பிட்டுள்ளார். தனது தோலின் நிறம் காரணமாக தம்மை கழிவறையை சுத்தம் செய்ய பயன்படுத்தியதாக அந்த இந்திய நாட்டவர் ஐ.எஸ். மீது குற்றம்சாட்டியிருந்தார்.

மறுபுறம் ஐ.எஸ்ஸில் வெளிநாட்டினருக்கே அதிக அந் தஸ்து வழங்கப்படுவதாகக் குறிப்பிட்டு சிரிய நாட்டைச் சேர்ந்தவர்களில் சிலர் அந்த குழுவில் இருந்த விலகியுள்ளனர்.

இவ்வாறு ஐ.எஸ்ஸில் இருந்து விலகிய 58 பேரது வாக்கு மூலங்கள் அந்த அறிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. (3-7)

## பாகிஸ்தான் பெஷாவர் தாக்குதலின் பின்னர்

# 200 தீவிரவாதிகளுக்கு மரணதண்டனை விதிப்பு

(பெஷாவர்)

**பல்வேறு தாக்குதல்களில் ஈடுபட்டு மனித உயிர்களை காவு கொண்ட தீவிரவாதிகளில் மேலும் 9 பேருக்கு பாகிஸ்தான் இராணுவம் தூக்கு தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது. இதேவேளை இதுவரை பாகிஸ்தான் பெஷாவர் தாக்குதலுக்கு பின்னர் இதுவரை 200 இற்கும் அதிகமானவர்களுக்கு தூக்குத்தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.**

முன்னதாக, இந்த மாத தொடக்கத்தில், பாகிஸ்தானின் பெஷாவர் இராணுவப் பாடசாலையில் நிகழ்த்தப்பட்ட கொடூர தாக்குதலுக்கு காரணமான 6 தீவிரவாதிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், பலுசிஸ்தான் செகரட்ரியேட் அலுவலகத்தில் தாக்குதல் நடத்திய வழக்கு, கைபர் பகுதியில் பெண்கள் பாடசாலை தாக்குதல் நடத்தியது உட்பட பல்வேறு வழக்குகளில் பொது மக்கள் மற்றும் சட்ட அமுலாக்கத் துறை அதிகாரிகளின் மரணத்துக்கு காரணமான 10 பேர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, இந்த தாக்குதலில் ஈடுபட்ட 9 தீவிரவாதிகளுக்கு மரண தண்டனையும், ஒரு தீவிரவாதிக்கு ஆயுள் தண்டனையும் விதித்து இரகசிய இராணுவ நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இதனை இராணுவ மூத்த அதிகாரி ஒருவரும் உறுதி செய்துள்ளார்.

பாகிஸ்தானில் பெஷாவர் இராணுவப் பாடசாலையில் கடந்த டிசெம்பர் மாதம் தலிபான் பயங்கரவாதிகள் புகு நது தாக்குதல் நடத்தினர். இதில் 148 குழந்தைகள் உடபட 151 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இத்தாக்குதலையடுத்து மரணதண்டனைக்கான தடையை நீக்கி பாகிஸ்தான் நாடாளுமன்றம் சட்டம் நிறைவேற்றியது. இதையடுத்து, அன்று முதல் இதுவரை 200க்கும் அதிகமானவர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-7)




## 2 இலட்சத்து 60ஆயிரம் குற்றங்கள் கைதாகவுள்ளார் 91வயது மூதாட்டி

ஹிட்லரின் நாஜிப் படையின் கழ் ஆஸ்ச்விட்ஸ் முகாமில் ரேடியோ இயக்குநராக பணியாற்றிய பெண மீது இரண்டு இலட்சத்து அறுபதாயிரம் குற்றங்களுக்காக வழக்குப் பதிவு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

பெயர் வெளியிடப்படாத அந்த 91 வயது பாட்டி, நாஜி உறுப்பினராக இருந்ததாகவும், 1944 ஆம் ஆண்டில பல மாதங்கள் போலந்து நாட்டில் நாஜிக்கள் முகாமில் ரேடியோ இயக்குநராக பணியாற்றியதாகவும் ஜேர்மனி அரசு சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.


இந்த காலகட்டத்தில், அவரது பணியின் வாயிலாக பலர் மடிய இந்த மூதாட்டி காரணமானதால், அவர் மீது 2 இலட்சத்து அறுபதாயிரம் குற்றங்களுக்காக வழக்கு பதிவு செய்யப்பட்டு விரைவில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இரண்டாம் உலகப் போரின் போது, 1940 முதல் 1945 ஆம் ஆண்டுக்குள், ஹிட்லரின் நாஜிப் படை யினரால் போலந்து நாட்டின் ஆஸ்ச்விட்ஸ் முகாமில் சுமார் 11 இலட்சம் மக்கள் கொல்லப்பட்டனர்.

ஏற்கனவே, இந்தக் கொடுமைகளுக்கு உடந்தையாக இருந்த, அந்த முகாமில் புத்தகங்களை பாதுகாப்பவராக பணிபுரிந்துவந்த ஆஸ்கர் க்ரோயனிங்(94) என்பவர் மூன்று இலட்சம் பேரின் உயிரிழப்புக்கு காரணமானதால், இவ்வாண்டு தொடக்கத்தில் நான்காண்டு சிறைத்தண்டனை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (3-7)

## 1500 வருட பழைமைவாய்ந்த அரிய புத்தர் சிலைகள் மியூசியம்

### அடுத்த மாதம் சீனாவில் திறப்பு



(பீஜிங்)

சீனாவில் ஆயிரத்து 500 வருடங்கள் பழைமை கொண்ட அரிய புத்தர் சிலைகள் அடங்கிய மியூசியம் ஒன்று ஹெபெய் மாகாணத்தில் அடுத்த மாதம் திறக்கப்படவுள்ளது.

இது பற்றி மியூசியத்தின் செயல் அதிகாரி லியூ ஹைடாவோ என் பவர கூறும்போது, லின்ஜாங் கவுண்டி பகுதியில் அமையும் மியூ சியத்தில் உள்ள 3 காட்சியறைகளில் 200 இற்கும் கூடுதலான சிலைகள் மற்றும் சிலை பொருட்கள் கண்காட்சிக்குவைக்கப்படும் என கூறியுள்ளார். கடந்த 2012 ஆம் ஆண்டில் யெசெங் என்ற 2,500 ஆண்டு கள் பழைமை வாய்ந்த தற்பொழுது லின்ஜாங் என்றழைககப்படும் பகுதியில் பூமியில் இருந்து வெளியே எடுக்கப்பட்ட முழு சிலைகள் மற் றும் உடைந்த சிலைகள் என 3 ஆயிரம் பொருட்கள் வரை காட்சிக்கு வைக்கப்பட உள்ளன என்று ஜின்ஹூவா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அவற்றில் வெள்ளை மாபிள் மற்றும் நீலக்கல் ஆகியவற்றில் உருவான பல வரலாற்று பொருட்கள் கிழக்கு வெய் மற்றும் வட பகுதி அரசாட்சிகளுக்குட்பட்ட வடக்கு கய் (534-577) காலத்தை சேர்ந்தவையாக உள்ளன. இந்த கண்டுபிடிப்புகளின் எண்ணிக்கை மற்றும் தரம் ஆகியவற்றின் அடிப்படையில் இவை மிக அரிய வகை பொருட்கள் என அறியப்பட்டுள்ளன. சீனாவின் 3 அரசாட்சி காலங்களில் (220-280) மற்றும் வடக்கு பகுதி அரசாட்சிகளின்போது அரசியல் மையம் போன்று செயற்பட்ட யெசெங் நகரம் வசந்தம் மற்றும் மழை காலங்களின்போது (770 பி.சி.-476 பி.சி.) கட்டப்பட்டுள்ளன.

அந்நகரம் தலைநகராக செயற்பட்டபோது கிழக்கு வெய் மற்றும் வடக்கு கய் அரசாட்சிகளின்போது, இந்தியாவில் இருந்து பரவிய புத் மதம் புகழ் பெற்று விளங்கியது. வடக்கு கய் அரசாட்சியின்போது புத்தருக்கு சிறப்பு சேர்க்கும் வகை யில் அரச குடும்பத்தினர் செயற்பட்டதை அடுத்து அந்த பகுதியில் புத்த மதம் பரவி இருந்தது. அவர்களது காலத்தில் 30 ஆயிரம் கோவி ல்கள் மற்றும் 20 இலட்சம் ஆண் மற்றும் பெண் துறவிகள் இருந்தனர் என ஜின்ஹூவா செய்தி வெளியிட்டுள்ளது. (3-7)

## ஜனாதிபதி மீது குண்டுத்தாக்குதல்

சோமாலியா நாட்டின் மொகாதிசு நகரில் அந்நாட்டு குடியரசு தலைவர் மற்றும் பிரதமருக்கான அலுவலகங்கள் அமைந்திருக்கும் ஜனாதிபதி மாளிகையுள்ளது.

பலத்த பாதுகாப்பு உள்ள இந்த கட்டடத்தின் வளாகத்திற்குள் நேற்று முன்தினம் தீவிரவாதிகள் சக்தி வாய்ந்த வெடி குண்டுகள் நிரப்பப்பட்ட காரைக்கொண்டு தாக்குதல் நடத்தினர். இதில் 5 பேர் சம்பவ இடத்திலேயே உடல் சிதறி பலியானதாகவும், 13 பேர் காயமடைந்துள்ளதாகவும் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அல்கொய்தா இயக்கத்துடன் தொடர்புடைய ஷபாப் இயக்கத்தைச் சேர்ந்த தீவிரவாதிகளே இந்த தாக்குதலில் ஈடுபட்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. (3-7)

## 3 பேர் படுகாயம்

நேபாளத்தில் முதல் முறையாக ஜனநாயக அரசியலமைப்பு ஏற்படுத்தப்பட்டு உள்ளது. இதனை ஜனாதிபதி ராம் பரன் யாதவ் நேற்று முன்தி னம் பிரகடனம் செய்தார். அரசின் இந்த நடவடிக்கைக்கு நாட்டின் பல்வேறு பகுதிகளில், எதிர்ப்பு தெரிவித்து கடந்த சில நாட்களாக போராட்டம் நடத்தி வந் தனர்.

இந்த போராட்டத்தில் வன்முறை வெடித்ததால், பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தும் நிலை ஏற்பட்டது.

நேபாளத்தின் 2 ஆவது பெரிய நகரமான பிரட்நகரில் நேற்று முன்தினம் காலையில் அரசுக்கு எதிரான போராட்டம் நடந்தது.

இந்த போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில் 3 பேர் படுகாயமடைந்து கவலைக்கிடமான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (3-7)

## நைஜீரியாவில் குண்டுவெடிப்பு 21 பேர் உயிரிழப்பு



நைஜீரியாவில் மெய்டுகுரி நகரின் வடகிழக்கே இடம்பெற்ற குண்டு வெடிப்புகளில் சிக்கி குறைந்தது 21 பேர் பலியாகியுள்ளனர்.


மேற்படி தாக்குதல்களுக்கு எந்தவொரு குழுவும் உரிமை கோராத போதும் போகோ ஹராம் தீவிரவாதிகளே காரணம் என நம்பப்படுகிறது.

கொமாரி மற்றும் அஜிலாரி பிராந்தியங்களில் ஞாயிற்றுக்கிழமை இரவு இந்தக் குண்டு வெடிப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

மேற்படி குண்டு வெடிப்புக்களில் சிக்கி சிறுவர்கள் உட்பட பெருந்தொகையானோர் காயமடைந்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (3-7)

# முதல்முறையாக கிரகங்களை ஆய்வு செய்ய செயற்கைக்கோளை அனுப்புகிறது இந்தியா

## ஏற்கனவே 123 ரொக்கெட்டுக்கள் விண்ணில்



(சென்னை)

**இந்தியாவின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ வரலாற்றில் முதன்முறையாக விண்வெளியில் உள்ள கிரகங்களை ஆய்வு செய்வதற்காக வடிவமைக்கப்பட்ட 'அஸ்ட்ரோசாட்' செயற்கை கோள் பி.எஸ்.எல்.வி. சி-30 ரொக்கெட் மூலம் எதிர் வரும் 28- ஆம் திகதி காலை 10 மணிக்கு விண்ணில் ஏவப் படுகிறது.**

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் செயற்கைகோள்களையும், அவற்றை விண்ணில் ஏவுவதற்கான பி.எஸ்.எல்.வி. மற்றும் ஜி.எஸ்.எல்.வி. ஆகிய இருவகை ரொக்கெட்டுகளையும் தயாரித்து வருகின்றன.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் இதுவரை 123 ரொக் கெட்டுகளை விண்ணில் ஏவியுள்ளது.

இந்த ரொக்கெட்டுகள் மூலம் 79 செயற்கைக்கோள்கள் விண்ணிற்கு அனுப்பப்பட்டுள்ளன.

இதில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட 30 பி.எஸ்.எல்.வி ரொக்கெட்டுகள் அனுப்பப்பட்டதில் 29 ரொக்கெட்டுகள் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டுள்ளன.

அதில் 17 ரொக்கெட்டுகள் புவி வட்டப்பாதையில் நிலை நிறுத்தப்பட்டுள்ளன.

9 ரொக்கெட்டுகள் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்துடன் விண்ணில் செலுத்தப்பட்டுள்ளன.

அதேபோல் 9 ஜி.எஸ்.எல்.வி ரொக்கெட்டுகள் அனுப்பப்பட்டதில் 6 ரொக்கெட்டுகள் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டன.

ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ்தவான் விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் முதலாவது ஏவு தளத்திலிருந்து 21 ரொக்கெட்டுகள் விண்ணில் ஏவப்பட்டுள்ளன.

5 ரொக்கெட்டுகள் வணிக ரீதியாக விண்ணிற்கு அனுப்பப்பட்டுள்ளன.

விண்ணிற்கு செலுத்தப்பட்ட 45 செயற்கைக்கோள்கள் 19 நாடுகளை சேர்ந்தவையாகும்.

27 செயற்கைக்கோள்கள் இந்தியாவுக்குச் சொந்தமானவையாகும்.

விண்வெளியில் உள்ள கிரகங்களை ஆய்வு செய்வதற்காக 'இஸ்ரோ' நிறுவனம் முதல் முறையாக செயற்கைகோள்களை அனுப்ப திட்டமிட்டிருக்கிறது.

இதற்காக 'அஸ்ட்ரோசாட்' என்ற நவீன தொலை தொடர்பு வசதிகளுடன் கூடிய செயற்கைகோள் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த செயற்கைகோள் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ்தவான் ஏவுதளத்திலிருந்து பி.எஸ்.எல்.வி. சி-30 ரொக்கெட் மூலம் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு விண்ணில் செலுத்தப்படுகிறது.

இதில் வெளிநாடுகளைச் சேர்ந்த 6 செயற்கைகோள்களும் பொருத்தப்படுகிறது.

இஸ்ரோ சார்பில் முதல் முறையாக விண்வெளி கிரகங்களை ஆய்வு செய்ய இந்த செயற்கை கோள் பூமியிலிருந்து 650 கிலோ மீட்டர் தொலைவில் சுற்றுவட்டப் பாதையில் நிலை நிறுத்தப்படுகிறது.

இந்த செயற்கைகோள் 4 ஊடு கதிர் ஆய்வு கருவிகள், ஒரு யு.வி. தொலைநோக்கு கருவி, ஒரு கண்காணிப்பு கருவி போன்றவற்றை சுமந்து செல்கிறது.

இந்த ஆய்வு கருவிகளை உருவாக்கியதில் இஸ்ரோவுடன் டாடா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனம் உள்பட 4 நிறுவனங்கள் இணைந்து பணியாற்றின.

2 ஆய்வு கருவிகளை கனடாவின் விண்வெளி ஆய்வு நிறுவனத்துடன் இணைந்து உருவாக்கியுள்ளது.

ரொக்கெட் விண்ணில் ஏவப்படுவதற்கு முன்பாக இறுதிகட்ட ஆயத்த பணிகள் எனப்படும் "கவுண்ட்டவுன்", இந்த வார இறுதியில் தொடங்குவதற்கான வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது.

மேற்கண்ட தகவல்களை இஸ்ரோ விஞ்ஞானிகள் மற்றும் அதிகாரிகள் கூறினர். (3-7)

# ஆளில்லா நவீன விமானங்களை கொள்வனவு செய்யும் இந்தியா



(புதுடில்லி)

இஸ்ரேலிடம் இருந்து ஆளில்லா விமானங்களை வாங்கும் திட்டத்தை மத்திய அரசு பெரிதும் துரிதப்படுத்தி வருகிறது.

இராணுவ வீரர்களுக்கு பாதிப்பு எதுவுமின்றி எல்லை தாண்டிய தாக்குதலை நடத்த இராணுவத்திற்காக வாங்கப்படுகிறது என்று பாதுகாப்பு வட்டாரத் தகவல்கள் வெளியாகியுள்ளது.

பாகிஸ்தான் சொந்தமாக தயாரித்த 'பர்ராக்' என்னும் ஆளில்லாத விமானத்தை தீவிரவாதிகளுக்கு எதிரான தாக்குதலில் பயன்படுத்தி வருகிறது.

சமீபத்தில் தான் சொந்தமாக தயாரித்த ஆளில்லா விமானங்களை பாகிஸ்தான் களத்தில் இறக்கியுள்ளது.

இந்நிலையில் இஸ்ரேலிடம் இருந்து 400 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பில் 10 ஆயுதம் தாங்கிய ஆளில்லா விமானத்தை இந்தியா வாங்கவுள்ளது.

இந்திய விமானப்படையில் வேவு பார்க்கும் வகையிலான ஆளில்லா விமானங்களே பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்திய விமானப்படையை பலப்படுத்தும் வகையிலும், அதிகரித்துவரும் பாதுகாப்பு அச்சுறுத்தலை கருத்தில்கொண்டு, இஸ்ரேலிடமிருந்து 10 ஆயுதம் தாங்கிய ஆளில்லா விமானத்தை இந்தியா வாங்க முன்வந்துள்ளது.

400 மில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1000 கிலோ எடை வரை ஆயுதங்களை தாங்கவல்ல Heron TP- வகை விமானங்களை இலக்கை சரியாக அடையாளம் காணபதோடு, துல்லியமாக தாக்கும் திறன்கொண்டது.,

இஸ்ரேலிடமிருந்து ஆளில்லா விமானங்களை வாங்க வேண்டும் என்பது தொடர்பான சித்தம் மூன்று வருடங்களுக்கு முன்னதாகவே உருவாகிவிட்டது.

இதற்கிடையே கடந்த ஜனவரி மாதம் உடனடியாக வழங்க வேண்டும் என்று இராணுவம் அரசுக்கு கடிதம் எழுதியுள்ளது என்று தகவல்கள் தெரிவித்துள்ளன.

பாகிஸ்தான் மற்றும் சீனா சொந்தமாக ஆளில்லா விமானங்களை தயாரிக்கும் நிலையில் இதனை இராணுவம் கேட்டுக் கொண்டுள்ளது.

இஸ்ரேலிடம் இருந்து வாங்கப்பட்ட ஆளில்லா உளவு விமானங்கள் சீனா மற்றும் பாகிஸ்தான் எல்லையையொட்டிய பகுதிகளில் மலைப்பகுதிகளில் கண்காணிப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகிறது.

சீனாவும் இதுபோன்ற விமானங்கள் தயாரிக்கிறது. எனினும் இஸ்ரேல் போன்று அதிநவீனமானது கிடையாது.

ஆளில்லா விமானங்களை தயாரிக்கிறோம் அல்லது பயன்படுத்துகிறோம் என்பதை இஸ்ரேல் உறுதிசெய்யவோ அல்லது மறுக்கவே இல்லை.

Herons விமான விற்பனையை இஸ்ரேல் அரசு நிறுவனமான ஐ.ஏ.ஐ. குறைத்துள்ளது என்பதே கருத்து.

இந்தியாவும் சொந்தமாக அதிநவீன ஆளில்லா தாக்குதல் விமானங்களை தயாரிக்க முயற்சிக்கிறது. ஆயுதங்களை ஏற்றும் விவகாரம் தொடர்பாக பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனம் போராடி வருகிறது. (3-7)

# இலங்கைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் தமிழகத்தில் 21 பேர் வரை கைது

(சென்னை)

இந்திய அரசு இலங்கைக்கு எதிரான நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறி இராமேஸ்வரம் அருகே ரயில் நிலையம் முன்பாக மறியல் போராட்டம் நடத்த முயன்ற தமிழக வாழ்வுரிமை கட்சியினை சேர்ந்த 21 பேரை தமிழக பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்


நேற்று முன்தினம் காலை இராமேஸ்வரத்திலிருந்து மதுரை சென்ற பாஜஞ்சர் ரயிலை மண்டபம் ரயில் நிலையத்தில் தடுத்து நிறுத்த முயன்ற தமிழக வாழ்வுரிமைக் கட்சியினரை பொலிஸார் தடுத்து நிறுத்தியதால் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது

அவர்கள் இந்திய அரசு இலங்கைக்கு எதிரான நடவடிக்கை எடுக்க வேண்டும், என கோஷமிட்டதுடன் இலங்கையில் நடந்த இனப்படுகொலைக்கு ஐ.நா மன்றத்தில் இலங்கையின் மீது சர்வதேச விசாரணை நடத்த வேண்டும் என்ற தீர்மானத்தை இந்தியா கொண்டு வர வேண்டும் எனவும் தமிழக சட்டமன்றத்தில் இலங்கையின்மீது பொருளாதார தடை விதித்து ஈழத் தமிழர்களிடம் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று கொண்டு வந்த தீர்மானத்தின் கீழ் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தியும் இல்லையேல் தமிழகம் தழுவிய போராட்டத்தை எடுத்தச் செல்வதாககூறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட 21 பேரை பொலிஸார் கைது செய்து வழக்கு பதிவு செய்துள்ளனர் (3-9)

# பிரதமர் நரேந்திர மோடி இன்று அயர்லாந்து பயணம்

## அமெரிக்காவில் பாக்.பிரதமருடன் பேசுவார்?



ஐ.நா.வின் நிலையான வளர்ச்சி உச்சி மாநாட்டில் மோடி கலந்து கொள்ள அமெரிக்கா செல்லும் பிரதமர் மோடியும், பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரீப்பும் ஒரே ஹோட்டலில் தங்கவுள்ளனர்.

அவர்கள் இருவரும் சந்தித்து கை குலுக்கி கொள்வார்களா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி அயர்லாந்து, அமெரிக்க நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார்.

இந்த பயணத்தின் முதல் கட்டமாக இன்று அவர் அயர்லாந்து செல்கிறார். அங்கு அவர் அந்த நாட்டின் பிரதமர் என்டா கென்னியுடன் இரு தரப்பு உறவு குறித்து பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

அங்குள்ள இந்தியர்களையும் அவர் சந்தித்து பேசுகிறார். இந்திய பிரதமர் ஒருவர், 60 ஆண்டுகளில் அயர்லாந்து செல்வது இதுவே முதல் முறையாகும்.

அயர்லாந்து பயணத்தை முடித்துக்கொண்டு அவர் அமெரிக்கா செல்கிறார். அங்கு நியூயோர்க் நகரில் ஐ.நா.

பொதுச்சபையின் 70 ஆவது கூட்டம், கடந்த 15 ஆம் திகதி தொடங்கி நடந்து வருகிறது.

அதில் 24, 25 ஆம் திகதிகளில ஐ.நா.வின் நிலையான வளர்ச்சி உச்சி மாநாட்டில் கலந்து கொண்டு பேசுகிறார்.

பிரதமர் மோடி, நியூயோர்க்கில் தங்கி இருக்கும்போது அங்குள்ள வால்ட்ரப் ஆஸ்டாரியா ஹோட்டலில் அமெரிக்காவின் 50 முன்னணி தலைமை செயல் அதிகாரிகளை சந்தித்து பேசவுள்ளார். (3-7)



கலால் பாதுகாப்பு பிரிவின் சார்ஜென்ட் மற்றும் காவலர்கள் சங்கத்தின் 64 ஆவது ஆண்டு நிறைவு விழா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் முற்பகல் கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெற்ற போது...

## சமுத்திர மற்றும் கடல்சார் வாரம் பிரகடனம்

இலங்கை அரசாங்கம் செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை சமுத்திர மற்றும் கடல்சார் வாரமாக பிரகடனப்படுத்தியுள்ளது. இவ்வாரத்தின் அங்குரார்ப்பணத்தை குறிக்கும் முகமாக நினைவுச் சின்னமொன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது.

இந்த நினைவுச் சின்னம் சமுத்திர மற்றும் கடல்சார் வார நிகழ்ச்சித் திட்டத்தின் தலைவரும் துறைமுகங்கள், விமானப் போக்குவரத்து சிரேஷ்ட ஆலோசகர் ரொஹான் மாசகோரலவினால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

இக்கருப்பொருளின் கீழ் இலங்கையில் நடத்தப்படும் முதலாவது நிகழ்ச்சித்திட்டம் இதுவாகும். இந்த சமுத்திர மற்றும் கடல்சார் வாரம் சர்வதேச கடல்சார் நிறுவனத்தின் ஆலோசனை மற்றும் நிபந்தனைகளுக்கு ஏற்ப நடைபெறுவதுடன், சமுத்திர மற்றும் கடல்சார் அலுவல்கள் கொள்கைகளுடன் தொடர்பான பிரச்சினைகள், சமுத்திர சட்டங்கள் மற்றும் முதலீட்டு வாய்ப்புகளுடன் தொடர்புடைய விடயங்கள் இவ்வாரத்தில் கலந்துரையாட திட்டமிடப்பட்டுள்ளது.

துறைமுகம் மற்றும் கடல்சார் துறையில் உள்ள கல்விமான்கள், தொழின்மையாளர்கள், தொழில் முயற்சியாளர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு இத்துறையில் உள்ள ஏனைய சர்வதேச பங்காளர்களுடன் நெருக்கமான உறவை கட்டியெழுப்ப உள்ளதோடு, கல்விக் கருத்தரங்குகள், உரைகள் போன்றன உட்பட பல்வேறு நிகழ்ச்சிகள் இந்த நிகழ்ச்சியுடன் இணைந்ததாக நடைபெறவுள்ளன.

அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, அமைச்சின் செயலாளர் எல்.பீ.ஜயம்பதி, துறைமுகங்கள் அதிகார சபையின் மேலதிக செயலாளரும் பதில் தலைவருமான திருமதி காந்தி பெரேரா உள்ளிட்ட பிரமுகர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-5)

## திருகோணமலை கடற்கரையில் தூய்மைப்படுத்தல் செயற்றிட்டம்



கரையோரப் பாதுகாப்பு வாரத்தினை முன்னிட்டு திருகோணமலை கடற்கரையோரப் பகுதியினை சுத்தம் செய்யும் நடவடிக்கை நேற்றுக்காலை 7 மணி தொடக்கம் 11 மணிவரை இடம்பெற்றது.

கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அகமட் மற்றும் மாவட்ட அரசாங்க அதிபர் என்.ஏ.ஏ. புஸ்பகுமார தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அரச அதிகாரிகள் முப்படையினர் மற்றும் பாடசாலை மாணவர்கள் உள்ளிட்டவர்கள் பங்குபற்றினர்.

இதன்போது கரையோரத்தில் காணப்பட்ட திண்மக் கழிவுகள் பைகளில் சேகரிக்கப்பட்டு அகற்றப்பட்டன.

மேலும் திருகோணமலை மாவட்டத்தின் புல்மோட்டை தொடக்கம் வெருகல் வரையிலான கடற்கரைப் பகுதிகளில் ஒரே நேரத்தில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அதனை முன்னெடுப்பதற்கு நகரில் வாழும் அனைத்து குடிமக்களும் முன்வர வேண்டும் என இங்கு உரை நிகழ்த்திய கிழக்கு மாகாண முதலமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## வனப்பகுதி சுற்றிவளைப்பு

சட்டவிரோதமான மாணிக்கக்கல் அகழ்வு இடம்பெற்ற தம்பகஸ்கொட வனப் பகுதியில் பொலிஸார் நேற்றுமுன்தினம் சுற்றி வளைப்பினை மேற்கொண்டனர். பலாங்கொட - தம்பகஸ்கொட வனப்பகுதியில் சட்டவிரோதமான மாணிக்கக்கல் அகழ்வு இடம் பெறுவதாக கிடைத்த தகவலையடுத்து பொலிஸார் குறித்த இடத்தில சுற்றிவளைப்பினை மேற்கொண்டிருந்தனர்


சுற்றுச் சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்ட நபர்களை கைது செய்வதற்கு பொலிஸாரினால் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவர்களை கைது செய்வதற்கு முடியாமல் போயுள்ளது.

ஆட்டோ,மோட்டர் சைக்கிள் உள்ளிட்ட அகழ்வு நடவடிக்கைக்கு உபயோகிக்கப்பட்ட பொருட்கள் என்பன பொலிஸாரினால் சம்பவ இடத்தில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த இடத்தில் சட்டவிரோத மாணிககக்கல் அகழ்வு நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெறுவதாகவும் இது தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு அறிவித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். (இ-7)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## பொன்னாவரசு இலை



**Botanical Name:** Cassia sophera
**Family:** Caesal piniaceae
**Engl:** wel- Senna sophera
**Sinh:** Uruthora

இது பெருஞ்செடி வகையைச் சார்ந்தது. 3 மீற்றர் உயரம் வரை வளரக்கூடியது. இலைகள் நீள்வட்ட அல்லது வேலுருவானதாக இருக்கும். பூக்கள் மஞ்சள் நிறமுடையவை. சிறியவை. விதைகள் கரும்மண்ணிறம் உடையவை. ஓராண்டு வாழக் கூடியது. இலைகள் ஒன்றுவிட்ட இலையமைப்பைக் கொண்டது. இதன் சிற்றிலைகள் 6-15 சோடிகள் காணப்படும். இருபாலான ஒழுங்கற்ற பூக்கள். பழங்கள் அவரை வடிவாக இருக்கும். பூக்களை மாசி, பங்குனி மாதத்தில் காணலாம்.

பொன்னாவரை இலையில் 5 கிராமும் கீழாநெல்லியிலையில் 5 கிராமும் 9 மிளகையும் அம்மியில் வைத்து மைபோல அரைத்து 10 கிராம் அளவு எடுத்து விழுங்கி வெந்நீர் குடிக்கவேண்டும். காலை மாலையாக ஒருநாளைக்கு இருவேளை வீதம் தொடர்ந்து 7 நாட்கள் சாப்பிட்டால் மஞ்சள் காமாலை குணமாகும்.

பொன்னாவரை இலைகளையும் அதேயளவு அதன் விதைகளையும் எடுத்து மைபோல அரைத்து 200 மில்லி நீரில் மேற்படி அரைத்த விழுதில் 15 கிராம் அளவு சேர்த்து நன்றாகக் கலக்கி காலையில் மட்டும் குடித்தால் பேதியாகும்.

பொன்னாவரைக்கீரையை மற்றக் கீரைகளுடன் சேர்த்து சமைத்தோ அல்லது பருப்புச் சேர்த்து கடைந்தோ பொரியல், துவட்டல் செய்தோ வாரத்திற்கு ஒருமுறை சோற்றுடன் சேர்த்துச் சாப்பிட்டால் அன்றைய தினம் மட்டும் 2, 3 முறை மலம் கழியும். சிறுநீரும் நன்கு வெளியேறும்.

பொன்னாவரைச் செடியின் வேரைக் கொண்டு வந்து அதைக் கழுவிச் சுத்தம் செய்து பொடியாக வெட்டி அதில் 30 கிராம் எடுத்து அம்மியில் வைத்து நைத்து ஒரு சட்டியில் போட்டு சீரகம், மிளகு, சுக்கு இவைகளில் 5 கிராம் அளவு எடுத்து இவைகளை அம்மியில் வைத்து நைத்து அதையும் அதே சட்டியில் போட்டு 600 மில்லி தண்ணீர் விட்டு 400 மில்லி வரை சுண்டக்காய்ச்சி இறக்கி, ஆறவிட்டு வடிகட்டி நாளுக்கு நான்குவேளை தொடர்ந்து 5 நாட்கள் எடுக்க மண்ணீரல், ஈரல் சம்பந்தமான நோய்களின் குறி குணங்கள் குறையும்.

பொன்னாவரசு இலையுடன் மஞ்சள் சேர்த்து மைபோல அரைத்து சிரங்குள்ள இடத்தில் கனமாகப் பூசி அரை மணிநேரம் கழித்து சுட்சிகைக்காயுடன் மஞ்சள் சேர்த்து சிரங்குள்ள இடங்களிலும் ஏனைய இடங்களிலும் பூசிக்குளித்து பின்பு சிரங்குள்ள இடத்திற்கு தேங்காய் எண்ணெய் பூச சிரங்கு முற்றிலும் குணமாகும்.

பொன்னாவரசு கீரை விதையை பசும்பால் விட்டரைத்து 250 மி.கி அளவு குழந்தைகளுக்குக் கொடுத்து வர கக்குவான் இருமல் குணமாகும்.

பொன்னாவரை கீரையின் விதையை நன்றாக அரைத்துச் சாப்பிட்டு குளிர்ந்த தண்ணீரைக் குடித்தால் உடல் அசதி மறைந்து புத்துணர்ச்சி உண்டாகும்.

இதன் இலைகளை மைபோல அரைத்து பழச்சாறு விட்டரைத்து வட்டக்கடிக்கு பூசிவர குணமாகும்.

நீரிழிவு நோயாளிகள் இக்கீரையை வாரத்திற்கு 3 நாட்கள் பச்சடி செய்து சாப்பிட்டுவர நீரிழிவு கட்டுப்பாட்டில்இருக்கும்.

பொதுவாக அரிப்புடன் கூடிய தோல் நோய்களுக்கும் வட்டக்கடிக்கும் இதன் இலைகளை மைபோல வெண்சந்தனக் கட்டையுடன் சேர்த்து அரைத்து பூசிவர நன்கு குணமாகும்.

பொன்னாவரசு மரப்பட்டையில் ஊறல் குடிநீரில் 60 மில்லி காலை மாலை எடுத்தாலும் நீரிழிவு கட்டுப்பாட்டுக்குள் வரும்.

இதன்பூக்களையும் இலைகளையும் துவையல் செய்து சாப்பிட நீரிழிவு, சிறுநீர் எரிச்சல் நீங்கும்.

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

# தமிழ் அரசியல் கட்சிகளுடன் அரசு பேச்சு நடத்த தீர்மானம்

## அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தகவல்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கான அரசியல் தீர்வொன்றை எட்டுவதற்கு தமிழ் அரசியல் கட்சிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக பல்கலைக்கழக கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

அரசியல் தீர்வு ஒன்றுக்கான உடன்பாடு அடையப்பட்ட பின்னர் இந்த ஆலோசனைகள், அரசியலமைப்பு திருத்தத்தில் சேர்க்கப்பட்டு அங்கீகாரத்துக்காக நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

நாம் இதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை நாடாளுமன்றில் கோருவோம். பிரதானமான தேசிய பிரச்சினையை தீர்ப்பதற்காகவே ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்க தீர்மானித்தது என அமைச்சர் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் பெரும்பான்மை ஆதரவு இல்லாவிடின் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது எந்த அரசாங்கத்துக்கும் கடினமாகவே இருக்கும் என அவர் தெரிவித்தார்.

யுத்தக் குற்றம் தொடர்பான சர்வதேச அழுத்தங்களுக்கு முகங்கொடுக்கவும் பிரதான அரசியல் கட்சிகள் இணைந்து செயற்படுவது அவசியமாகின்றது.

இரண்டு பிரதான கட்சிகளும் ஒற்றுமையாக இருந்தால், இந்த பிரச்சினைகளில் இரண்டு பிரதான கட்சிகளும் பொதுமக்களும் ஒரே நிலைப்பாட்டில் இருப்பதாக ஐ.நா. விடம் கூற முடியும். நாம் கூறுவதையும் அவர்கள் கேட்க வேண்டுமென நாம் ஐ.நாவுக்கு கூற முடியும்.

முன்னர், ஓர் அரசாங்கம் தேசிய பிரச்சினையை தீர்க்க முன்வந்தால் அடுத்து வரவுள்ள அரசாங்கம் வேறு கருத்தைக் கொண்டிருக்கும். எனவே, அரசாங்கம் மாறினாலும் தேசிய பிரச்சினை தொடர்பான நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படாத ஒரு கொள்கையை வகுக்க புதிய அரசாங்கம் விரும்புகின்றது என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அதிகாரம் இருந்த போது எமக்கு மூளையில்லை

## அசோக் அபேசிங்க தெரிவிப்பு



அதிகாரம் இருந்த காலத்தில் எமக்கு மூளையிருக்கவில்லை, மதிநுட்பமாக சிந்திக்கும் போது அதிகாரமில்லை என பிரதி அமைச்சர் அசோக் அபேசிங்க தெரிவித்துள்ளார்.

இப்போதுதான் புரிகின்றது அமைச்சுப் பிரதி அமைச்சுப் பதவிகள் எவ்வளவு சிரமமானது என்பது.

எதிர்க்கட்சியில் இருந்த காலத்தில் அது புரியவில்லை. மூளையிருக்கும் போது அதிகாரமில்லை. அதிகாரம் உள்ள போது மூளையிருப்பதில்லை என்பது இதற்குத்தான்.

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான ஒரு பேருந்துக்காக ஏழு பேருக்கு சம்பளம் செலுத்துகின்றோம்.

கடந்த காலங்களில் செய்த தவறுகளினால் இவ்வாறு சம்பளம் செலுத்த நேரிட்டுள்ளது.

கடந்த காலங்களில் மக்களுக்கு சேவையாற்றும் நிறுவனங்களைத் தாண்டி தொழில் வாய்ப்பு வழங்கும் மையங்களாக மாற்றமடைந்தன என அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நிக்கவரட்டிய பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-7)

### தேசியப்பட்டியல் தெரிவை இரத்துச் செய்யக் கோரி

# திஸ்ஸ வழக்கு

**ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களின் தெரிவை இரத்துச் செய்யுமாறு கோரி முன்னாள் அமைச்சர் திஸ்ஸ விதாரண நேற்று முன்தினம் உச்சநீதிமன்றத்தில் அடிபடை உரிமை மீறல் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.**

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கூட்டணிக் கட்சிகளின் இணக்கப்பாட்டுடன் தேர்தல் ஆணையத்தில் கையளித்த தேசியப்பட்டியல் பின்னர் மாற்றப்பட்டு, தேசியப் பட்டியல் ஊடாக புதியவர்கள் நியமனம் பெற்றுள்ளனர்.

எனவே குறித்த தேசியப்பட்டியல் நியமனம் செல்லுபடியற்றது என்று அறிவிக்க வேண்டும். மேலும் அதுவரை தற்போது தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டிருப்போர் நாடாளுமன்ற அமர்வுகளில் கல ந்து கொள்வதற்கு இடைக்காலத் தடை உத்தரவு விதிக்கவேண்டும் என்றும் முன்னாள் அமைச்சர் திஸ்ஸ விதாரண தனது மனுவில் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-7)

# மரணதண்டனைக்கு நான் உதவுவேன்!

சிறுவர்களை துஷ்பிர யோகத்துக்கு உட்படுத்துவோருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும். அவ்வாறான சட்டமூலமொன்று நாடாளுமன்றத்துக்கு கொண்டு வரப்படுமாயின் அதற்கு ஆதரவாக அணிதிரட்டுவதற்கும் அது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்தவும் நடவடிக்கை எடுப்பேன் என்று அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் தலைவர் வைத்தியர் திலங்க சமரசிங்க தெரிவித்தார்.

சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துள்ள நிலையில், போதைப் பொருள் வர்த்தகர்கள், அவற்றை பயன்படுத்துவோருக்கான குற்றவாளிகளுக்கு எதிரான தண்டனை எக்காரணம் கொண்டும் தளர்த்தக் கூடாது என்றும் அவர் கோரியுள்ளார். (இ-7)

# சர்வதேச சதி பற்றி பேசியவர்களுக்கு தற்போது தக்க பதில் கிடைத்துள்ளது

## அஜித் மன்னப்பெரும தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச சதித் திட்டம் பற்றி பேசியவர்களுக்கு நல்ல பதில் கிடைத்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மன்னப்பெரும தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் நல்லாட்சி நடவடிக்கைகளினால் ஐக்கிய நாடுகள் அமைப்பு நெகிழ்வுப் போக்கைக் காட்ட நேரிட்டுள்ளது.

அமெரிக்கா உள்ளிட்ட பலம் பொருந்திய நாடுகளின் ஆதரவு கிடைத்துள்ளது.

சர்வதேச சூழ்ச்சித் தட்டத்தைக் காண்பித்து மக்களின் அனுதாபம் பெற்றுக் கொண்டவர்களுக்கு இன்று அந்த சந்தர்ப்பம் அற்றுப் போயுள்ளது.

கடந்த காலங்களில் உண்மையில் நல்லாட்சி தொடர்பிலான பிரச்சினைகளே காணப்பட்டன என்பது தெளிவாகியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்து மக்கள் எடுத்த புத்திசாதுரியமான தீர்மானத்தின் நலன்களை மக்கள் இன்று அனுபவிக்கின்றனர் என அஜித் மன்னப்பெரும சிங்களப் பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## செயலைச் செய் பலனில் பற்று வைக்காதே!

இரண்டு விவசாயிகள். ஒருவர் கர்மயோகி; மற்றொருவர் சராசரி. சராசரி விவசாயி, கரும்பு பயிரிடுவதை விடக் கஞ்சா பயிரிட்டால் காசு கூட கிடைக்கும் என்றால், பையன் மீது வைத்த பற்றால், வெட்கம் இன்றிக் கஞ்சா பயிர் செய்வார். கர்மயோகி அப்படிச் செய்வாரா? மாட்டார். உழைப்பு அவரது தவம். உழவே அவரது ஜபம். வேள்வியிலிருந்து விலக்க முடியா அக்கினி போல விவசாய பூமியில் இருந்து விலக்கமுடியாதவர் அவர். உழைக்காமல் வரும் காசு அவருக்கு அருவருப்பு தரும். கரன்சி காகிதங்களை மட்டுமே தின்னும் பணப்பசி அவருக்கு இருக்காது.

அந்தக் கர்மயோகியின் விவசாயியின் சாம்ராஜ்யம் விசாலமானது. கலப்பையும் கையுமாக அவர் களத்தில் இறங்கும் போது, கதிரவனே அவரைக் கை நீட்டி வரவேற்கிறான். அந்தக் காலைக் கதிரவன்-ஒரு கர்மயோகியின் வரவுக்காக வானம் வைக்கும் வரவேற்பு வளையம் இவரது கம்பீரத்தில் கால் பங்காவது கஞ்சா பயிரிடுபவன் அனுபவித்தது உண்டா? தேசத்தின் தேவைகளை நெல்லாலும் கோதுமையாலும் நிறைவேற்றும் கடமை உணர்வுமிக்க விவசாயிகள்-கர்மயோகிகள்-பாரதத் தாயின் தவப்புதல்வர்கள். இது கருதியே செயலின் பயனில் ஆர்வம் செலுத்துவோரை விட செயலில் ஆர்வம் காட்டுபவரைக் கீதை கொண்டாடுகிறது. செயலின் பயன் எப்படியும் வரத்தான் போகிறது! அதிலிருந்து விலகி நின்று செயலை நேசிக்க நாம் பழக வேண்டும்.

ஆசார்ய வினோபா பாவே எளிமையாக விளக்கிறார்... "குழந்தை விளையாடுகிறது. அது விளையாடுவதில் உள்ள இன்பத்திற்காகவே விளையாடுகிறது. இதனால் அதற்கு உடற் பயிற்சியின் பயன்தானே கிடைக்கிறது. ஆனால் அப்பயனிடத்தில் அதற்குக் கவனம் இருப்பதில்லை. அதற்கு இன்பம் முழுதும் விளையாட்டிலேதான்"

சமுதாயம் செம்மையாகச் செயற்பட காரியம் முக்கியம். காரியத்தின் விளைவுகளின் மீதுள்ள கற்பனை, எதிர்பார்ப்பு, ஆசை, காரியத்தையே கெடுத்து விடுகிறது! நண்பர்களே, பள்ளிக்கூடத்தில் படித்த பழைய கதை... நினைவிருக்கிறதா? கண்ணாடிப் பொருட்கள் விற்கும் வியாபாரி ஒருவன்... ஓய்வுக்காக மர நிழலில் படுத்தபடி கற்பனை செய்கிறான்.

கூடையில் உள்ள இந்தக் கண்ணாடிப் பொருட்களை நல்ல விலைக்கு விற்றால் நிறைய லாபம் வரும். அதையும் முதலீடு செய்து விற்றால் பலமடங்கு லாபம் வரும். பிறகு பெரிய பணக்காரன் ஆவேன். பணக்காரன் ஆனதும் பணக்காரன் வீட்டில் பெண் எடுப்பேன். அவள் பணத் திமிரால் என்னை அவமதித்தால்... ஆஹா... அவளை இப்படித்தான் எட்டி உதைப்பேன் என்று கூடையை உதைக்க.. ஐயகோ... முதலுக்கே மோசம். அவன் எதிர்காலம் சுக்குநூறானது. செயலின் பயன் மீதான ஆர்வம் கொண்டவர் நிலை, பெரும்பாலும் இந்தக் கண்ணாடி வணிகரின் கதைதான்!

பாடுபட்டு ஒரு செயலைச் செய்து அதன் பலனில் இருந்து விலகி நிற்பது என்பது முடிகிற காரியமா? அப்படியானால் செயலின் பயன் மீது நமக்கு உரிமை கிடையாதா? உண்டு, உண்டு. உரிமை இல்லை என்று கீதை ஒரு போதும் சொல்லவில்லை. முப்பது நாளும் உழைத்துவிட்டு முதலாம் திகதி சம்பளம் வாங்காதே என்கிற விபரீதமான அர்த்தம் அதற்கில்லை. முதலாம்திகதி சம்பளத்திற்காகவே முப்பது நாளும் குப்பை கொட்டாதே என்பதுதான் அதன் ஜீவன்.


மனிதர்களை மூன்று வகையாகப் பிரிக்கிறது கீதை. "ஒரு செயலைச் செய்துவிட்டு பயனை மட்டும் விட்டு விடுவதா... என்னால் முடியாது! செயலையும் விட முடியாது. பயனையும் விட முடியாது. ஏன் நான் பயனை விட வேண்டும்" என்று போராடுவது ரஜோகுணம். பயனை விடுவது என்றால் செய லையும் விட்டு விடுவோம் என்று சோம்பிப் படுப்பது தமோ குணம். செயலைச் செம்மையாகச் செய்துவிட்டு பலனில் பற்றுவையாது விலகி நிற்பது சத்வ குணத்தின் இயற்கை. அசாத்திய துணிவு-உண்மை உணர்வுடைய ஆன்மஞானிகளாலேயே இது முடிகிறது.

உலக வரலாறு படித்தவர்கள் ஓர் உண்மையை அறிவார்கள். உலகெங்கும் தங்கள் மக்கள் விடுதலைக்குப் போராடிய தலைவர்கள் விடுதலை விழாவில் முன்னிற்பர். வெற்றியின் பயனாக விடுபட்ட நாட்டின் தலைமை பொறுப்பு தரப்படும்; அல்லது பெறப்படும். ஆனால் இந்தப் பாரத நாட்டில் தான் விடுதலைப் போரு க்கு தலைமையேற்ற காந்தி மகான் பெற்ற நாட்டின் தலைமையை ஏற்க விரும்பவில்லை.

கொடியேற்றுவிழாவின் கோலாகலங்களில் மாலைக்காகத் தோள்களைத்தயார் செய்து கொள்ளாமல் தேசத்தின் நிர்மாணப் பணிகளுக்கு மக்களைத் தயார் செய்து தம்மை அர்ப்பணித்துக் கொண்டார்.

# புரட்டாதி மாத இராசி பலன்கள்

## 18.09.2015~17.10.2015



### தொழில் வளர்ச்சி மேலோங்கும் நேரம்! அன்பாக உபசரிப்பதன் மூலம் உள்ளத்தில் இடம்பெறும் தனுசு இராசி நேயர்களே

புரட்டாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, ராசி நாதன் குரு பலம் பெற்று செவ்வாயோடும், புதனோடும் இணைந்திருக்கிறார். குருமங்கள யோகத்தின் விளைவாக நீண்டநாட்களாக தாமதப்பட்ட சுபகாரிய நிகழ்வுகள் நடைபெறும். பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். உறவினர் பகை அகலும். உன்னத வாய்ப்புகள் உங்களைத் தேடி வரலாம். வரும் வாய்ப்புகளில் வளர்ச்சிக்குரிய வாய்ப்புகளை நீங்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். நிலையான வருமானத்திற்கு வழிபிறக்கும். நீடித்த நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள்.

குருவின் பரிபூரண பார்வை இப்பொழுது உங்கள் ராசியில் பதிவாகின்றது. அந்த குருவோடு 5, 12இறகு அதிபதியான செவ்வாய் மற்றும் 7, 10 இறகு அதிபதியான புதன் இணைந்திருக்கிறார். 12 ஆம் இடம் என்பது விரயஸ்தானம் ஆகும். 5 ஆம் இடம் என்பது புத்திர ஸ்தானமாகும்.

எனவே பிள்ளைகள் வழியில் விரயத்தைக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் இப்பொழுது கிரக நிலைகளுக்கு உள்ளது.

அந்த அடிப்படையில் ஒன்று கல்யாணத்தை முன்னிட்டு செலவிட்டு மகிழ்வீர்கள். அல்லது பிள்ளைகள் தொழில் தொடங்குவதற்கு மூலதனம் கொடுத்து உதவ நினைப்பீர்கள். பெற்றோர்களின் மணி விழா, குடும்ப மண விழாக்களை நடத்திப் பார்க்கும் சூழ்நிலையும் உருவாகலாம். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு பழைய பொறுப்புகளிலிருந்து விடுபட்டுப் புதிய பொறுப்புகள் கிடைக்கலாம். அல்லது இருக்கும் பொறுப்புகளிலேயே கூடுதலாகச் சில பணிகளை இனம் கண்டு கொள்வீர்கள்.

பொதுவாக ஏழரைச் சனியின் ஆதிக்கம் இப்பொழுது தொடங்கிவிட்டது. முதல்சுற்று நடப்பவர்கள் மிகுந்த கவனத்துடன் செயறபட வேண்டும். இரண்டாவது சுற்று நடப்பவர்கள் முயற்சிகளில் வெற்றி காண்பர். மூன்றாவது, நான்காவது சுற்று நடப்பவர்கள் பரிகாரங்கள் மூலமே பலன்களை பெற இயலும். என்ன இருந்தாலும் சனி பகவானுக்கு எள் தீபம் ஏற்றி வழிபடுவது நல்லது. எள்ளில் பிரியம் வைத்த ஈசன் உங்கள் சொல்லில் பிரியம் வைத்து வரங்களை வழங்குவார்.

**புதனின் வக்ர நிவர்த்தியும், பெயர்ச்சியும்!**

செப்டம்பர் 25 ஆம் தகதி புதன் வக்ர நிவர்த்தியாகிறார். அதன் பின்னர் அக்டோபர் 4 ஆம் தகதி புதன் உச்சம் பெறுவது உங்களைப் பொறுத்தவரை யோகம்தான். தொழில் மாற்ற சிந்தனை மேலோங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் விருப்ப ஓய்வில் தொழில் செய்ய முன்வருவர். வாழ்க்கைத் துணை வழியே பிரச்சினைகள் அகலும். தொழில் நிலையத்தை விரிவுபடுத்தும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். உறவினர்களின் இல்ல விழாக்களை முன்னின்று நடத்தி வைப்பீர்கள். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேருவர். கல்விக் காக எடுத்த முயற்சி கைகூடும். குழந்தைகளின் மேற்படிப்புக்காக நீங்கள் ஏதேனும் முயற்சி செய்திருந்தால் அந்த முயற்சிகளில் அனுகூலம் கிடைக்கும்.




**சிம்ம சுக்ரனின் சஞ்சாரம்!**

செப்டம்பர் 28 ஆம் திதி சிம்மத்தில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாகப் பணிகளில் ஏற்பட்ட தொய்வு அகலும். பெற்றோர்களின் உடல் நலத்தை முன்னிட்டு உத்தியோகத்தில் இடமாற்றம் செய்யும் எண்ணம் மேலோங்கும். ஒரு கடனை அடைக்க மற்றொரு கடனை வாங்கும் சூழ்நிலை ஏற்படலாம். வெளிநாட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நீண்ட தூரப் பயணங்களுக்கான வாய்ப்புகள் வந்தால் உபயோகப்படுத்திக் கொள்வது நல்லது. திசாபுத்தி பலம் பெற்றவர்களுக்கு அந்நிய தேச அனுகூலம் ஏற்படும். இம்மாதம் வியாழன் தோறும் குரு தட்சிணாமூர்த்தியை வழிபட்டு வருவதோடு நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாக, நின்ற கோலத்துப் பெருமாளையும் வழிபட்டு வாருங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் முதல் வாரத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். இரண்டாம் வாரத்தில் எண்ணற்ற நற் பலன்கள் ஏற்படும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். மூன்றாம் வாரத்தில் முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள். தங்கம், வெள்ளி வாங்குவதில் முதலீடு செய்வீர்கள்.

நான்காம் வாரத்தில் நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். குழந்தைகள் நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும். மாதம் முழுவதும் மகிழ்ச்சியளிக்க வியாழன் தோறும் ஒரு நேர விரதமிருந்து உள்ளன்போடு தட்சிணாமூர்த்தியை வழிபட்டு வாருங்கள்.

## தொழில் வளர்ச்சி மேலோங்கும் நேரம்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



### தொடங்கும் பணிகள் துரிதமாக நிறைவேறும்! நிதானத்தோடு செயற்பட்டால் நிச்சயம் வெற்றி பெறலாம் என்று சொல்லும் மகர இராசி நேயர்களே!

புரட்டாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கிற பொழுது மாதத் தொடக்கத்தில் ராசிநாதன் சனி, லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குருவின் பரிபூரண பார்வை 12 ஆம் இடத்தில் பதிகிறது.

எனவே, சுபவிரயங்கள் அதிகரிக்கும். தொழில் சம்பந்தமாக எடுத்த முயற்சியில் ஒரு சில தடைகள் ஏற்பட்டாலும், மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பால் பணிகள் துரிதமாக நடைபெறும்.

இதுவரை தொழில் ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த சனி பகவான் இப்பொழுது லாபஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே அவர் தனாதிபதியாகவும் விளங்குவதால் பொருளாதாரப் பற்றாக்குறையை அகற்ற வேண்டும். அதே நேரத்தில் அஷ்டமத்தில் செவ்வாய் சஞ்சரிக்கிறார். சுகலாபாதி பதியான செவ்வாய் எட்டில் சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதலல. திடீர் திடீரென விரயங்களைக் கொடுக்கலாம். திட்டமிட்ட காரியங்கள் சில திசைமாறிச் செல்லலாம்.

வீண் விரயங்களிலிருந்து விடுபட இதுபோன்ற நேரங்களில் சுபவிரயங்களை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

எனவே, வீடுகட்டிக் குடியேறுவது அல்லது கட்டிய வீட்டைப் பழுது பார்ப்பது உத்தமம். சிலர் தோட்டம், நிலம் வாங்கி விவசாயத்தில் ஈடுபடும் வாய்ப்பு உருவாகும். சகோதரர்களிடையே பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். ஆடை, ஆபரணங்கள் வாங்கி மகிழ்வீர்கள். அடுத்தவர் நலன்கருதி கொடுத்த தொகை மீண்டும் வருவதில் பிரச்சினைகள் உருவாகலாம்.

கைமாற்றலாகக் கொடுத்த தொகைகள் அப்படியே நிற்கிறதே என்று கவலைப்படுவீர்கள். எலும்பு, நரம்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஏற்பட்டு இருப்பவர்கள் மாற்று மருத்துவத்தை மேற்கொள்வது நல்லது. கூட்டு முயற்சிகளில் பங்குதாரர்களின் ஒத்துழைப்பு குறைவாகவே கிடைக்கும்.

3 இல் கேது இருப்பதால் உடன் பிறப்புகளை அனுசரித்துக் கொள்ளுங்கள். முகஸ்துதிக்காக பழகியவர்களை இனம் கண்டு கொள்வீர்கள். வழக்குகளில் திசை திருப்பம் ஏற்படலாம். வருமானப் பற்றாக்குறையை நிவர்த்தி செயய புதிய தொழில் தொடங்கலாமா? என்று சிந்திப்பீர்கள். அஷ்டமத்து குரு மாறும் வரை சற்று பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**புதனின் வக்ர நிவர்த்தியும், பெயர்ச்சியும்!**

செப்டம்பர் 25 ஆம் தகதி புதன் வக்ர நிவர்த்தியாகிறார். 6 இறகு அதிபதி 8 இல் பலம் பெறுவது யோகம் தான். பொதுவாக மறைந்த புதன் நிறைந்த தனலாபத்தை தரும். அவரோடு விரயாதிபதி குருவும் இருப்பதால் பணம் வந்த மறுநிமிடமே செலவாகி விடலாம். மனநிம்மதி குறைவாகவே இருக்கும். எதிரிகளின் பலமும் கூடுதலாக இருக்கும். எதிரிகளை உதிரிகளாக மாற்றும் ஆற்றல் வழிபாட்டிற்கு உண்டு. உங்கள் சுய ஜாதகத்தில் லக்னாதிபதி மற்றும் 6, 8, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியின் பலம் பார்த்து சிறப்பு பரிகாரம் செய்வது நல்லது. அக்டோபர் 4 ஆம தகதி கன்னி ராசியில் புதன் உச்சம் பெறுவதால் தந்தை வழி மனக்கசப்பு மாறும். ஒருசிலருக்கு உத்தியோக மாற்றங்கள் உருவாகலாம்.




**சிம்ம சுக்ரனின் சஞ்சாரம்!**

செப்டம்பர் 28 ஆம் தகதி சிம்மத்தில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகின்றார். இது அவ்வளவு நல்லதல்ல. பெற்றோர்களாலும் பிரச்சினை, பிள்ளைகளாலும் பிரச்சினை, பெண்வழி பிரச்சினைகளும் இணைந்து தலைதூக்கும். மனநிம்மதி கிடைக்க மாலவன் வழிபாட்டையும், மாலமருகன் வழிபாட்டையும் மேற்கொள்ள வேண்டும். நண்பர்களை நம்பி ஏமாறாமல் இருக்க விழிப்புணர்ச்சி தேவை. சில சொத்துக்களை விற்க நேரிடலாம். திடீர் திருப்பங்கள் உத்தியோகத்தில் வந்து சேரும். மற்றவர்களின் அழைப்பை நம்பி சென்ற வேலை திருப்தி அளிக்காது. இம்மாதம் செவ்வாய் தோறும் முருகப்பெருமானை வழிபட்டு வாருங்கள். ஏகாதசியன்று விஷ்ணு வழிபாட்டில் ஆர்வம் காட்டுங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

கூடுதல் செலவுகளை சமாளிக்க வேண்டிய மாதம் இது. உடல் நிலையாலும் செலவு ஏற்படலாம். .வீடு மாற்றச் சிந்தனை மேலோங்கும்.

உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் கெடுபிடிகளுக்கு ஆளாவீர்கள். கணவன்-மனைவிக்குள் பாசமும், நேசமும் குறையாமல் பார்த்துக் கொள்ளுங்கள். வாழ்க்கைத் துணையின் மனம்போல் நடந்து கொண்டால் தினந்தோறும் தீபாவளியாக அமையும்.

குழந்தைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது.

சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். சந்தோஷ வாய்ப்புகள் வந்து சேரும்.

(தொடரும்)


## தொடங்கும் பணிகள் துரிதமாக நிறைவேறும்!

# சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்பட வேண்டியது கட்டாயமே

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

**இந்த நாட்டில் வாழும் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைப்பது கட்டாயமானதாகும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று பிற்பகல் பாராளுமன்றத்தில் விசேட உரையொன்றை நிகழ்த்தியிருந்தார். இதன்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றிய அவர்,

கடந்த காலத்தில் இடம் பெற்ற விரும்பத்தகாத செயல் முறைகள் மீண்டும் நாட்டில் இடம்பெறாதிருக்க வேண்டுமாயின் இந்த நாட்டில் வாழும் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைப்பது கட்டாயமானதாகும் எனத தெரிவித்தார்.

இந்த அரசாங்கம் அனைத்து மக்களுடனும் நியாயமான முறையில் நடந்து கொள்ளும்.

மீண்டும் நாட்டில் பயங்கரவாதம் தோற்றமெடுப்பதற்கு நாம் இடமளிக்கமாட்டோம்.

கடந்த அரசாங்கம் சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதிகள் மற்றும் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கைகளை செயற்படுத்தாமை காரணமாகவே நாடு சர்வதேச ரீதியில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டது.

அதேபோல் முன்னாள் பிரதம நீதியரசரை பதவி விலக்கியமை மூலம் நீதித் துறையின் சுயாதீனத் தன்மை முழுமையாக தகர்த்தெறியப்பட்டது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்தினால் இலங்கை தொடர்பாக தற்போது வெளியிடப்பட்டுள்ள அறிக்கை கடந்த மார்ச் மாதம் வெளியிடப்படவிருந்த நிலையில் நாம் அதனை செப்டெம்பர் வரை பிற்போட்டோம். அதனைத் தொடர்ந்து மார்ச் மாதம் முதல் செப்டெம்பர் வரையான காலப் பகுதியில் சர்வதேசத்துடனும் ஐக்கிய நாடுகள் சபையுடனும் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தி புதிய அரசாங்கத்தின் மீது நம்பிக்கையை ஏற்படுத்தினோம்.

கடந்த காலங்களில் இடம் பெற்ற தவறுகள் மீண்டும் நாட்டில் இடம்பெறாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கு நிர்வாக ரீதியாகவும் மற்றும் நீதித்துறையிலும் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தென்னாபிரிக்காவின் அதிகாரிகளின் ஆலோசனையின் கீழ் நீதியையும் சமரசத்தையும் ஏற்படுத்துவதற்கான ஆணையகம் ஒன்று உருவாக்கப்படும்.

அதேபோல் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஏனைய நாடுகளுடன் இணைந்து இலங்கைக்கு சாதகமான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். இது தொடர்பாக நாம் பாராளுமன்றிற்கு அறியத் தருகின்றோம். அதேபோல் காணாமற போனோரை கண்டறிவதற்கான நிலையம் ஒன்று அமைக்கப்பட இருப்பதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கதெரிவித்தார். (இ-7)


## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 140 | 160 | 120 |
| தக்காளி | 80 | 100 | 100 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 50 |
| கோவா | 70 | 60 | 70 | 70 |
| கரட் | 80 | 60 | 120 | 70 |
| பூசணி | 30 | 30 | 40 | 30 |
| புடோல் | 30 | 30 | 60 | 40 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 80 | 120 | 100 | 70 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 80 | 120 |
| பாகற்காய் | 100 | 40 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 60 | 40 | 80 | 40 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 | 100 | 80 |
| பயற்றங்காய் | 40 | 40 | 60 | 70 |
| லீக்ஸ் | 60 | 100 | 80 | 80 |
| பீற்றூட் | 40 | 20 | 60 | 40 |
| கறிமிளகாய் | 80 | 100 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 80 | 120 |
| போஞ்சி | 150 | 150 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | 50 | 30 | 60 | 70 |
| கீரை - 1 பிடி | 30 | 10 | 20 | 70 |
| தேசிக்காய் | 80 | 100 | 200 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40-60 | 40-45 | 50 |
| இராசவள்ளி | 100 | 200 | -- | -- |
| வெங்காயப்பூ | 200 | 180 | 200 | 120 |
| முள்ளங்கி | 40 | 40 | 60 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 10 | 30 | 20 |
| வல்லாரை | 10 | 10 | 10 | 20 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like (497)

Search for people, places and things   Nagendram   Home

அருள் ஒளி





கோபிகிருஷ்ணா கோபி




எயிப்ட் குயின்




டிலானி புவி




சர்மிலா சர்மி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தனது ஆதரவுத் தளத்தைப் பலப்படுத்துவதற்கு இந்தியாவின் உதவி இலங்கைக்குத் தேவை

**21 ஆம் திகதி வெளியான கட்டுரையின் தொடர்ச்சி...**

இந்தியாவின் கூட்டணி ஆட்சி முடிவடைந்துள்ள போதிலும், இலங்கையில் நிலவும் இனமுரண்பாடுகள் இந்தியாவின் தமிழ்நாட்டு அரசியலில் மட்டுமல்லாது இதன் தேசிய பாதுகாப்பு நலனிலும் தொடர்ந்தும் தாக்கம் செலுத்தும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதே.

புவியியல் ரீதியாக இந்தியாவும் இலங்கையும் மிகவும் நெருக்கமானவை. ஆகவே இவற்றின் தேசிய பாதுகாப்பு நலன்கள் மிகவும் பாராட்டத்தக்கவையாகும். இதுவே இவர்கள் தமக்கிடையிலான உறவைக கட்டியெழுப்புவதில் முக்கிய பங்காற்றுகின்றது.

இலங்கையின் தற்போதைய அரசாங்கமானது இந்தியாவால் ஆதரவளிக்கப்படும் 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு ஏற்ப தமிழர் பிரதிநிதிகளுடன் பேச்சுக்களில் ஈடுபடுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. இருப்பினும் இத்திருத்தச் சட்டத்தின் பிரகாரம் மாகாண சபைகளிடம் காணி மற்றும் காவற்துறை அதிகாரங்களைக் கையளிப்பதானது இலங்கையின் அரசியலைப் பொறுத்தளவில் மிகவும் கடினமான ஒன்றாகும்.

இந்தியா மற்றும் மேற்குலகைப் பொறுத்தளவில் மகிந்த ராஜபக்ஷ சீனாவைத் தனது நாட்டிற்குள் வரவேற்றமையானது இவற்றின் கேந்திர மூலோபாய அதிகாரத்திற்கு சவாலாக விளங்கியது. குறிப்பாக மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவுடன் இந்திய மாக்கடலில் சீனா தனது செல்வாக்கை நிலைநிறுத்த முயற்சித்தமையானது இந்தியாவின் தேசிய நலன்களுக்கு சவாலாக எழுந்தன.

இந்திய மாக்கடலின் ஊடாக சீனா தனது கடல்சார் வர்த்தகத்தை விரிவுபடுத்தியது. அத்துடன் ஆசிய-பசுபிக் பிராந்தியத்தில் குறிப்பாக இந்திய மாக்கடலில் சீனா தனது கடற்படைத் தளத்தை நிறுவியதானது இந்தியாவின் தேசிய பாதுகாப்பிற்கு குந்தகம் விளைவித்துள்ளது.

இதற்கு மகிந்த ராஜபக்ஷவே காரணம் என்பதால் இலங்கையுடனான இந்திய உறவு கடந்த சில ஆண்டுகளாக விரிவடைந்திருந்தது. தற்போது சிறிசேன மற்றும் விக்கிரமசிங்க ஆகியோர் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் இவர்கள் சீனாவைவிட இந்தியாவுடனேயே உறவை நீட்டித்துக் கொள்ள முனைகின்றனர்.

இலங்கையைப் பொறுத்தளவில் சில விவகாரங்களில் இந்தியாவின் உதவியும் அதன் புரிந்துணர்வும் மிகவும் அவசியமானதாகும். இலங்கை தொடர்பாக ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா தலைமையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமானது கடந்த மூன்று ஆண்டுகளாக ஆராயப்பட்டு வரும் வெள்ளியன்று இறுதி வடிவாக்கப்படவுள்ளது.





ஆகவே இலங்கை மீதான அறிக்கையை ஐ.நா மனித உரிமை ஆணையகம் வெளியிடப்பட்ட பின்னர் இலங்கையைப் பொறுத்தளவில் இதற்கு இந்தியாவின் உதவியும் புரிந்துணர்வும் மிகவும் இன்றியமையாத ஒன்றாக இருக்கும். அமெரிக்காவின் தலைமையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போதிலும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் உதவியுடன் இலங்கையில் உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை அமைப்பதற்கு அமெரிக்கா உடன்பட்டுள்ளது. ஆகவே இலங்கை இது தொடர்பில் தனது ஆதரவுத் தளத்தைப் பலப்படுத்துவதற்கு இந்தியாவின் உதவி தேவைப்படுகிறது.

அமெரிக்காவின் நகர்வானது தமிழ் நாடு, புலம்பெயர் தமிழ் மக்கள் மத்தியில் அரசியல் விமர்சனத்திற்கு உட்பட்டுள்ள போதிலும் அனைத்துலக விசாரணைக்குப் பதிலாக உள்நாட்டு விசாரணைக்கு இந்தியா எப்போதும் ஆதரவளித்துள்ளது. இந்த வகையில் அமெரிக்காவால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானத்திற்கு இந்தியாவும் ஆதரவளிக்கும் என நம்பப்படுகிறது.

இந்தியா-இலங்கை வர்த்தக உறவு இரண்டாவது விவகாரமாகும். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கான தனது சுற்றுப்பயணத்தை மேற்கொண்ட போது, முழுமையான பொருளாதார உடனப்பாட்டில் கைச்சாத்திடுவதற்கான கருத்தை முன்வைத்திருந்தார். இந்த உடன்பாடானது 2008 இல் மகிந்த ராஜபக்ஷவால் முன்னெடுக்கப்பட முற்பட்ட போது சிறிலங்காவின் உள்நாட்டு வர்த்தகர்களின் எதிர்ப்பால் இது கைவிடப்பட்டது.

தற்போது இலங்கை பொருளாதார ரீதியான சவால்களை எதிர்கொண்டுள்ளது. சீனாவின் கடன்களை இலங்கை ஈடுகட்டுவதற்கு அனைத்துலக நாணய நிதியம் தனது பக்க ஆதரவை வழங்குவதில் பெரிதளவில் ஆர்வம் காண்பிக்கவில்லை.

இதனால் பொருளாதார நெருக்கடிக்குட்பட்டுள்ள இலங்கையானது இந்தியாவின் கைகளை இறுகப்பற்ற வேண்டிய தேவையுள்ளது.

எனினும், வெளிப்படையாக இந்தியாவின் முழுமையான பொருளாதார உடன்பாட்டிற்கு ஆதரவளிப்பதென்பது இலங்கையின் அரசியலில் எதிர்ப்பை ஏற்படுத்தும் என்பதால் இதனை நடைமுறைப்படுத்துவதில் சில சிக்கல்கள் ஏற்படலாம். இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட இலங்கைப் பிரதமர் முழுமையான பொருளாதார உடனபாடு தொடர்பாக முன்னுரிமைப்படுத்தியுள்ளதாக இலங்கையின் பிரதி வெளியுறவு அமைச்சர் ஹார்சா டீ சில்வா தெரிவித்திருந்தார்.

எது எவ்வாறிருப்பினும், இது போன்ற உடன்படிக்கைகளை இந்தியா போன்ற நாடுகளுடன் இலங்கை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ளதாகவும், ஆனாலும் கண்மூடித்தனமாக இவ்வாறான உடன்படிக்கைகளைச் செயற்படுத்தத் தொடங்கக்கூடாது எனவும் இதனை முழுமையாக ஆராய்ந்து கடந்த காலங்களில் பெற்றுக்கொண்ட அனுபவங்களை முன்னுதாரணமாகக் கொண்டு இவ்வாறான பொருளாதார உடன்படிக்கைகளில் கைச்சாத்திட வேண்டிய தேவையுள்ளதாக ஹார்சா டீ சில்வா மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கு நலன் பயக்கக்கூடிய இருதரப்பு அல்லது பல்தரப்பு வர்த்தக உடனபடிக்கைகளில் கைச்சாத்திடுவதற்கான உந்துதல் அளிக்கப்பட வேண்டும் எனவும் பிரதி வெளியுறவு அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (முற்றும்)

(ஹரிகரன்!)

# இலங்கையின் கலாசாரம், தேசியம் மற்றும் கலாசார ரீதியிலான தேசியம்?

**நேற்றைய தொடர்ச்சி...**

1987-89 களில் அவர்களது இரண்டாவது முயற்சியானது 'இனரீதியான தேசியவாதத்திற்கு' ஆதரவாக தமது முன்னைய 'சிங்கள-பௌத்த தேசியவாதத் திட்டத்தை' திசை திருப்பி செயற்படுத்தியதாக அமைந்தது. இவர்களது முன்னைய தேசியவாத அரசியல் அந்தஸ்துக்கான ஆயுதப் போரினை ஆதரித்தோர்கூட இவர்களது செயற்பாடுகளுக் காக இவர்களை ஒருபோதும் மன்னிக்கப் போவதில்லை. தமது பழைய வழிமுறைகளுக்கும் முன்னைய சுலோக எழுச்சி முறைகளுக்கும் எதிர்காலத்தில் 'JVP' வெற்றி கரமாகத் திரும்பும் என அவர்கள் நம்பப்போவதுமில்லை.

மேலும் அவர்களது எதிர்பார்ப்புகளுக்கும் அப்பாற்பட்ட விதமான ஒரு உயர் தலைவர் எதிர்காலத்தில் போட்டியிடுவதற்கான வாய்ப்புமில்லை 'JVP' தனது முன்னைய போக்கிலேயேதான் போக வேண்டியிருக்கும். 'இலங்கைத் தேசியம்' பற்றி இவர்களுக்கிருக்கும் இயல்பான தடுமாற்றங்கள் அங்கலாப்புகள் மத்தியிலுங்கூட இக்கோட்பாட்டிற்கான இவர்களது மெய்ப்பொருள் 'சிங்கள தேசியமேதான்'!

'இலங்கைத் தமிழர் சமூகத்திலும் சரி இதைவிட வேறெதுமில்லை'! அதாவது 'இலங் கைத் தமிழர்' என்ற அதே அந்தஸ்துதான். தேசிய சமநிலையொன்றைப் பேணுவதற்கான மற்றுமொரு பாகுபாடு அடையாளங் காணப்பட்டாலுங்கூட 'இடதுசாரி ஓநாய்'களை நெருங்கவிடாது நாட்டைப் பாதுகாத்துக் கொள்வதற்கான அதுவுங்கூட மொழி ரீதியான ஒன்றாகவேதான் இருக்கும். இந்த 'உலகளாவிய கம்யூனிஸத்தை' இடதுசாரி ஓநாய்களாகவே சுதந்திர உலகம் அடையாளங்கண்டு வைத்துள்ளது. மேற்படி குறைபாட்டிற்கான ஒரே மாற்று வழியும் இதுவேதான். எப்படியும் அப்படியாக இது அமைந்து விடப்போவதுமில்லை.

### இனத்துவ கலாசாரம்?

நாட்டின் மொழி வழித் தரப்புகள் இரண்டிலும் அந்தந்த இனக் கலாசாரத்தின் தூய்மையைப் பேணிக் கொள்வதே இதற்கான அடிப்படையாக இருக்கிறது. இதன் சாராம்சம் என்னவென்றால் வலிய இனத்தின் கலாசாரம் மட்டுமென்றில்லாமல் வலிமை குறைந்த இனங்களின் கலாசாரமும் அதனதன் அந்த ஸ்துங்கூடவே அவற்றுக் கேற்ற விதத்தில் பேணப்பட வேண்டும். இங்கு மீண்டும் மீண்டும் நடந்து கொண்டிருப்பது என்னவென் றால் பெரியதும் அடையாப்படுத்தப்பட்டதுமான மக்கள் இன மொன்று தேசியத்திலிருந்து புறக்கணிக்கப்பட்டதாயிற்று.

இந்த பாகுபாடானது இரு தரப்புகளதும் கலாசாரத்தை முக்கியத்துவப்படுத்தும் மனோ நிலைக்கு மென்மேலும் வலிமையூட்டிற்று. இந்த போக்கு முதலில் அரசியல் ரீதியாக 'இனத் துவ தேசியம்' என்ற வடிவத்தைப் பெற்றது. போர் நடந்து கொண்டிருந்த காலத்திற் போலவே போருக்குப் பிந்திய யுகத்திலும் அதற்கு முன்னரும் ங்கூடவே தேசிய பிரச்சினைக் கான தீர்வொன்றை தேடும்போது ஏதோவொரு காரணத்திற்காக இந்த பிரச்சினையை அடையாளங் காண்பதற்காக கலா சார ரீதியிலான தேசியத்துடனேயே அதனை ஒப்பீடு செய்யும் போக்கே (கேள்வி க்கிடமில்லாத வகையில்) காணப்படுகிறது.

எனவே இதற்கான பெறு பேறுகளை எல்லோரும் வெளி யரங்கமாகவே காணக் கூடியதாக இருக்கிறது. இருந்தாலும் அதன் பொருள் தெளிவாகவே தெரியும் விதத்தில் எல்லோ ருமே அதனைக் கண்டுகொள் ளப்போவதுமில்லை.

அதாவது, 'இனத்துவ தேசியம்' என்பது ஆகக்கூடுதல் அடிப் படையான 'பொருளாதாரத் தேசியத்திற் கும்' நாட்டின் அனைத்து மக்களையும் அரவணைத்து செல்லும் 'இலங்கைத் தேசியத்திற்கு' வழியை ஏற்படுத்திக் கொடுப்பதாகவே இருக்க வேண்டும். (முற்றும்)


**-தமிழில்.யோகர்-**


# கடல் நீரை நன்னீராக்கும் புதிய திட்டம் முதன்முறையாக நெடுந்தீவில் அறிமுகம்

## வடமாகாண சபையின் பங்களிப்புடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் நிறைவேற்றப்பட்ட திட்டம்

யாழ்ப்பாணம் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினர் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் வறுமைக் குறைப்பிற்கான ஐப்பானிய நிதியம் என்பன வற்றின் நிதியுதவியுடன் நெடுந்தீவு மக்களின் குடிநீர் தேவையினை நிறைவு செய்யும் முகமாக கடல் (உவர்) நீரை நன்னீராக்கும் திட்டத்தின் பின்னோக்கிய பிரசாரணம் (Reverse Osmosis) முறையிலான இரண்டு பொறிகளை அமைத்து வெற்றி பெற்றுள்ளனர்.

நெடுந்தீவு பிரதேசம் 8 கி.மீ நீளத்தையும் 6 கி.மீ அகலத்தையும் கொண்ட 48 சதுர கிலோ மீற்றர் பரப்பளவையு டைய ஒரு தீவு மட்டுமன்றி ஏனைய தீவுகளை விட கடற்பரப்பில் அதிக தூரத்தில் அமைந்திருக்கும் ஒரு பின்தங்கிய இடமாகவும் வரலாற்று முக்கியத்து வத்தினையுடைய சுற்றுலாத் துறையினரை ஈர்க்கின்ற மீன்பிடித் தொழிலை பிரதானமாகக் கொண்ட ஒரு தீவாகவும் காணப்படுகின்றது. இதற்கு முன்னர் இங்கு நன்னீர் கிடைக்கும் ஒரே ஒரு மூல மாக சாராப்பிட்டி மற்றும் மணற்கிணறு மட்டுமே காணப்பட்டது.





ஆரம்பத்தில் யாழ். மாவட்டத்தின் குடிநீர் பிரச்சினையை நிவர்த்தி செய்வதற்கான திட்டமிடலில் யாழ் மாவட்டத்தின் 3 இலட்சம் பேருக்கான குடிநீரைப் பெறுவது பற்றியே சிந்திக்கப்பட்டது.

அப்போது யாழ்ப்பாணத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை கொள கலன்களில் அடைத்து நாளாந்தம் படகு மூலம் நெடுந்தீவுக்கு அனுப்புவதே சிறந்ததாகக் கருதப்பட்டது. குறிகாட்டுவானில் இருந்து 14 கி.மீ தூரத்தில் அல்லது 7 கடல் கி.மீ தூரத்தில் கடலின் வழியே நெடுந்தீவுக்கு-குழாய் வழி நீர் விநியோகம் சாத்தியமற்றதாகக் காணப்பட்டமையே இதற்குக் காரணமாகும்.

இங்கு நீர் குழாய்களமைப்பது மற்றும் அதில் பழுது ஏற்படும் போது அதனைக் கண்டறிந்து திருத்தம் செய்வது என்பது பொறியியலாளர்களைப் பொறுத்தவரை பாரிய பிரச்சினையாகக் காணப்பட்டது.

ஆயினும் எவ்வளவு காலத்திற்கு இவ்வாறு நெடுந்தீவுக்கு குடிநீரை வள்ளத்தில் அல்லது தோணியில் அனுப்பிக் கொண்டிருப்பது? இதற்கான செலவீனங்கள் கால நிலை மாற்றம், போக்கு வரத்துப் பிரச்சினை மற்றும் ஆளணிப் பிரச்சினை போன்றவற்றைக் கருத்திற் கொண்டு நெடுந்தீவுக்கான கடல் நீரை சுத்திகரித்து நன்னீராக்கும் திட்டம் சிறந்த ஒரு திட்டமாக முன்மொழியப்பட்டு தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகால மைப்புச்சபை, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐப்பானிய வறுமைத்தணிப்பு நிதியம், வடமாகாண சபை மற்றும் நெடுந்தீவு பிரதேசசபை என்ப வற்றால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதன் மூல மாக இன்று இத்திட்டம் வெற்றி கரமாக நிறைவேற்றப்பட்டு ள்ளது. நெடுந்தீவின் இறங்கு துறைக்குச் சமீபமாக பிடாரி முனை எனும் இடத்தில் அமைக்கப்பட்டுள்ள கடல் நீர் சுத்திகரிக்கும் பொறி கம்பீரமாக இயங்குகின்றது.


இத்திட்டத்தினால் நெடுந்தீவில் வாழும் 4,530 பேர் கடுமையாக நீண்டகால மாக எதிர்நோக்கிய குடிநீர்ப் பிரச்சினை முடிவுக்கு வந்திருக்கின்றது. இத்திட்டத்திற்கு 102 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இதன் நாளாந்த நன்னீர் உற்பத்தித்திறன் 50 கியூபிக் மீற்றர்கள் ( 50 x 1000 = 50,000 லீற்றர்கள்) உடைய பொறியினால் தற்பொழுது நன்னீர் உற்பத்தி செய்யப்ப டுகின்றது.

இது நெடுந்தீவு மக்களின் குடிநீர்த் தேவைக்குப் போது மானதாகும். அபிவிருத்தி மற்றும் தூரநோக்கின் அடிப்படையில் எதிர்காலத்தில் இதன் உற்பத்தித்திறனை 100 கன மீற்றர்களாக அதிகரிப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி இத் திட்டத்தின் மூலம் பெறப்படும் நீர் இலங்கைதர நிர்ணய சபை யினால் பரிந்துரைக்கப்பட்ட தரத்தினை (SLS 614:2013 Publication) விட சிறந்தது மட்டுமன்றி உலக சுகாதார தரநிர்ணயத்துடனும் ஒத்துப் போகின்றது.

மேலும் இச் செயற்பாடானது நாளாந்தம் துறைசார் வல்லு நர்களின் கண்காணிப்பினூடே விநியோகிக்கப்படுவதுடன் தற்போது பரீட்சார்த்தமாக இயங்கி வரும் இப்பொறியிலிருந்து மக்கள் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை தரையில் அமைக்கப்பட்ட நீர்த் தாங்கியிலிருந்து நீரை பெறக்கூடியதாகவுள்ளது. வெகுவிரைவில் வீடுகளுக்கான குழாய் வழி குடிநீர் விநியோகம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தினை நடைமு றைப் படுத்தும் போதும் அதனை பாவனைக்கு விடப்பட்டதிலிருந்தும் முழுமையான கண்காணிப்பு இடம் பெற்று வருகின்றது. அத்துடன் சுற்றுச்சூழல் அதிகார சபை, கடலோர பாது காப்புத் திணைக்களம் என்ப வற்றின் அனுமதி பெற்றே இச் செயற்பாடு நடைமுறைப்படு த்தப் பட்டு வருகின்றது.

அதுமட்டுமன்றி கடல் நீரை நன்னீராக்கும் போது வெளிவிடப்படும் உப்புச் செறிந்த நீரானது மீண்டும் கடலில் விடப்படுகின்றது. நீரோட்டத்தின் அளவு அதிகமாகக் காணப்படுவதனால் உப்பு நீரானது இலகுவாக கடல் நீருடன் கலப்பதுடன் மீனினங்களுக்கும் எந்தவித அச்சுறுத்தல்களும் இல்லை.



அத்துடன் மீள கடலில் விடப்படும் நீரானது து றை சார் வல்லுநர்களால் தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து தொலைவில் அமைந்து பின்தங்கிய பிரதேசமாகக் க்ருதப்பட்ட நெடுந்தீவு பிரதேசம் யாழ் மாவட்டத்திலேயே முதலில் நன்னீர் பெறுகின்ற இடமாக மாற்றமடைய கடல் நீரை சுத்திகரிக்கும் பொறி உதவியுள்ளதுடன் இதன் மூலம் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் ஏற்பட வாய்ப்பளித் திருக்கின்றன. அதாவது உயர் தொழில் நுட்பம் சார் கைத் தொழிற்றுறையினரைக் கவரும் அதேநேரம் சுற்றுலாத்துறை மற்றும் உட்கட்டுமான அபி விருத்திக ளில் வளர்ச்சி ஏற்படும். இத்திட்டத்திற்கு நெடுந்தீவு மக்கள் ஆரம்பம் முதல் திட்ட இறுதி வரை தங்க ளது முழு ஆதரவினை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

யாழ்.மாவட்டத்தில் மட்டுமன்றி இலங்கையிலேயே முதல் முறையாக கடல் நீரை சுத்திகரித்து தரமான நீரைப் பெறும் இடமாக இன்று நெடுந்தீவு விளங்குகின்றது. அதுமட்டுமன்றி குடிநீர் மூலம் ஏற்படும் நோய்களான சிறுநீரக செயலிழப்பு மற்றும் சிறுநீரகக் கல் போன்றன நெடுந்தீவில் கட்டுப்படுத்தப்படுவதுடன் நிலத்தடி நீரும் பாதுகாக்கப்படும். மேலும் வேலை நிமித்தம் அல்லது சுற்று லாவுக்காக நெடுந்தீவுக்குச் செல்பவர்களும் குடிநீர் தேடி அலைய வேண்டியதில்லை.

நீருக்குப் போட்டி காணப்படும் வட மாகாணம் போன்ற குடிநீர்ப் பற்றாக்குறை காணப்படும் பிரதேசங்களுக்கு இக்கடல் நீரை சுத்திகரித்து வழங்கும் திட்டமே சிறந்த தீர்வாக அமையும் என்பதற்கு இத்திடடம் ஒரு முன்மாதிரியாகும்.

"நீரின்றி அமையாது இவ்வுலகு"

"சுத்தமானதும் பாதுகாப் பானதுமான குடிநீரைப் பெறுவது ஒவ்வொரு தனிமனிதனதும் உரிமையாகும்"



# சிறுவர் அரங்கம்

1247

## நண்பேன்டா!

நண்பேன்டா!

ஜிம்மியும் மின்னியும் வீட்டில் தனியாக இருந்தன.

"ஜிம்மி வர்றியா ஏதாவது சாப்பிடலாம்!"

வீட்டைக் காவல் காத்துக் கொண்டிருந்த நாயை நான்காவது முறையாக அழைத்தது பூனை.

"ஐயோ நான் டயட்டில இருக்கேன்.

ஐயா, உனக்கு இங்க சாப்பாடு வச்சிட்டுப் போயிருக்கார். போய்ச் சாப்பிடு" என்றது ஜிம்மி.

"அடப் போப்பா! பாலும் தயிரும் சாப்பிட்டு சலிப்பா இருக்கு!

இன்னிக்கி ஐயா சாப்பிடற மீன் வறுவலை ஒரு பிடிபிடிக்கப் போறேன்!"



நாக்கைச் சப்புக்கொட்டிய படி சொன்னது மின்னி.

"அடப்பாவி!

வேணாம்... நாக்கால ஒரு நல்ல மனுசனோட அன்பை இழந்துடாத!

அப்புறம் உன்னால எனக்கும் கெட்ட பேர் வந்துடும்" என்ற ஜிம்மியை எச்சரித்தது மின்னி.

"பயப்படாத நண்பா...

நான் சாப்பிட்ட சுவடே தெரியாது.

நீ வேணா பாரேன், இன்னிக்கு சமைச்சோமா இல்லையான்னு அவரே குழம்பிடுவார்! எப்படி என் திட்டம்?"

"ம் ஹு"ம் நல்லா இல்ல"

"ஆனா, மீன் வறுவல் நல்லா இருக்குமே" என்றபடி பாத்திரத்தைத் திறந்து சாப்பிட ஆரம்பித்தது மின்னி.

"அடடா, என்ன ருசி! என்ன ருசி! நீயும் ஒண்ணு சாப்பிடேன்..."

"வேணாம்ப்பா... நான் வரலை இந்த விளையாட்டுக்கு" என்றபடி வாசல் பக்கம் சென்று தன் இடத்தில் நின்று கொண்டது ஜிம்மி.

மதியம் வீட்டுக்குச் சாப்பிட வந்த மூர்த்தி, மேஜையில் பாத்திரம் காலியாக இருப்பதைப் பார்த்து அதிர்ந்து போனார்.

ஜிம்மியையும் மின்னியையும் அழைத்தார்.

"இங்க இருந்த மீன் வறுவல் எங்கே?"

ஜிம்மியும் மின்னியும் ஒன்றை ஒன்று பார்த்துக் கொண்டன. சொல்லிவிடாதே என்பது போல ஜிம்மியைப் பார்த்து, கண்களால் கெஞ்சியது மின்னி. (தொடரும்)




- 1529 - ஒட்டோமான் பேரரசன் முதலாம் சுலைமான் வியென்னா மீது படையெடுத்தான்.
- 1641- ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருட்களுடன் த மேர்ச்சண்ட் ராயல் என்ற கப்பல் மூழ்கியது.
- 1799 - இலங்கையில் அரச ஆணைப்படி சித்திரவதை, மற்றும் கொடூரமான தண்டனைகள் நிறுத்தப்பட்டன. மத சுதந்திரம் அமுலுக்கு வந்தது.
- 1821 - திரிப்பொலீச்சாவை கிரேக்கர்கள் தாக்கி 30,000 துருக்கியரைக் கொன்றனர்.
- 1846 - நெப்டியூன் கோள் பிரெஞ்சு வானியலாளர் உர்பெயின் ஜோசப் மற்றும் பிரித்தானிய வானியலாளர் ஜோன் அடம்ஸ் ஆகியோரால் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1868 - புவெர்ட்டோ ரிக்கோவில் ஸ்பானிய ஆட்சியாளருக்கெதிராக கிளர்ச்சி ஆரம்பமானது.
- 1884 - ஹேர்மன் ஹொலரித் கணிப்பானுக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1889 - நின்டெண்டோ கம்பனி ஆரம்பிக்கப்பட்டது.
- 1932 - ஹெஜாஸ் மற்றும் நெஜிட் ஆகிய மன்னராட்சிகள் சவுதி அரேபியா என்ற பெயரில் இணைந்தன.
- 1941 - நாசிகளின் அவுஷ்விட்ஸ் வதை முகாமில் நச்சுவாயுக் கொலைகள் முதற்தடவையாகப் பரிசோதிக்கப்பட்டன.
- 1965 - இந்திய-பாகிஸ்தான் போர், 1965 முடிவுக்கு வந்தது.
- 1966 - நாசாவின் சேர்வெயர் 2 விண்கலம் சந்திரனின் கோர்ப்பனிக்கஸ் என்ற இடத்தில் மோதியது.
- 1980 - பாடகர் பொப் மார்லி தனது கடைசி நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.
- 1983 - இலங்கை மட்டக்களப்பு சிறைச்சாலையில் சிறைவைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியற் கைதிகள் சிறையை உடைத்துத் தப்பித்தனர்.
- 1986 - இலங்கை கொழும்பில் தேசிய இயற்கை வரலாற்று நூதன சாலை பொதுமக்களுக்குத் திறந்துவிடப்பட்டது.
- 2002 - மொசிலா பயர் பாக்ஸ், இணைய உலாவி வெளிவந்தது.
- 2004 - எயிட்டியில் சூறாவளி மற்றும் வெள்ளம் காரணமாக 1,070 பேர் கொல்லப்பட்டனர்.

பிறப்புக்கள்

- கி.மு 63 - அகஸ்ட்டஸ், ரோமப் பேரரசன் (இ. 14)
- 1215 - குப்லாய் கான், மங்கோலியப் பேரரசன் (இ. 1294)
- 1930 - ரே சார்ல்ஸ், அமெரிக்கப் பாடகர் (இ. 2004)
- 1939 - ஹென்றி புளோஃபெல்ட், ஆங்கிலேயத் துடுப்பாளர்
- 1941 - நவநீதம்பிள்ளை, தென்னாபிரிக்க நீதிபதி, முன்னாள் ஐ.நா மனித உரிமை ஆணையாளர்
- 1957 - குமார் சானு, இந்தியப் பாடகர்
- 1971 - முயீன் கான், பாக்கித்தானியத் துடுப்பாளர்

இறப்புகள்

- 1939 - சிக்மண்ட் பிராய்ட், ஆத்திரிய மருத்துவர் (பி. 1856)
- 1951 - பி. யு. சின்னப்பா, தமிழ்த் திரைப்பட நடிகர், பாடகர்
- 1968 - பியட்ரல்சினாவின் பியோ, இத்தாலியப் புனிதர் (பி. 1887)
- 1973 - பாப்லோ நெருடா, சிலி கவிஞர், இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்றவர் (பி. 1904)

### நவநீதம்பிள்ளை



நவநீதம்பிள்ளை (Navanethem Pillay, செப்டம்பர் 23, 1941 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தென்னாபிரிக்காவைச் சேர்ந்த நீதிபதி ஆவார். இவர் பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றத்தில் 2003 ஆம் ஆண்டு முதல் நீதிபதியாகப் பணியாற்றி வருகிறார்.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட இவர் செப்டம்பர் 1, 2008 முதல் நான்கு ஆண்டு காலத்துக்கு இப்பதவியில் பணியாற்றினார்.

1941 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் டர்பன் நகரில் பிறந்த ஒரு இந்திய குடிவழித் தமிழரான நவநீதம்பிள்ளையின் தந்தை ஒரு பேருந்து ஒட்டுநர். ஜனவரி 1965 இல் இவர் காபி பிள்ளை என்னும் வழக்கறிஞரை மணந்தார். 1982 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் முதுகலை பட்டம் பெற்று 1988 இல் முனைவர் பட்டமும் பெற்றார்.

1967 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவின் நட்டால் மாகாணத்தின் முதலாவது பெண் சட்டத்தரணியாக அவர் பணியாற்றத் தொடங்கினார். அவர், தென்னாபிரிக்க விடுதலைப் போராளிகளுக்கும், அவரது கணவர் உட்பட்ட தென்னாபிரிக்க விடுதலைச் செயற்பாட்டாளர்களுக்கும் ஒரு பாதுகாவலராக கடமையாற்றியவர்.

1973 இல் நெல்சன் மண்டேலா ரொபன் தீவு சிறையில் அடைக்கப்பட்டிருந்த போது அவரை வழக்கறிஞர்கள் சந்திப்பதற்கு வெற்றிகரமாக வாதாடி வெற்றி பெற்றார்.

1992 இல் பெண்கள் உரிமைக்காகப் போராடும் "சமத்துவம் இப்போது" (Equality Now) என்ற அமைப்பைத் தோற்றுவித்தார். 1995 இல் தென்னாபிரிக்காவின் மேல் நீதிமன்றத்தில் நீதிபதியாக நியமிக்கப்பட்டார். இவ்வாறு நியமிக்கப்பட்ட முதலாவது இந்திய குடிவழித் தமிழ்ப் பெண்மணி இவரே.

ஜூலை 24, 2008 இல், ஐ.நா பொதுச் செயலர் பான் கி மூனால் நவநீதம்பிள்ளை ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளராக பதவியில் இருந்து விலகும் லூயிஸ் ஆர்பர் இற்குப் பதிலாகப் பரிந்துரைக்கப்பட்டார் ஜூலை 28, 2008 இல் இடம்பெற்ற ஐ.நா பொது அவையின் சிறப்பு அமர்வில் இவரது நியமனம் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

2003 இல் இவருக்கு பெண்கள் உரிமைக்கான முதலாவது குரூபர் பரிசு வழங்கப்பட்டது

நுகத்தடி இல்லா வண்டியையும் கடிவாளம் இல்லா குதிரையும் செலுத்த இயலாது. - ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# கடற்றொழிலாளர்கள் சங்கம் நிதானமாக நடக்க வேண்டும்

இலங்கைக் கடற்பகுதிக்குள் அத்துமீறி இந்திய மீனவர்கள் வருவதைக் கண்டித்து கடற்றொழிலாளர் சங்கங்கள் ஒன்றிணைந்து இன்று அறவழிப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளன.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள், அதிலும் குறிப்பாக வடபுலத்துக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதால், வடபுலத்து கடற்றொழிலாளர்கள் சொல்லொணாத் துன்பத்தை அனுபவிக்கின்றனர்.

இது தொடர்பில் இந்தியப் பிரதமர் மோடி வரை முறையீடு செய்யப்பட்டு விட்டது. ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்ற செய்திகள் வந்து கொண்டிருகின்றனவாயினும் அத்துமீறல்கள் இன்னமும் நின்றபாடில்லை. எனவே இந்திய மீனவர்களின் இலங்கைக் கடல் பிரவேசம் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்பதுடன் இந்த விடயத்தை இரு நாட்டு மத்திய அரசுகளும் ஒருமித்து விரைவாகச் செய்வது அவசியம்.

அதேநேரம் இலங்கைக் கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்களின் அத்துமீறல் என்பதற்குள், எங்கள் தமிழகச் சகோதரர்களும் சம்பந்தப்படுவதால் இது தொடர்பில் மிக நிதானமான போக்கை நாம் கடைப்பிடிப்பது மிகவும் அவசியமானதாகும்.

எனவே இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து வட மாகாண கடற்றொழிலாளர்கள் செய்கின்ற அறவழிப் பேரணி மிகவும் நிதானமாக இடம்பெற வேண்டும் என்பது அனைவரதும் விருப்பமாகும்.

ஏனெனில் நடைபெறும் பேரணியில் தமிழக சகோதரர்களுக்கு எதிராகக் கோஷம் எழுப்புவதற்கு சில தீய சக்திகள் முனையலாம்.

இலங்கையில் நடந்த போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியவர்கள் தமிழகத்தில் இருக்கக் கூடிய எங்கள் சகோதரர்கள். தமிழக சட்ட சபையில் அனைத்துக் கட்சிகளும் இணைந்து ஏகமனதாக எடுத்த தீர்மானம் என்றால் அது எங்களுக்கானதாகவே இருக்க முடியும்.

இது தவிர, எங்கள் இனத்தின் அவலம் கண்டு தன்னுயிரை நீத்த சகோதரன் முத்துக்குமாரு உள்ளிட்ட தமிழக உடன் பிறப்புக்களின் தியாகங்களுக்கு நாம் எந்த வகையிலும் மாசு கற்பித்து விடக் கூடாது.

இலங்கைத் தமிழினத்தின் ஒரே பலம் தமிழக சகோதரர்கள் என்பதை நாம் ஒருபோதும் மறந்து விட முடியாது.

இது தவிர ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் ஜெனிவாவில் நடந்து கொண்டிருக்கையில், இலங்கை தொடர்பான விவகாரங்கள் விவாதிக்கப்படவும் வாக்கெடுப்புக்கு விடப்படவும் இருக்கின்ற வேளையில், இந்திய மீனவர்களுக்கு எதிராக நடத்துகின்ற பேரணியை அமைதியாக நடத்துங்கள் என்பதே நம் தாழ்மையான கோரிக்கை.

ஏனெனில் நாங்கள் அறவழியில் பேரணிகளை நடத்த, அதனை வேறு திசையில் திருப்பி எங்களுக்கும் தமிழகத்துக்கும் இருக்கக் கூடிய உறவுகளை சிதைக்கச் சில தீய சக்திகள் முனையலாம் என்பதால்; ஏற்பாட்டாளர்கள் மிகவும் நிதானமாக–அமைதியாக–கோஷங்களைத் தவிர்த்து தங்கள் கோரிக்கைகளை முன்வைப்பதே உகந்ததாகும்.

# தியாகப் பெருநாளான ஈதுல் அல்ஹாவை கொண்டாடுவோம்

துல்ஹஜ் பத்து பிறந்துவிட்டது. ஹஜ்ஜுப் பெருநாள் மலர்ந்துவிட்டது. தக்பீர் முழங்குகிறது. மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் இஸ்லாமிய சுலோகம் தான் இனிய தக்பீராகும்.

“அல்லாஹு அக்பர்.....அல்லாஹு அக்பர்...லாஇலாஹ இல்லல்லா அல்லாஹு வல்லாஹு அக்பர்.... அல் லாஹு அக்பர்...வலில்லாஹில் ஹம்து...”

புனித ஹஜ் கடமையானது இஸ்லாத்தில் ஐந்தாவது கடமையாகும். வசதி படைத்த செல்வந்தர்களுக்கு மட்டுமே கடமையாக்கப்பட்டுள்ளது. வசதி படைத்த செல்வந்தர்கள் அனைவரும் கண்டிப்பாக புனித ஹஜ்ஜை நிறைவேற்றியாக வேண்டும். சக்தியிருந்தும் புனித ஹஜ்ஜை நிறைவேற்றாமலிருப்பது பெரும் குற்றமாகும்.

ஹஜ்ஜுக்கான ஒன்றுகூடல், முஸ்லிம் உம்மத்தின் ஐக்கிய உணர்வை பறைசாற்றும் சர்வதேசளவிலான வருடாந்த மாநாடாக கணிக்கப்படுகிறது. தொழுகையில் ஆரம்பிக்கும் முஸ்லிம் உம்மத்தின் ஐக்கியமும் ஒருமைப்பாடும் ஹஜ் ஒன்றுகூடலில் மேலும் வலுப் பெறுகிறது.

நபி (ஸல்) அவர்களின் வருகைக்கு முன் வாழ்ந்த ஜாஹிலிய்யா காலத்து மக்கள் கூட இவ்வழிபாட்டில் ஈடுபட்டு வந்தனர். இணைவைப்போடு மூட நம்பிக்கைகளும் அனாச்சாரங்களும் நிறைந்த ஒரு வழிபாடாகவே இது இருந்து வந்தது. இது ஒரு வழிபாடு என்பதை விடவும் அரேபிய தீபகற்ப மக்கள் ஒன்று கூடும் வியாபார சந்தையாகவே திகழ்ந்தது என்றால் மிகையாகாது.

நபி (ஸல்) அவர்களின் வருகைக்குப் பின் இந்நிலை முற்றாக மாற்றப்பட்டு இணைவைப்பும் மூட நம்பிக்கைகளும் அனாச்சாரங்களும் முற்றாக அகற்றப்பட்டு வருடாந்தம் ஒன்று கூடும் சர்வதேச இஸ்லாமிய சமத்துவமும் சகோதரத்துவமும் உள்ளடக்கிய மாநாடாக அமையப்பெற்றது.

அல்லாஹ்வின் கட்டளையை இதயத்தில் இறுக்கமாய் கொண்டு, எத்தனையோ காலங்களாக “இல்லையே தமக்கொருபிள்ளை” என ஏங்கித் தவித்து இன்னல் பல கண்டு இறுதியில் அன்புடனும் ஆசையுடனும் பெற்றெடுத்த அருமை மகன் இஸ்மாயில் (அலை) அவர்களை அல்லாஹ்விற்காக பலியிடத் துணிந்த இப்ராஹீம் (அலை) அவர்களின் உயர்வான, ஒப்பற்ற மனதையும், ஒரு மாபெரும் தத்துவத்தையும் இந்த ஹஜ்ஜுப் பெருநாள் எமக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கின்றது.

ஹஜ் கடமையை நிறைவேற்றும் போது நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் குடும்பமே நம் மனக்கண் முன் நிழலாடும். இஹ்ராம் கட்டுதல், கஃபாவை வலம்வருதல், ஹஜருல் அஸ்வத் கல்லை முத்தமிடல், ஸபா, மர்வா மலைகளுக்கிடையில் ஓடுதல், புனிதம் நிரம்பிய ஸம்ஸம் நீர் அருந்துதல், அரபாவில் தரித்தல், குர்பான் கொடுத்தல், மினாவில் கல்லெறிதல் போன்ற அனைத்து கிரியைகளிலும் நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் தியாகம் பிரதிபலிக்கின்றன.

எமது நாட்டின் இறைச்சிக் கடைகள் தொடர்பான உள்ளூராட்சி அமைப்புகளுக்கான கட்டளைச் சட்டம் அமுலில் உள்ளதோடு அதன் பிரகாரம் இறைச்சியின் பொருட்டு கால்நடைகளைக் கொல்வதற்குப் பாதுகாப்பான கொல்களம்களிலேயே அறுக்கப்பட வேண்டும் என்ற நியதியும் உண்டு. உழ்ஹிய்யாவின் பொருட்டு மிருகங்களை அறுப்பதற்காக அவ்வப் பிர தேச உள்ளூராட்சி அமைப்புகளின் அதிகாரிகளுடன் பேசி, அதற்காக செலுத்த வேண்டிய சிறுகட்டணங்களையும் செலுத்தி, பாதுகாப்பான முறையில், சுற்றாடலுக்கும் சுற்றாடலிலுள்ள பிற சமூகத்தவர்களுக்கும் தொந்தரவில்லாதவாறு இக் கடமையை நாம் நிறைவேற்ற வேண்டும்.

பல்லின மக்கள் வாழும் இந்த நாட்டில் சிறுபான்மையினராகிய நாம் பிற மத உணர்வுகளுக்கு மதிப்பளித்து புரிந்துணர்வுடனும் சகிப்புத் தன்மையுடனும் புனித ஹஜ்ஜுப் பெருநாளை கொண்டாடுவோம்.

எமது நாட்டில் உழ்ஹிய்யா சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படாமல் நிமமதியாகவும் மன சந்தோஷத்துடனும உழ்ஹிய்யா கொடுக்கும் நிலைமை ஏற்பட வேண்டும் என்று அல்லாஹ்விடம் பிரார்த்திப்போமாக! ஆமீன்!!

அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பால் (ஜே.பி)
யாழ்ப்பாணம்

# பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்க மாகாண சபையில் விசேட செயலணி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகளை அரச நியமனங்களுக்குள் உள்வாங்குவதற்கு விசேட செயலணியொன்றினை உருவாக்குவது என வட மாகாண சபையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ் விசேட செயலணியூடாக நாடு முழுவதிலுமுள்ள அரச வெற்றிடங்களுக்கு வடக்கு மாகாண பட்டதாரிகளினையும் உள்வாங்குமாறு ஜனாதிபதி மற்றும் பிரதமரினை கோருவது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் மாதாந்த கூட்டத்தொடர் நேற்றையதினம் நடைபெற்ற நிலையில் முன்னதாக பட்டதாரிகள் மாகாண சபை முன்பாக ஆர்ப் பாட்டமொன்றினை முன்னெடுத்திருந்தனர்.

இதனையடுத்து சபை ஆரம்பமாகிய போது மீன்பிடி அமைச்சர் டெனீஸ்வரன் பட்டதாரிகள் தொடர்பில் விசேட தீர்மானமொன்றினை கொண்டு வந்திருந்தார்.

இதன்போது மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இவ் விசேட செயலணி வாராவாரம் பட்டதாரிகளினை சந்தித்து அவர்களது பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்தல்.

மாகாணம் மற்றும் நாடளாவிய ரீதியில் காணப்படும் அரச வெற்றிடங்களை இனங்கண்டு அவற்றுக்கு வடக்கு பட்டதாரிகளினையும் உள்வாங்கல்.

குறிப்பாக வடக்கு மாகாண அமைச்சுக்களின் கீழ் உள்ள திணைக்களங்களில் பல பிரிவுகளினை ஏற்படுத்தி அவற்றுக்குள் பட்டதாரிகளினை உள்வாங்கல் எனப் பல முடிவுகள் எட்டப்பட்டன. (எ-4)

# காணாமல் போனோர் தொடர்பில் உண்மைகளை மறைக்காதீர்கள்

## காணாமல் போனோரின் குடும்ப ஒன்றியம் கோரிக்கை

காணாமல் போனோர் தொடர்பில் உண்மை அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு தமிழ் மக்கள் அச்சமின்றி சாட்சியம் வழங்க வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பாதுகாப்பு முறையொன்றினை அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்ய வேண்டும் என காணாமற் போனவர்களின் குடும்ப ஒன்றியத்தின் தலைவர் பிரிட்டோ பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை குறிப்பிடப்பட்டுள்ள சிவில் யுத்தத்தின் இறுதி கட்டத்தின் போது உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை குறித்து காணாமல் போனோர் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மெக்ஸ்வெல் பரணகம நிராகரித்தமை தொடர்பில் சிங்கள ஊடகமொன்று வினவிய போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்டவர்,

மன்னார் ஆயரான இராயப்பு ஜோசப் கூறுவதனை போன்று யுத்த பாதுகாப்பு வலயத்துக்குள் நுழைந்தவர்களின் எண்ணிக்கைக்கும் வெளியேறிவர்களின் எண்ணிக்கைக்கு இடையில் வித்தியாசம் உள்ளதனை காணமுடிகின்றது.

அத்துடன் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தினால் இந்த ஆணைக்குழு சர்வதேசத்திடம் காண்பிப்பதற்காக நியமிக்கப்பட்டதனை தவிர உண்மையை உண்மையாக காண்பிப்பதற்கு அல்ல.

எனவே அந்த ஆணைக்குழுவின் மீது நம்பிக்கை வைப்பது கடினமான ஒரு விடயமாகும்.

அதே காலகட்டத்தில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்ய வந்தவர் மீது பல்வேறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டது.

அதனால் பாதிக்கப்பட்டவர்களில் அநேகமானவர்கள் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு முன் வந்து முறைப்பாடு செய்யவில்லை. இந்நிலையின் போது காணாமல் போனோர் தொடர்பில் உண்மை தகவல்களை சாட்சியளிப்பதற்கு மக்களுக்கு தடை ஏற்படாத வகையில் முறையொன்றினை ஏற்பாடு செய்வது மக்களின் கடமையாகும் என்றார். (எ-11)

## பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### முதலில் கடவுளைத் தேடு



✦ முதலில் கடவுளைத் தேடு. அதன்பின், உலகப் பொருட்களை தேடி செல்லலாம்.


✦ எல்லா மனிதர்களிடத்திலும் கடவுள் இருக்கிறார். ஆனால், கடவுளிடத்தில் எல்லா மனிதர்களும் இருப்பதில்லை.


✦ மனிதப்பிறவி கிடைப்பதற்கு அரிதானது. இதை பயன்படுத்தி கடவுளை அறிய முற்படுங்கள்.

✦ கடவுளின் திருநாமத்தை இடைவிடாது ஜெபித்தால் உடல், மனம் எல்லாம் தூய்மை பெறும்.

✦ நம்பிக்கை ஆழமானால் கடலையும் தாண்டலாம்.

✦ ராம நாமத்தின் மீது கொண்ட நம்பிக்கையால் அனுமன் இதை சாதித்தான்.



# டார்வின், நிறோஜன், செல்ரன் அதிரடி சென்றலைட்ஸ் அணி வெற்றி

ஸ்ரீலங்கா கிரிக்கெட் பிரிவு III இற்கான கிரிக்கெட் போட்டியில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகத்தை வென்றது சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம்.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் 50 ஓவர்களில் 389 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பாட்டத்தில் சென்றலைட்ஸ் சார்பாக டார்வின் 2 ஆறு ஓட்டம், 14 நான்கு ஓட்டம் உட்பட 92 ஓட்டத்தினையும் நிறோஜன் 8 ஆறு ஓட்டம், 4 நான்கு ஓட்டம் உட்பட 86 ஓட் டத்தினையும் செல்ரன் 8 ஆறு ஓட் டம், 5 நான்கு ஓட்டம் உட் பட 82 ஓட்ட த்தினையும் கிசாந்தன் 3 ஆறு ஓட் டம், 4 நான்கு ஓட்டம் உட்பட ஆட்ட மிழக்காமல் 62 ஓட்டத்தினையும் பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் ஜொனியன்ஸ் அணி சார்பாக அகிலன் 10 ஓவர்கள் பந்து வீசி 55 ஓட்டத்தினை விட்டுக் கொடுத்து 3 விக்கெட்டினையும் பிருந்தா பன் 10 ஓவர்கள் பந்து வீசி 51 ஓட் டத்தினை விட்டுக் கொடுத்து 3 விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

390 ஓட்டங்கள் என்ற கடின இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் 19.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டினையும் இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் ஜொனியன்ஸ் சார்பாக அகிலன் 21 ஓட்டத்தினையும் அன்புஜன் 9 ஓட்டத்தினையும் காண்டீபன் 8 ஓட்டத்தினையும் பெற் றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் சென்றலைட்ஸ் அணி சார்பாக கிசாந்தன் 6 ஓவர்கள் பந்து வீசி 12 ஓட்டத்தினை விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டினையும் டார்வின் 4.4 ஓவர்கள் பந்து வீசி 21 ஓட்டத்தினை விட்டுக் கொடுத்து 3 விக்கெட்டினையும் மயூரன் 6 ஓவர்கள் பந்துவீசி 35 ஓட்டத்தினை விட்டுக்கொடுத்து 3 விக் கெட்டினையும் கைப்பற்றினர். (கு)

# பார்வையாளர்களுக்கு வினோத விளையாட்டு



சைனிங்ஸ் விளையாட்டுக்கழகத்தின் 58ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட கழகத்திற்கிடையிலான இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப்போட்டியில் பார்வையாளர்களுக்கு நடைபெற்ற விநோதவிளையாட்டுமாவில்தேசிக்காய் எடுக்கும் போட்டியில் வல்வை ரேவடி விளையாட்டுக்கழக வீரர் பிறேம்ராஜ் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டார்.(கு)






வல்வெட்டி கருணாநிதி முன்பள்ளியின் 2015 ஆம் ஆண்டுக்கான பாலர் விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்ற போது...

# கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழக மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி




## கலைஒளி, நெற்கொழு சம்பியன்



கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்திய துடுப்பாட்ட சுற்றுப்போட்டியின் 8 ஓவர் கொண்ட போட்டியில் நெற்கொழு கழுகுகள் அணியினை வெற்றி பெற்று சம்பியனானது இணுவில் கலையொளி விளையாட்டுக்கழகம். இச்சுற்றுப்போட்டியில் கலையொளி வீரர்களான சதீசன் ஆட்டநாயகனாகவும் கோகுலராஜ் தொடர் ஆட்டநாயகனாகவும் தெரிவாகினர்.

அதேபோல 5ஓவர் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியில் நெற்கொழு கழுகுகள் அணி சம்பியனாகியது. இரண்டாமிடத்தை இணுவில் கலையொளி விளையாட்டுக்கழகம் பெற்றுக்கொண்டது.

இப்போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரராக பிரதீஸ்சும் போட்டியின் ஆட்டநாயகனாக கலையொளி வீரர்களான மோகனராஜ்ஜும் தெரிவாகினர். (கு)

# அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட போட்டி முடிபுகள்

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் கடந்த 3 நாட்களாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இதன் இறுதிப்போட்டி முடிவுகள் வருமாறு,

19 வயதுப் பிரிவு ஆண்கள் பிரிவில் கொழும்பு ஸாஹிரா கல்லூரி முதலாமிடத்தையும் நீர்கொழும்பு சென்.மேரிஸ்ரெலா கல்லூரி இரண்டாமிடத்தினையும் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மூன்றாமிடத்தையும்

19வயதுப் பிரிவு பெண்கள் பிரிவில் பொல்கஹவெல பராக்கிரமபாகு ம.வி முதலாமிடத்தையும் குருநாகல் மலியதேவா பெண்கள் கல்லூரி இரண்டாமிடத்தையும் கேகாலை பெண்கள் கல்லூரி மூன்றாமிடத்தையும்

15வயதுப் பிரிவு ஆண்கள் பிரிவில் ஏறாவூர் அலிகஹார் தேசிய பாடசாலை முதலாமிடத்தையும் அநுராதபுரம் சென்.ஜோசப் கல்லூரி இரண்டாமிடத்தையும் கிண்ணியா மத்திய கல்லூரி மூன்றாமிடத்தையும்

17வயதுப்பிரிவு ஆண்கள் பிரிவில் வென்னப்புவ சென்.ஜோசப் வாஸ் கல்லூரி முதலாமிடத்தையும் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி இரண்டாமிடத்தையும் கொழும்பு ஸாஹிரா கல்லூரி மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன. (கு)

# தூக்கிலிடும் பணியை மேற்கொள்ளத் தயார்

## பெண் ஒருவர் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் வெற்றிடமாக உள்ள தூக்கிலிடுபவருக்கான பணியை ஏற்றுக்கொள்ள பெண்ணொருவர் சம்மதம் தெரிவித்துள்ளார்.

பாரிய குற்றச்செயல்களில் ஈடுபடுவோருக்கு விதிக்கப்படும் மரண தண்டனையை நிறைவேற்ற அலுகோசு எனப்படும் தூக்கிலிடுபவர் இல்லாத காரணத்தால் நீண்டகாலமாக இலங்கையில் தூக்குத் தண்டனை நடைமுறைப்படுத்தப்படுவது இல்லை.

பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளைக் கட்டுப்படுத்த இலங்கையில் மீண்டும் தூக்குத்தண்டனையை அமுல்படுத்த வேண்டும் என்ற கோசம் பல தரப்பிலிருந்தும் எழத் தொடங்கியுள்ளது.

அவ்வாறு தூக்குத்தண்டனையை நடைமுறைப்படுத்த சிறைச்சாலைகள் திணைக்களமும் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளது.

இந்நிலையில் தூக்கிலிடும் பணியை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதாக கொட்டதெனியாவ பிரதேச பெண்ணொருவர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டுள்ளார். சிறுமி சேயாவின் மரணம் தன்னை அந்தளவு பாதித்து விட்டதாகவும், இதுபோன்ற குற்றச்செயல்களில் ஈடுபடுவோர் கண்டிப்பாக தூக்கிலிடப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-12)

# ஜேர்மன் அமைச்சர் கிளிநொச்சிக்கு



ஜேர்மன் நாட்டின் வெளிவிவகார அமைச்சர் நேற்று கிளிநொச்சிக்கான விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார். நேற்று பிற்பகல் 3 மணியளவில் கிளிநொச்சிக்கு வந்த அவர் அறிவியல் நகர் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் ஜேர்மன் டெக் தொழிற்பயிற்சி கட்டட தொகுதியைப் பார்வையிட்டார்.

தேசிய திறன் விருத்தி ராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார, வட மாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜா உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டனர். (எ-15)

# வேலையற்ற பட்டதாரிகள் வட மாகாண சபை முன் மறியல்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் தமக்கு அரச நியமனம் வழங்கக் கோரி வடக்கு மாகாண சபையினை முற்றுகையிட்டு நேற்று போராட்டம் நடத்தியுள்ளனர்.

நேற்று காலை 9 மணியளவில் முன்னெடுக்கப்பட்ட இப் போராட்டத்தில் 500 இற்கும் மேற்பட்ட பட்டதாரிகள் கலந்து கொண்டு தமது கோரிக்கையினை முன் வைத்துள்ளனர்.

இப்போராட்டத்தின் போது வடக்கு மாகாண சபையின் பிரதான வாயிலை வழிமறித்த பட்டதாரிகள் சபைக்குள் யாரும் உட்செல்ல முடியாதவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

நேற்றைய தினம் மாகாண சபையின் மாதாந்த அமர்வு இடம்பெற்ற நிலையில் பட்டதாரிகள் வாயிலை வழிமறித்து போராட்டத்தில் ஈடுபட்டதனால் சுமார் ஒரு மணிநேரம் வரையில் முதலமைச்சர் மற்றும் உறுப்பினர்கள் மாகாண சபைக்கு வெளியே காத்து நிற்க வேண்டியேற்பட்டது.

தமக்கு உரிய பதிலை வழங்கிவிட்டு மாகாண சபை உள்ளே செல்லுமாறு வழிமறித்த பட்டதாரிகள் முதலமைச்சரின் உறுதி மொழியினையடுத்து உள்ளே செல்ல அனுமதித்தனர்.

இப் போராட்டத்தினால் வட மாகாண சபை முன்பாக நேற்றைய தினம் பதற்ற நிலை காணப்பட்டிருந்தது.

இதேவேளை இது தொடர்பில் ஆலோசிப்பதற்கு ஒரு மாத கால அவகாசம் தருமாறு அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் பட்டதாரிகளிடம் கோரியிருந்தார்.

எனினும் இதனை ஏற்கமறுத்த பட்டதாரிகள் உடனடி தீர்வு வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தி தமது எதிர்ப்பினை தொடர்ந்தனர். இதன்போது அமைச்சர்களான டெனீஸ்வரன், சத்தியலிங்கம் மற்றும் உறுப்பினர்களான கஜதீபன், றிஃப்கான் ஆகியோர் தலையிட்டு பட்டதாரிகளை ஒரு சுமுகத்துக்கு கொண்டு வந்தனர்.

பின்பு மாலை 5 மணியளவில் வட மாகாண பட்டதாரிகளின் பிரதிநிதிகள் மற்றும் அமைச்சர்கள், உறுப்பினர்கள் சந்திப்பினையடுத்து போராட்டத்தினை தற்போது நிறுத்திக் கொள்வது என்ற முடிவு எட்டப்பட்டுள்ளது.

இப் போராட்டத்தின் போது வடக்கு மாகாண சபை உறுப்பினர்களினை பட்டதாரிகள் கடுமையாக விமர்சித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

# 15 இந்திய மீனவர்கள் பருத்தித்துறையில் கைது

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் பருத்தித்துறைக்கு அண்மித்த கடற்பகுதியில் நேற்று அதிகாலை இந்திய மீனவர்கள் 15 பேர், இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரண்டு படகுகளில் அத்துமீறி இலங்கை கடற்பரப்பிற்குள் உட்பிரவேசிக்கும் போதே இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

மேலும் கைது செய்யப்பட்ட மீனவர்கள், பருத்தித்துறை பொலிஸார் ஊடாக யாழ்.கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இதேவேளை இந்திய மீனவர்களின் அத்துமீறலை கட்டுப்படுத்துவதற்கு உடன் நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென வட மாகாண கடற்றொழிலாளர் இணையம், யாழ். மாவட்ட கிராமிய கடற்றொழில் அமைப்புக்களின் சம்மேளனம் மற்றும் யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் ஆகியன இணைந்து இன்று புதன்கிழமை அறவழிப் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-12)

# அடையாள அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

இளநிலா குடியிருப்பு முழங்காவிலைச் சேர்ந்த சின்னவன் நிம்ராஜ் (901473412V) என்பவருடைய தேசிய அடையாள அட்டை அடங்கிய பேஸ் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரத்தைக் காட்டி வலம்புரி காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். (எ-12)

# சித்த மருத்துவ மாநாடும் கண்காட்சியும் நாளை கிளிநொச்சியில் ஆரம்பம்

(கிளிநொச்சி)

வட மாகாண சுதேச மருத்துவ திணைக் களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சித்த மருத்துவ மாநாடும் கண்காட்சியும் நாளை 24 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகும்.

மாகாண மூலிகைக் கிராமம் அமைந்துள்ள கல்மடு நகர், கிளிநொச்சியில் நடைபெறும் இம் மாநாடும் கண்காட்சியும் தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெறும்.

முற்பகல் 10 மணி முதல் மாலை 6 மணி வரை இக் கண்காட்சியை மக்கள் பார்வையிட முடியும். (ந)


# ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

திருமதி சந்திரசேகரம்

பவானிதேவி



தோற்றம் 18.8.1956

இறப்பு 17.9.2010

எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மை
விட்டு பிரிந்து ஆண்டுகள் ஐந்து ஆனாலும்
அகலுமா உங்கள் பிரிவின் துயரம்-மறையுமா
உங்கள் நினைவுகள், ஆண்டுகள் பல சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எம்முடன் வாழ்ந்து
கொண்டேயிருக்கும். நாம் இன்றுபோல் என்றும்
வாழ உங்கள் ஆசியை வேண்டி நிற்கின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்
வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

தகவல்: பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளை.
51, பல்கலைக்கழக வீதி,
திருநெல்வேலி.

(1865)

## 5 ஆண்டு அபி...

தயாரித்து அவற்றுக்கான நிதிகளை அந்தந்த அமைச்சுக்களினூடாக வழங்கி வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளது. வேலைத திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் அளவில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் எதிர்வரும் 5 வருட காலத்தினுள் நடைபெறவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஜனாதிபதி அலுவலகத்தின் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்க்த்துக்குமான அலுவலக அதிகாரிகளுடனான கலந்துரையாடல் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

இக் கலந்துரையாடலின் முடிவில் யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் எதிர்வரும் 5 ஆண்டுகளில் நடைபெறவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக விரிவான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் எதிர்கால திட்டங்கள் தொடர்பான முன்மொழிவும், பொதுமக்களுடைய கருத்துக்களும் கோரிக்கைகளும் பதிவுசெய்யப்பட்டன.

இத்திட்ட முன்மொழிவில் யாழ்.மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள குடிநீர் பிரச்சினை, மக்களின் வாழ்வாதாரம், வீடமைப்பு, மீள்குடியேற்றப்பட்ட பகுதிகளின் கட்டுமானப் பணிகள், யாழ். மாவட்டம் முழுவதும் உள்ள வீதிகளின் புனரமைப்பு, வேலைவாய்ப்பு போன்ற தேவைகள் எம்மால் குறிப்பிடப்பட்டன.

இவற்றில் விரைவாக செயற்படுத்தப்பட வேண்டிய திட்டங்களை இணங்கண்டு அவற்றை முன்னுரிமை அடிப்படையில் செயற்படுத்துவதற்கு தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் முயற்சி செய்துள்ளது.

இச் செயற்திட்டங்களுக்கான நிதியை ஒதுக்கீடு செய்து அந்தந்த அமைச்சுக்களினூடாக குறித்த அபிவிருத்தியை யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலக பணிப்பாளர் சந்திரசேன மாலியத்த, தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலக ஆளுநர்சபை உறுப்பினர்கள், திட்டமிடல் திணைக்களத்தின் அலுவலர்கள், பிரதேச செயலர்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் திணைக்கள அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ-9)




O/L உடன் UK Certified Business & Hotel Management with ENGLISH Beginner's Level Advanced Learners IELTS Preparatory

கற்கைநெறியில் இணைந்து - 6 மாதங்களில் உள்நாட்டில் தொழில்வாய்ப்பு *

OR

சுவிஸ், நியூசிலாந்து, சிங்கப்பூர், மலேசியா சென்று இலட்சக்கணக்கில் சம்பாதியுங்கள் (பயிற்சிக்காலத்தில் 15000 ரூபாய் வரை சம்பாதிக்கலாம்!)

Student Visa – Work Visa – PR
Arrangements for Engineering – Medicine – IT – Business & Many More Education Streams

SIKARAM Any Visa to Any Country

இதுவரை கற்கைநெறியில் இணைந்து பயன்பெற்றவர்கள் பற்றி அறிந்துகொள்ள

www.sikaram.lk

Tel: 077 36 16 798 / 021 222 00 11

Sikaram Institute of Hospitality & English
#275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்தில் இருந்து 100m



பணிநிலை வேண்டுகை

கணனி பக்க வழவமைப்பாளர் (ஆண்/பெண்)
Graphics Designer

நேரச்சு பழகுனர் (ஆண்)
Offset Machine Helpers

புத்தகம் கட்டுனர் (ஆண்/பெண்)
Book Binder

(சு-2275)

முன்னனுபவமுள்ளவர்கள் மட்டும்
23ஆம் திகதி தொடக்கம் 26 ஆம் திகதி வரை
நேரில் வரவும்

கரிகணன்
வடக்கின் அச்சகதாரர்

இல. 681, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P : +94 21 222 2717/ 8
+94 21 222 2737



உள்ளூராட்சி மன்றத் தேர்தல்

யாழ்.மாவட்ட தேர்தல் தொகுதியில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிட விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தொடர்பு கொள்ளவும்.

இல.80 ஏ,
கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(1855)


## ஐ.நா விசாரணை...

கொண்ட எந்தவொரு நாடும் இவ்வாறான ஓர் அறிக்கையை ஏற்றுக்கொள்ளாது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் கொள்கைகள் நியதிகளுக்கு முரணான வகையில் இலங்கை தொடர்பில் விசாரணை நடத்தப்பட்ட காரணத்தினால் தமது அரசாங்கம் எந்தவிதமான ஒத்துழைப்பையும் விசாரணைகளுக்கு வழங்கவில்லை

இலங்கை தொடர்பில் சுயாதீன விசாரணைக் குழு நிறுவி விசாரணை நடத்தப்படவில்லை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கான நிதியும் அதிகளவில் மேற்குலக நாடுகளினால் வழங்கப்பட்டு வருவதாகவும், இதனால் நிறுவனத்தின் சுயாதீனத்தன்மை குறித்து திருப்தி அடைய முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கோ அல்லது ஆணையாளருக்கோ போர்க்குற்றவியல் நீதிமன்றை உருவாக்க முடியாது.

பாதுகாப்புப் பேரவையின் ஊடாகவே போர்க் குற்றவியல் நீதிமன்றத்தை உருவாக்க முடியும். அதற்கு சீனாவும் ரஷ்யாவும் ஆதரவளிக்காது.

நெதர்லாந்தின் ஹேக் நகரில் அமைந்துள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கைக்கு எதிராக வழக்குத் தொடர முடியாது. ஏனெனில ரோம் பிரகடனத்தில் இலங்கை கைச்சாத்திடவில்லை.

இலங்கையர்களை போர்க்குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தக் கூடிய ஒரேயொரு வழி ஐக்கிய நாடுகள் அமைப்புடன்இணைந்து இலங்கையில் கலப்பு நீதிமன்றமொன்றை அமைப்பதேயாகும்.

எனவே இவ்வாறான ஓர் திட்டத்துக்கு இடமளிக்கக் கூடாது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

(எ-11-12)


வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1582


## சுன்னாகத்தில்...

சேர்ந்தவர்களையும், அவர்களுக்கு அடைக்கலம் கொடுப்பவர்கள், அவர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்களைத் தேடிக் கண்டுபிடித்து கைது செய்வதற்கான நடவடிக்கைகள் உடனடியாகவே ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்.மேல்நீதிமன்றத்தில் நீதிபதி இளஞ்செழியன் முன்னிலையில் ஆஜராகிய யாழ் மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ஏ.எம்.பெரேரா தெரிவித்துள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவு மட்டுமல்லாமல், அதற்கு அண்மையில் உள்ள ஏனைய பொலிஸ் பிரிவுகளையும் உள்ளடக்கி விசேட அதிரடிப்படை பொலிசாரின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்காக நீதிமன்றத்தின் உத்தரவுகள் இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றது. குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள், மற்றும் குற்றச் செயல்கள் சம்பந்தமாகத் தேடப்படுபவர்களையும் கைது செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அத்துடன் கண்காணிப்பு நடவடிக்கைக்காக விசேட அதிரடிப்படையினருடைய மோட்டார் சைக்கிள் அணியின சுற்றுக்காவல் நடவடிக்கையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

சுன்னாகம் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்களின் அமைதியான வாழ்க்கையும் பாதுகாப்பும் யாழ்ப்பாணம் பொலிசாரினால் உறுதிப்படுத்தப்படும் என யாழ் மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ஏ.எம்.பெரேரா யாழ் மேல் நீதிமன்ற நீதிபதியை நேரடியாகச் சந்தித்து நீதிமன்ற உத்தரவையடுத்து விசேட அதிரடிப்படை பொலிஸாரைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து விளக்கமாக எடுத்துக் கூறியுள்ளார்.

இதனையடுத்து சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்குத் தொடர்ந்து ஈடுபட்டு, குற்றச் செயல்களில் ஈடுபட்ட அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என நீதிபதி இளஞ்செழியன் தமது முன்னிலையில் ஆஜராகிய யாழ் மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ஏ.எம்.பெரேராவிடம் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், சுன்னாகம் பொலிஸ் பொறுப்பதிகாரி உட்பட மற்றைய பொலிஸ் உத்தியோகத்தர்களின் திறமையற்ற புலன் விசாரணைகளில் அவதானம் செலுத்தி பொறுப்பு வாய்ந்த உயரதிகாரிகளின் ஆலோசனையின் பேரில் அவை தொடர்பாக மேல் நடவடிக்கை எடுக்குமாறும் நீதிபதி யாழ் மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சுன்னாகம் நகரில் கடையொன்றினுள் பட்டப்பகலில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தையடுத்து அச்சத்தில் மூழ்கியிருந்த சுன்னாகம் நகர்ப் பகுதி கடந்த திங்கட்கிழமை பிற்பகல் தொடக்கம் விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிசாரின் தேடுதல், கண்காணிப்பு மற்றும மோட்டார் சைக்கிள் ரோந்து நடவடிக்கைகளினால் சுறுசுறுப்படைந்திருப்பதாக அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர். (எ-4)

## 400 குற்றவாளி...

தயாரிக்கப்பட்டுள்ளது.

எனினும் இது தொடர்பான தகவல்களை வழங்கிய சாட்சிகளின் விபரங்கள் 2032-ம் ஆண்டு வரை வெளியிடப்படாது என்பதன் காரணமாக சாட்சியங்களின் நம்பகத்தன்மையில் பலத்த சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் குறித்த இணையத்தள செய்திகள் தெரிவிக்கின்றன. (எ-12)

## ஜனாதிபதி இன்று...

மைத்திரிபால சிறிசேன தலைமையிலான குழுவினர் இன்று புதன்கிழமை நியூயோர்க் செல்லவுள்ளனர்.

இந்தக் குழுவில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ, மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், திறன் விருத்தி, தொழிற்பயிற்சி அமைச்சர் மகிந்த சமரசிங்க மற்றும் வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநர்கள் உள்ளிட்ட 30 பேர் இடம்பெற்றுள்ளனர்.

இந்தப் பயணத்தின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். (எ-12)

## வடக்கு மாகாணசபை...

வடக்கு மாகாணசபையின் மாதாந்த கூட்டத் தொடர் நேற்று நடைபெற்றது அதன் போது முதலாவதாக பட்டதாரிகள் பிரச்சினையும் அடுத்து முதலமைச்சருக்கு எதிரான உறுப்பினர் பரஞ்சோதியின் கேள்விகளும் எடுத்துக் கொள்ளப்பட்டன. இதனால் இது வரை காலமும் நிலவி வந்த பனிப்போர் நேற்றைய தினம் முட்டி மோதி வெடித்து களேபரமானது.

மாகாணசபை உறுப்பினர் சுகிர்தன், பட்டதாரிகளின் நியமனங்கள் குறித்து வடக்கு மாகாண முதலமைச்சர், ஜனாதிபதிக்கு அவசர விண்ணப்பக் கடிதம் ஒன்றினை அனுப்ப வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார்.

தொடர்ந்து அமைச்சர் டெனிஸ்வரன் இப்பிரச்சினை குறித்து சபையில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி ஜனாதிபதியிடம் கோரிக்கையினை முன்வைப்பது நல்லது எனக் கூறினார்.

இதன் பின்பு எழுந்த உறுப்பினர் சயந்தன், எப்போதும் பிரேரணைகளை நிறைவேற்றுவது நல்லதல்ல எனவும் மாகாணசபைக்குள் இருக்கின்ற 37 விடயங்களில் பட்டதாரிகளை உள்வாங்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

தனியே பிரேரணைகள் நிறைவேற்றுவதால் ஒன்றும் நடந்துவிடப்போவதில்லை. எமது பிரேரணைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதற்கு ஐ.நா அறிக்கை சிறந்த உதாரணமாகும். நாம் இன அழிப்பு எனக் கூறினோம். அவர்கள் அதனைப்பற்றி குறிப்பிடவில்லை எனக் கூறினார்.

இதன் பின்பு எழுந்த எதிர்க்கட்சித் தலைவர் தவராசா வெளிநாட்டு முதலீட்டாளர்களினைக் கொண்டு இங்கு வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்த முதலமைச்சர் முயற்சிக்க வேண்டும் எனவும் கூறினார்.

வடக்கு மாகாணசபையின் அமைச்சரவை திறம்பட இயங்குவதாகவும் வேலைவாய்ப்புக்களை வழங்கி வருவதாகவும் சுகாதார அமைச்சர் கூற மோதல் ஆரம்பமானது.

இதன்போது அமைச்சரவை தனது முடிவுகளினை வெளிப்படுத்தவில்லை எனவும், சர்வாதிகாரமாக செயற்படுகின்றது எனவும் அவைத் தலைவர் சிவஞானம் அமைச்சரவை மீது பகிரங்கமாக குற்றம் சாட்டினார்.

இதன் பின்னர் முதலமைச்சரின் விசேட உதவியாளர் குறித்து உறுப்பினர் பரஞ்சோதியால் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு இதுதொடர்பில் பொதுவெளியில் ஆராயப்படுவதனால் அவற்றின் கேள்விகளும் பதில்களும் இராஜதந்திர ரீதியில் பாதிப்பை ஏற்படுத்தலாம். ஆகையினால் இதற்குரிய பதில் உரிய நேரத்தில் கூறப்படும் என முதலமைச்சர் பதிலளித்தார்.

எனினும் தனக்கு பதில் வேண்டும் என விடாப்பிடியாக பரஞ்சோதி நிற்க, அதற்கு அவைத் தலைவரும் ஆதரவு வழங்கினார்.

எனினும் முதலமைச்சர் தனது நிலைப்பாட்டிலிருந்து மாற்றமடையாமல் பதில் கூற மறுத்து விட்டார்.

இதன்போது உறுப்பினர் சர்வேஸ்வரன், நான் அமைச்சர்களிடம் கேள்வி கேட்கும் போது முன் அனுமதி பெறவேண்டும். ஆனால் முதலமைச்சரிடம் கேள்வி கேட்கும் போது மட்டும் முன்அனுமதி பெறத் தேவையில்லை என்பது எந்த வகையில் நியாயம்? அவைத் தலைவர் தனது பதவிக்கு ஏற்றாப் போல் செயற்படவேண்டும் என ஒழுங்குப் பிரச்சினையை ஏற்படுத்தினார்.

இதன் பின்னர் அவைத்தலைவர் அமைதியாக மோதல் ஓரளவு தணிந்தது. எனினும் அமைச்சர் ஐங்கரநேசன், பரஞ்சோதியினைப் பார்த்து இவர் எவ்வித ஆதாரமுமின்றி யாரோ ஒருவரின் ஊதுகுழலாக செயற்படுகின்றார் என் குற்றஞ்சாட்ட மீண்டும் மோதல் வெடித்தது.

என்னை இவர் அவமதித்து விட்டார் என உரத்த குரலில் பரஞ்சோதி சத்தமிட இதற்கு விந்தனும் ஆதரவளித்தார். பின்பு மதிய நேரத்தை அண்மித்தும் மோதல்கள் தானாகவே தணிந்தது. (எ-4)

## யாழ்.செயலகம்...

இப்பேரணியை வடக்கு மாகாண கடற்தொழிலாளர் இணையம், யாழ்.மாவட்ட கிராமிய கடற்தொழில் அமைப்புக்களின் சம்மேளனம் மற்றும் யாழ்.மாவட்ட கடற்தொழில் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனம் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

இவ் அறவழிப் பேரணியில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளது. (எ-12)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.09.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.